ஆசிரியர்:
கா. சி. வேங்கடரமணி.

காரியாலயம்:
43, மஹாதானத்தெரு, மாயவரம்.

மாத வெளியீடு.

வருஷ சந்தா: உள்நாடு ரூ. 3. வெளிநாடு ரூ. 5.

மாலை 8	JULY 1942, சித்திரபானு ஆடி மீ	முத்து 1

பொருள் அடக்கம்.

			பக்கம்
1	போகிற போக்கில்		2
2	'ஐயர்வாள்'	ஸோது	5
3	விவசாய முன்னேற்றத்திற்கு ஓர் திட்டம்	'குஞ்சு'	6
4	வால்மீகியும் கம்பரும்	ஆர். கோவிந்தராஜன்	10
5	கர்மாட்டார்	பி. எஸ். வரதராஜஐயர்	13
6	மணல் மூடிய இடம்	ஸ்ரீ. ஸே.	15
7	வருஷப் பிறப்பு	'ஆனந்தர்'	17
8	லார்டு ருதர்போர்டு	ஆர். கே. விசுவநாதன்	24
9	ஹரிசரன்	சரத்சந்திரர்	27
10	ஆட்கொள்ளுவாயா?	'ராமன்'	30
11	இளைய தாரம்	எஸ். குஞ்சிதபாதம்	31
12	ஒரே மனம்	'விஜயன்'	37
13	இரவல் எதற்கு?	வி. ஸத்தியவதி	39
14	அரசியல் விசாரம்	ரா. சந்திரசூடன்	41
15	சிறுவர் பகுதி	"கா. சி. வே."—'கீரன்'	43
16	மதிப்புரை		47

"பாரதமணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

போகிற போக்கில்



ஒரு நண்பர் எழுதுகிறார், "போகிற போக்கி'லே அரசியல் விஷயத்தைப்பற்றி எழுதுவதற்கு உபயோகப்படுத்தினால் இந்த நெருக்கடியில் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்" என்று. நானும் இம்மாதிரி பல்தடவைகளில் எண்ணியது உண்டு. ஆனால் இந்த அடிமை நாட்டில் அரசியலைப்பற்றி செயலில்லாமல் எழுத்தால் எவ்வளவு அழகாய் எழுதியும் என்ன பிரயோஜனமென்று நான் நினைத்து அதைப்பற்றி எழுதாமல் விட்டுவிட்டதுண்டு. ஏனெனில் உண்மையான உணர்ச்சிகளைக் குறையன்னியில் சுயேச்சையாய் எடுத்துச் சொல்வது பல சமயங்களில் முடியாமல் இருக்கிறது. அப்படிச் சொன்னாலும் அவைகளைச் செயல் ரூபமாக நிறைவேற்ற முடியவில்லை.

பத்திரிகைகளில் அழகிய தலையங்கங்கள் எழுதுவதால் தலைவலிகூட விலகாது. ஒருவேளை வரலாம்—எழுதியவருக்கும், படிப்பவருக்கும். அரசியல் மேடையில் வெளியில் ஜோடித்து நடிப்பது ஒன்று. உள்ளே உண்மையில் நடப்பது மற்றொன்று. இதைச் சரிவர அறிந்து தைரியத்துடன் தலையங்கம் எழுதுபவர் சிலரே. உண்மையைத் தெரிந்துகொள்வதற்கு வேண்டிய வசதிகள் பலருக்குக் கிடையாது. ஆகையால் 'ராய்ட்டர்' தந்திகளையே நம்பிப்பல 'லீடர்'கள் எழுதப்படுகின்றன—தாய்ப்பாலுக்குப் பதிலாக கிளாக்ஸோ சாப்பிட்டு, கைக்குத்தல் புழுங்கல் அரிசிக்குப் பதிலாக மில் அரிசி சாப்பிட்டு வளருவது போல். அரசியலில் பலவித அந்தரங்க விஷயங்களையும் இயக்கங்களையும் நான் அறியாவிட்டாலும் இந்த மாஸம் என் நண்பர் சொல்லியபடி அரசியலைப்பற்றியே எழுதலாமென்று நினைக்கிறேன்.

* * * *

இந்திய அரசியலில் 1942ம் வருஷத்திய மந்திரம்—ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ். சர்ச்சில் தூண்டிலில் அகப்பட்ட மீன் இவர்தான்—ஜின்னா தூண்டிலில் அகப்பட்ட ராஜாஜிபோல. கிரிப்ஸ் பிரிட்டிஷ் மந்திரி சபையில் சேர்ந்ததற்கு முக்கிய காரணம் அவர் ரஷ்யாவை நேசநாடுகள் பக்கம் சேர்த்து ஜெர்மனியை எதிர்க்கும்படியாகச் செய்த கைங்கர்யத்திற்காக ஆங்கிலர்களின் நன்றிபாராட்டு. தவிர இந்தப் பிரசித்திபெற்ற 'கப்பூலிஸ்டு கிரிப்ஸ்'ஸை பிரிட்டிஷ் மந்திரிசபை தன் கையாளாகப் போட்டுக்கொண்டு இவரை இந்தியாவுக்குத் தூதாக அனுப்பியதே சர்ச்சிலின் 1942ம் வருஷத்திய முக்கியமான வெற்றியாகக் கூறலாம். இந்தத் தூதிலிருந்து பிரிட்டிஷ் மந்திரி சபையின் இந்தியாவைப் பற்றின அந்தரங்க எண்ணம் என்னவென்று ஊகித்துப் பார்ப்பவருக்கு நன்கு விளங்கும்.

பங்குனி மாதத்தில் புது டில்லியில் அரசியல் நீர் குமிழியிட்டு சுழன்று சுழன்று வட்டமிட்டது. அந்த சமயம் நான் புது டில்லியில் இருந்தேன். கிரிப்ஸ் கூட்டிய 'பிரஸ் கான்பரன்ஸ்'க்கு நானும் போயிருந்தேன். அவருக்குப் பல கேள்விகள் போட்டேன். எல்லாக் கேள்விகளுக்கும் அவர் வெகு சாமர்த்தியமான பதில் அளித்தார். கேட்கவேண்டுமா, உயர்தர வக்கீல் அல்லவா?

எப்பேர்ப்பட்டவர் ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ்? ஒரு பெரிய அரசியல் மாயாவி! எதையும் அறிவார். எதற்கும் ஒரு பதில் கையில் வைத்திருக்கிறார். வக்கீல் தொழிலில் சாமர்த்தியத்தைக் கொண்டே பேச்சழகைக் கொண்டே, பொய்க் கேஸைக் கூட ஜயித்து விடலாம். ஆனால் அரசியலில் அப்படி ஜயிப்பது கஷ்டம். ஒருவரில்லாவிட்டாலும் மற்றொருவர் கண்டுபிடித்து விடுவார்.

அவர் தூது வந்ததற்கு உண்மையான காரணம் இந்தியாவைப்பற்றி அமெரிக்கரின் அபிப்பிராயத்தை தங்கள் கைவசப் படுத்திக்கொள்வதுதான் முக்கியமான நோக்கம். அதற்குவேண்டிய வரையில் நன்றாய் நடித்தார். அவர் டில்லியில் வந்து இறங்குவதற்கு முன்பே, செய்திகளை மோப்பம் பிடிப்பதில் வேட்டை நாயாய் விளங்கும் நண்பர் ஒருவரை டில்லி ஸெகரடேரியட்டின் விசாலமான படிகளில் கண்டேன். "கிரிப்ஸ் வருகிறாரே காயா, பழமா?" என்று கேட்டேன். "காய்கூட முழுசாக இல்லை. புளிப்பு மாங்காய். அதையும் துண்டங்களாகப் போட்டுக்கொண்டு வந்திருக்கிறார். ஆனால் அந்தத் துண்டுகளை ஒன்று சேர்த்து, பேர்பெற்ற மந்திரவாதியாகையால் ஓர் பழம்போல் காட்டப்போகிறார். அதையும் நீ கண்டுபிடித்துக் 'காய்தான் பழமில்லை, புளிப்பு மாங்காய்' என்று சொன்னால் அதற்கும் தக்க மருந்து கையோடு கொண்டுவந்திருக்கிறார்—உயர்தர உப்பு." என்று அழகான புன்சிரிப்புடன் சொல்லி முடித்தார். நான் பிரமித்து நின்றேன். அதை நம்பவில்லை. 'துண்டுபோட்ட புளிப்பு மாங்காயையா பாகிஸ்தான்களையா—இவ்வளவு பெரியவர் இந்தியாவுக்கு நெருக்கடி நேரத்தில் ஆகாசக் கப்பலில் கொண்டுவருகிறார்!' என்று எண்ணினேன்.

இந்தச் சம்பவத்திற்கு ஐந்து நாள் கழித்து ஒரு நாள் சாயந்திரம் ஐந்து மணி சுமாருக்கு ஒரு நிருபர் கூட்டத்தைக்கூட்டி அதில் பிரிட்டிஷ் மந்திரி சபையின் 'டிராப்ட்டு டிக்ளரேஷனை' கம்பீரமான தொனியில் அமிர்தத்தைக் கொண்டுவந்து கொடுப்பவர்போல வாசித்தார். இவர்தானா 'காம்ரேட் கிரிப்ஸ்' என்று வியந்தேன். சர்ச்சிலின் வெற்றி உண்மையான வெற்றிதான். பிரதம மந்திரி பால்டுவின் நாள் முதற்கொண்டு பிரிட்டிஷ் மந்திரிசபை பிரிட்டிஷ் தொழிற்சாலைக்கு ஓர் முக்கியமான சாதகமாய்ப் போய்விட்டது. வேலியே பயிரை அழிக்க ஆரம்பித்து விட்டது என்று நான் கொண்ட எண்ணம் உண்மையென்று அன்றைய தினம் எனக்குத் தெளிவாயிற்று.

* * *

ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் சர்ச்சில் தூண்டிலில் அகப்பட்ட 1942ம் வருஷத்திய மீன் என்று சொன்னால், கிரிப்ஸ் தூண்டிலில் 1942ல் அகப்பட்ட மீன் நல்ல வேளை, இந்தியா அல்ல! ஆனால் எது என்று ஊகியுங்கள். ராஜாஜி என்று நான் நினைக்கிறேன். புளிப்பு மாங்காயை உப்புப் போட்டுச்சாப்பிட்டால் ஒட்டு மாம்பழத்தைவிட ருசியாக இருக்குமென்று ராஜாஜி பிரசாரம் செய்வதற்கு கிரிப்ஸ்தான் மூல காரணம்; சண்டி ஹோமம் செய்த மந்திரபலத்தைப் பெற்ற மந்திரவாதியைப்போன்ற மாயாவி ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ். நமது அரசியல் நிலைமையில் அவரால் அவ்வளவு குழப்பம் ஏற்பட்டுவிட்டது. அதற்கு இரையாக இன்னும் பெரிய தலைவர்கள் அகப்பட்டுக்கொள்ளாமலிருக்க வேண்டுமே என்று பிரார்த்தனை செய்துகொண்டிருக்கிறேன். தெய்வானுகூலமாய் பண்டிட் ஜவஹர்லால் நேரு தப்பினார்!

* * *

ராஜாஜியின் புது இயக்கத்துக்கு முக்கிய காரணம், தாம் இருபது வருஷம் பாடுபட்டும் நமது அரசியலில் ஒருவித பலனும் ஏற்படவில்லையே என்ற ஏமாற்றமே. ஒரு தேசத்தின் சரித்திரத்தில் இருபது வருஷகாலம், காலமாகுமா? ராஜாஜியின் புதுப் பிரசாரத்தின் மூலம்

நமது நாட்டிற்கு ஒருநாளும் விடுதலை கிடைக்காது. தேசீய சர்க்கார்கூடக் கிடைக்காது. அண்ணன் தம்பிச்சண்டைகளுக்குப்புதிதாய் அகம் புகுந்த நாட்டுப்பெண் எப்படிக்காரணமோ, அப்படியே தான் ஒரு தேசத்தின் வகுப்பு வாதங்களுக்கு முக்கிய காரணம் அன்னியரின் ஆட்சி.

'கலியாணம் ஆனால் பைத்தியம் தெளியும். பைத்தியம் தெளிந்தால் கலியாணமாகும்' என்ற பழமொழியின் உட்கருத்து என்னவென்றால், இவ்விரண்டுக்குள் கலியாணமே முன்னால் ஆகக்கூடியது. ஏனென்றால் பைத்தியங்களுக்குக் கூட பெண்கள் கிடைக்கும். பிறகு தான் பைத்தியம் தெளியும், பிரத்யக்ஷம். பைத்தியம் தெளிந்துதான் கலியாணம் என்பது கிடையாது. ஆகையால் வகுப்பு வாதங்கள் ஒழிய வேண்டுமென்றால் விடுதலைதான் முதலில் நமக்குக் கிடைக்க வேண்டும். அதை எவ்விதத்திலும் நாம் பிரயாசைப்பட்டு அடைய வேண்டும். அதைப்பெற நாம் இந்த எழுலட்சம் கிராமங்களையும் ஒன்றுசேர்த்துத் தொண்டு புரிந்து அரசியலிலும், பொருளாதாரத் துறையிலும் முன்னேற்ற மடையும்படியான வழியைத்தேடவேண்டும். செயல் தான் பிரதானம். தலையங்கங்களும் வேண்டாம். தலைவர்களின் பிரசாரமும் வேண்டாம். அவர்களின் திட்டமும், தொண்டர்களின் உண்மையான தொண்டும் தான் வேண்டும்.

சேற்றிலிறங்கிய வண்டியைத் தள்ளிவிட தாம் இறங்கினதாக ராஜாஜி சொல்கிறார். வண்டிக்காரனாக இருக்கும் தலைவர் தலைக்கயிற்றை விட்டு விட்டுத் தொடைச்சேற்றில் தாமே இறங்கினால் இவர் எவ்வளவு தூரம் வண்டியைத் தள்ள முடியும் என்று நீங்களே ஊகிக்கலாம். அதுவும் அரசியல் சேற்றில்!

மஞ்சள் காகிதத்தாலும், "எது எடுத்தாலும் 1½ அணா" கத்தரிக்கோலாலும் தொடுக்கப்பட்ட பாகிஸ்தான் பூமாலையை மிக்க அரசியல் வாசனை தெரிந்த ரஸிகரான ஜின்னாவா, தென்னிந்திய தலைவர் ராஜாஜி கையிலிருந்து தம் கழுத்திலேயே தலைகுனிந்து போட்டுக்கொள்ளப் போகிறார்? ஏன் இந்த வீண் பிரயத்தனம்—ஜின்னாவைத் துரத்தி ஓடுவது!

அண்ணன் தம்பிச் சண்டையைப் போல் காலஹரணத்தால் தான் இந்த ஹிந்து முஸ்லீம் வாதம் தீரும். இப்பொழுது பிடித்திருக்கும் தோல்வி ஏக்கம் தீர்ந்தவுடன் புத்திகூர்மையுள்ள ராஜாஜியே இதை நன்கு அறிவார். பதவியால் நமது பாரதநாட்டுக்கு மோட்சம் கிடையாது. தன்னலமற்ற தொண்டால்தான் கிடைக்கும். எப்படி ஆற்றில் வெள்ளம் வரவேண்டுமென்றால் மலையில் மழை பெய்ய வேண்டுமோ, அப்படியே நாமும் இந்த மாதிரித் தொண்டை கிராமத்தில் செய்ய ஆரம்பித்துவிட்டால் ஆற்றில் வெள்ளம் நிச்சயம் வரும் என்பதற்கு ஐயமுண்டோ!

மணி.

‘ஐயர்வாள்’

ஜோதி.

தமிழ் இலக்கிய உலகில் யாரும் எதிர் பாராதவாறு ஆண்டவர் ஒரு குண்டைத் தூக்கிப்போட்டார். மகாமகோபாத்தியாய டாக்டர் வே. சாமிநாதையரவர்களை நம்மிடமிருந்து அபகரித்துச் சென்றுவிட்டார்!

டாக்டர் ஐயரவர்களின் மறைவுச் செய்தியைக் கேள்விப்பட்டதுமுதல் எனக்கு ஒரே ஒரு சம்பவம் மட்டும் எப்போதும் மனத்திரையில் காட்சியளித்துக்கொண்டேயிருக்கிறது. ஐயரவர்கள் பேசிய சில ஆணித்தரமான வார்த்தைகள் காதில் ஒலித்த வண்ணமிருக்கின்றன.

ஸ்ரீமத் ஐயரவர்களின் ஜன்மதினக் கொண்டாட்டம் ஒன்று நடந்தது. பல பெரிய ‘புள்ளி’கள் விஜயம்செய்து பேசினார்கள். எல்லோரும் ஒரேவாக்காக அவர் மேலும் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்று இறைவனை வேண்டிக்கொண்டார்கள். அப்போது ஐயரவர்கள் அளித்த பதில் இதுதான்: “ஆமாம், எல்லாம் சரிதான். சிரஞ்சீவியாகவே இருந்துவிடுகிறேன். ஆட்சேபணை இல்லை. ஆனால் நான் எழுதிய எழுத்துக்களை யார் வாங்குகிறீர்கள்? ஆதரிக்கிறீர்கள்? யார் படிக்கிறீர்கள்? நான் எப்படி எழுதுவது, புஸ்தகம் போடுவது, பணமில்லாமல்? என் நூல்களை வாங்குவதன் மூலம் பணஉதவி என்றபொருளின்றி இருக்கிறதே எனக்குக் கிடைக்கும் வாழ்த்து!” இதேவார்த்தைகளில்லாவிட்டாலும், அவர்கள் பேசியதன் கருத்து இதுதான். இதன்மூலம் மிகவும் நயமாகத் தமிழ்நாட்டின் கவனக்குறைவைச் சுட்டிக்காட்டினார்கள்.

தமிழ்நாடு தன் மறுமலர்ச்சியின் தலைமகனை பாரதியைப் பட்டினிபோட்டது. மற்றொரு மகனை டாக்டர் ஐயரவர்களைப் போதிய அளவு ஆதரிக்காமல் வெறும் பேச்சளவில் புகழ்ந்துவிட்டது. அடிக்கடி ஐயரவர்கள் தம் மனவேதனையைச் சொல்லமாட்டாமல் சொல்லிவந்தார்கள். அவர்களைப்போன்ற ஆராய்ச்சியாளர்களுக்கு இந்தியாவைத் தவிர வேறு எந்தத் தேசத்திலும் இவ்வளவு ஆதரவற்ற நிலை ஏற்பட்டிராது.

டாக்டர் அவர்களுடைய அருமையை நாம் இன்றும் முற்றிலும் அறிந்துவிட்டதாகக் கருதமுடியாது. போகப் போகத்தான் அவர்கள் தமிழுக்குச் செய்திருக்கும் தொண்டினை உணருவோம்.

பழைய தமிழ் நூல்களை அவர்கள் நமக்குப் பதிப்பித்து அருளியிருப்பது ஒன்றே பேருதவி. ஆனால் அவர்கள் அத்துடன் நிற்கவில்லை. வெறும் பண்டிதராகவே இருந்து திருப்தியடைந்துவிடவில்லை. பண்டிதர்களுக்குக் கைவராத ஒரு இனிய தெளிவான நடையில் பல (உண்மைக்) கதைகளும், விவரங்களும் எழுதிப் புதுத் தமிழுக்கும் பழைய தமிழுக்கும் இணைப்பாக விளங்கி வந்தார்கள். அகஸ்தியருக்கு ஒப்பிடக்கூடியவாறு தமிழுக்குத் தொண்டாற்றிய மகான் என்று ஒருசமயம் ஸ்ரீ.டி.கே.சி. சொன்னது முக்காலும் உண்மையாகும்.

ஐயரவர்கள் உயிர்வாழ்ந்த காலத்தில் போதிய அளவு ஆதரிக்காத பெரும் பாபம் தமிழ் நாட்டார் தலையில் சுமையாக விழுந்துவிட்டது. அதை நிவர்த்தி செய்துகொள்ள ஒரே வழிதான் உண்டு. அவர்கள் பதிப்பித்த நூல்களை வாங்கி, அவற்றைப்படித்து மகிழ்ந்தோமானால், ஸ்ரீமத் ஐயரவர்களுடைய ஆத்மா சாந்தியடையும். அவர்கள் ஆத்மா சாந்தியடைந்தால் தமிழ்நாட்டின் பாபம் தொலையும். அதற்குத் தமிழர் முன்வருவார்களென்று நம்புகிறேன்.

விவசாய முன்னேற்றத்திற்கு ஓர் திட்டம்

‘குஞ்சு’

மொழி பெயர்த்தவர்: ஸ்ரீ சுப்பிரமணியம்

‘உணவுப்பொருளை அதிகம் பயிர் செய்’ என்ற இயக்கத்தில் நான் அதிக ஊக்கம் செலுத்துகிறேன். 1938-ம் ஆண்டிலேயே இம்மாதிரியான இயக்கத்தின் அவசியத்தை நான் பொது மக்களின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். அப்பொழுது நான் இந்த ஜில்லாவின் விவசாயத்தொழிலின் ‘திட்டமான அபிவிர்த்தி Planned improvement)’யின் முக்கியத்தைப் பற்றிச் சொன்னேன். ஆனால் நம் பாரதபூமியின் கரைமீது யுத்த அலை வீசுமித் தருணத்தில் இது பன்மடங்கு அவசியமாகிவிட்டது. நம்நாட்டு உற்பத்தியிலும் அதிகமான தேவையை இதுவரை சமாளித்துவந்த சயாம் (Siam) பர்மா முதலான இடங்களிலிருந்து வந்த சப்ளை முழுவதும் நின்றது ஒருபுறம். மேலும் யுத்தபீதியின் காரணமாய் வீடுவாசல் துறந்து நாடுநகரங்கள் விட்டுவந்த மக்களின் தொகை அதிகமாவதுமன்றி ஓய்வு ஒழிவின்றி சதா விருத்தியடைந்துவரும் சேனைகளின் தேவையும் அதிகரிக்கிறது. யுத்த தளவாட அபிவிர்த்தித் திட்டத்தில் மிகவும் பரிசயமுள்ளவர்களாக நாம் இருந்தபோதிலும் யுத்த சாதனங்களில் மிகமிக அவசியமான ஆகாரப்பொருள் அபிவிர்த்தியில் நாம் இன்னும் திட்டம் வகுக்க சிந்தனை செய்யவில்லை. குறைந்தபக்ஷம் இந்த ஜில்லாவிலாவது, பரீக்ஷார்த்தமாகவேனும் இந்த **‘உணவுப்பொருள் அபிவிர்த்தி செய்’** இயக்கத்தை ஆரம்பிக்கவேண்டிய அளவுக்கு நெருக்கடியான சமயம் வந்துவிட்டது என்று நான் எண்ணுகிறேன்.

2. சர்க்கார் பங்களாக்களில் உள்ள சொல்ப விஸ்தீர்ணமுள்ள தோட்டங்களையும் இங்குமங்குமாயுள்ள புறம்போக்கு நிலங்களையும் உணவுப்பொருளைப் பயிரிடச் சொல்வதால்மட்டும் போதாது. இந்த ஜில்லாவில் உள்ள சர்க்காரின்—புறம்போக்கு நிலங்கள் யாவற்றையும் சாகுபடி செய்தால்கூட உணவுப்பொருள் ஒரு சதவிதத்திற்குமேல் அதிகமாகாது என்று நான் எண்ணுகிறேன். எல்லா மிராசுதாரகளும் குடியானவர்களும் மிக்கப்பிரயத்தனப்பட்டு விவசாய முறையைச் சீர்திருத்தி தங்கள் நிலத்தில் இருந்து மிகவும் அதிகப்படியான பலனை அடையச்செய்வதுதான் **‘உணவுப் பொருள் அபிவிர்த்தி செய்’** என்ற இயக்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

3. சமாதானகால விவசாய முறையினின்றும், இப்பொழுது பயிர்த்தொழிலில் குடிமக்களின் ஊக்கம் அதிகம் செலவழிக்கப் பிரசாரம் தேவை. தற்சமயம் விவசாய இலாக்கா நடத்திவரும்—அதுவும் காலப் பிற்பாடாக நடத்திவரும்—பிரசார முறை பயனில்லை. இம்மாதிரியான பிரசாரம் சாதாரண ஆலோசனை சொல்லும் தன்மையாயுள்ளது. இதைக் கவனித்து அதன்படி நடவடிக்கையில் பரிசீலனை செய்தவர்கள் இதனால் லாபமடைந்திருக்கிறார்கள். அவர்கள் கற்று அறிந்த மத்யதரவகுப்பினராவர். அவர்களுக்குக்கீழ் தனிமையாய்த் தங்கள் இஷ்டப்போல் சாதாரணமுறையில் பயிர்செய்து போதுமென்ற மனத்தினராய் எண்ணற்ற குடிமக்கள் இருக்கின்றனர்.

4. இஃதொருபுறமிருக்க சிறிதேனும் சிந்தனையின்றி ஏராளமான நிலங்கள் பாழ்பட்டாலும் தங்கள் சுகபோகங்களுக்கு யாதொரு குறைவுமடையாத மாபெரும் நிலச்சுவான்தார்கள் இருக்கிறார்கள். பெரிய மடாலயங்களையும் தேவாலயங்களையும் கண்காணிக்கும்

பெரிய பெரிய நிலச்சுவான்தார்கள் இவ்வினத்தில் சிலராக விருக்கின்றனர். செழிப்பும் நல்ல வசதியும் பெற்ற இந் நிலங்கள் அதிக பலன்தரக்கூடியதாய் இருந்தும் கவனக்குறைவால் சொல்ப பயனையே யீட்டுகிறது. இருபோகத் திற்குகந்த நிலங்கள் ஒரு போகமாகப் பயிரிடப்படுகின்றன. இம்மாதிரியான பெரிய ஸ்தாபனங்களுக்கு நவீன அபி விருத்தி முறையை கையாளுவதற்கு வசதிகள் இல்லாமல் இல்லை. உண்மை என்னவென்றால் அவர்களுக்கு—நல்லதோ, கெட்டதோ—தங்கள் சாகுபடி விஷயத்தில் பிறர் சிறிதும் தலையிட பாத்யதை யற்றவர்கள் என்று எண்ணும் தன்மைதான். சர்க்காருக்கு சாகுபடி நிலங்களைப்பற்றிய கவனம் அதிகம் உண்டு, தேசமக்களுக்குத் தேவையான அளவு உணவுப்பொருளை விருத்திசெய்யவேண்டும் என்று நிலச்சுவான்கள் உணரும்படி செய்யவேண்டும். இதனால் சர்க்கார், நிலச்சுவான்கள் பயமுறுத்தப்பட்டு நிலங்களைப் பறிமுதல்செய்வதற்கானதிட்டம் என்று அவர்கள் நினைக்கும்படி நான் செய்யச் சொல்லவில்லை. இந்த மிகவும் நெருக்கடியான சமயத்தில் மக்களின் ஜீவாதாரமான தொழிலான விவசாயத்தில் நிலச்சுவான்கள் விருத்திசெய்யாமல் வாளாயிருப்பதை சர்க்கார் பார்த்துக்கொண்டு சும்மா யிருக்க முடியாது என்று எச்சரிக்கவேண்டும். அபேதவாதத்திலின்றும் வெகுதூரமுள்ள ஐக்யதேச அமெரிக்காகூட இன்று கைத்தொழிலை மிகவும் ஒழுங்காகச் செவ்வென நடத்தும் பொருட்டு அநேக கைத்தொழிற்சாலைகளை முழுவதுமே தன் கண்காணிப்பிற் கொண்டுவர சிறிதும் தவக்கமின்றி முன்வந்திருக்கிறது. அம்மாதிரியான முறையை நாம் இங்கு கையாளவேண்டும் என்று கூறவில்லை. ஜில்லா அதிகாரி, நிலச்சுவான்களின் கூட்டமொன்றை நிறுவி "தங்கள் நிலங்களை நன்முறையில் செவ்வனே விருத்திசெய்ய வேண்டும் என்றும் அன்றேல் சர்க்கார், ஒழுங்குபடுத்தும் பொருட்டு கட்டாயப்படுத்தும் பலவழிகளைக்கையாளவேண்டிவரும்" என்றும் அவர்களுக்கு அறிவுறித்தினுல் போதுமானது. மேலும் இந்த தான்யங்களைத் தான் இந்த யிந்த நிலங்களில் பயிரிட வேண்டும்; இந்த நிலங்களில் இந்த பாகந்தான் பசுந்தாள் எரு விதைகள் பயிரிடவேண்டும்; சாகுபடிசெய்வது விவசாய இலாக்காவின் மேம்பார்வையில்தான் நடைபெறவேண்டும்; தரிசாகப்போட்டு பாழ்படுத்தியதற்காக இவ்வளவு அபராதம்; என்று அறிவுறுத்திசெய்வதெல்லாம் சுலப சாத்தியமான வழிகளாகும்.

5. மேற்கூறிய பலவழிகளைக் கையாண்டு பிரசாரம் செய்யும் உத்தியோகஸ்தர்கள் பாமர மக்களின் மனதில் படுமாறு நிலங்களை மேன்மேலும் சீர்திருத்தி பயிரிடுவதால் அவர்களுக்கு லாபம் வருவதோடன்றி மேலும் அவ்விதம் செய்வதால் சமூகத்திற்கு அரும் பெரும் சேவையும் செய்தவர்கள் ஆவார்கள் என்று அறிவுறுத்துவார்கள் என நம்புகிறேன். நான் எடுத்துக்காட்டும் இவ்வியக்கத்திற்கு சர்க்காருடன் தாங்களும் ஒத்துழைப்பதாக நன்கு விளக்கமுற்ற மிராசுதார்கள் சிலர் இந்த ஜில்லாவில் உறுதிகூறி யிருக்கிறார்கள்.

6. பிரசார வேலையானது போதனை முறைத்தன்மையாய் தழைஎரு, நவீன தான்யங்கள் அபிவிருத்தியடைந்த பக்குவமான விதை ரசாயன எருக்களின் உபயோகம் இவைகளை அடிப்படையாய் கொண்டதாக இருக்கவேண்டும். விவசாய இலாக்கா, கவனம் செலுத்தும் மிராசுதார்களுக்கு டேஞ்சா பில்லபேஸரா இவைபோன்ற பசுந்தழை எரு தான்யங்களின் பலனை செவ்வனே எடுத்துக்காட்டி நஞ்சை நிலங்களுக்கு இதை உபயோகிப்பதால் சாகுபடியில் 25 சதவிகம் அதிக பலனைப்பெறலாம் என்று நன்கு நிரூபித்திருக்கிறது. ஆனால் இதன்படி நடைமுறைக்கு வந்திருப்பவர்கள் ஒருசிலரே. இதுபோதுமான பிரசாரமின்மையே காரணம். மேலும்

கற்றறியாத பாமரமக்கள் பலர் விவசாய இலாக்காவால் போதிக்கப்படும் முறை தங்கள் இயல்புக்கு ஒவ்வாத அதிக செலவுள்ள ஆடம்பரமுறை என்று தங்களிடையே கொண்டுள்ள அபிப்ராயம் என்று இது தருணம் ஞாபகப் படுத்தவேண்டி யிருக்கிறது. கும்பகோணம் சீயாழி தாலுக்காக்களில் மிகவும் நல்ல பலனை டேய்ஞ்சா, மில்லபேஸரா எருதான்யங்கள் தந்திருப்பது எனக்கு ஞாபகம் வருகிறது. பசுந்தழை எருவுடன் ஓரளவு ரசாயன எரு (Bone-meal) க்கலந்து உபயோகிப்பதால் சுமார் இரண்டு பங்கு மகசூல் ஆகிறது என்று அதை உபயோகித்தவர்கள் கூறுகிறார்கள். விவசாய இலாகாவிடமிருந்து வரும் ஆலோசனையைக் காட்டிலும் சாதாரண பண்ணைக்காரர்களின் ஆலோசனையும் சேவையும் பிரசாரத்திற்கு அதிக பலனைத்தரும். கொஞ்சம் பொருளாதாரத் துறையினின்று இப்பால் கவனித்து மிகவும் அதிகபலனை எதிர்பார்க்க வேண்டுமானால் மன்னார்குடி, நாகப்பட்டினம், மற்றுபல இடங்களிலிருந்து குடிமக்களை நேரிலேயே ஆடுதுறை, பட்டுக்கோட்டை முதலிய விவசாய போதனை முறைசாலைகளுக்கு அழைத்துச் சென்றும், மற்றுமுள்ள தனிப்பட்ட பண்ணைகளில் நடக்கும் சோதனை முறைகளைக் காட்டியும் அதன் மூலம் நல்ல முறையைப் பின்பற்றச் செய்யலாம்.

7. நான் எதிர்பார்க்குமளவு பிரசாரம் பலனுள்ளதாக இருக்குமானால் பசுந்தழை எருதான்யம், நன்றாய்முற்றிய பக்குவமான நெல், ரசாயன எரு (Bone-Meal), நல்ல உழவுகாளை, மேலும் மற்ற விவசாயக் கருவிகள் இவைகள் எல்லாம் அதிக அளவு தேவை ஏற்படும். இந்த நிலையில் கூட்டுறவு மனப்பான்மை நம்மக்களிடையே வேரூன்றும்; இத்தருணத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் சர்க்காரின் உதவியும் வேண்டியிருக்கும். சர்க்காரும் அவசியம் உதவ வேண்டும். கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களுக்குத் தேவையான விதை, எரு முதலானவைகளை அதிகமாய் வாங்கி அங்கத்தினர்களுக்கு உதவி, அறுவடை சமயத்தில் புதிய விதையாகவோ அல்லது பணமாகவோ திருப்பப் பெறலாம். ஷை சங்கம், அங்கத்தினரிடமிருந்து விதைகளைச் சேமித்து இந்த ஜில்லாவில் உள்ள மற்ற சகோதரச்சங்கங்களுக்கு சப்ளை செய்யமுடியும். இந்த சங்கம் சீர்திருத்தப்பட்ட நல்ல நவீன கலப்பைகளை வாங்கியும் டேய்ஞ்சா செடிகளைப் பயிரிடுவதற்கு அங்கத்தினர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கவும் முடியும். நன்றாக உழைக்கக் கூடிய உழவுகாளை, தீவனம் இவைகளை வாங்கி அங்கத்தினர்களுக்கு முன்னதாகவே கொடுத்துதவி சர்க்கார் பணம் சரியான முறையில் செலவழிக்கப்படுகிறதா என்று கவனிப்பதைக்காட்டிலும் மிக அதிகமான உதவிசெய்ய முடியும். சுருங்கக் கூறுங்கால் **கூட்டுறவுச் சங்கங்களின்றி** நல்ல சாகுபடி முறையைக் கொண்டுவர வேறு சாதனங்கள் கிடையா. 'உணவுப்பொருள் அதிகம் பயிர்செய்' பிரசாரத்துடன் கூடவே கூட்டுறவுசங்கங்களின் அவசியத்தின் பிரசாரமும் நடக்கும்.

8. கூட்டுறவுச் சங்கங்களில்லாத நிலையில் பசுந்தாள், எருவிதை, பக்குவமான நெல்விதை இவைகளை விநியோகிப்பதற்கும் பின்பு சேமிப்பதற்கும் கிராம அதிகாரிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். உழவுகாளை, விதைகள் இவைகள் வாங்க எங்கெங்கு பொருள் உதவி அவசியமோ அங்கு அங்கு தாக்கவிக்கடன் (Takkavi Loan) கொடுத்து அது சரியான காரியத்திற்குச் செலவழிக்கப்படுகிறதா என்று கவனிக்க வேண்டும். ஆனால் இம்முறை புதியதல்ல சர்வசாதாரணமாய்க் கையாண்டுவந்ததே. ஆனால் அப்பொழுது பலன்வேறு. மேலும் குடியானவன் நிலத்தைப் பண்படுத்தி அபிவிருத்தி செய்ய மனமுள்ளவனானால் தாக்கவிக்கடன் பெறுவது சுலபம் என்று சொல்லுவது போதிய தல்ல. உண்மைப் பலனை உணராத குடியானவர்களுக்கு **தாக்கவிக் கடனால்**

நிலத்தைச் சீர்படுத்தலாம் என்ற சுயமான எண்ணம் ஏற்படாது; அப்படி தாக்கவிக்கடன் கேட்க விரும்புவானேயானாலும், வேறுசில சொந்த உபயோகத்தின் பொருட்டாகவே யிருக்கும். அர்த்த புஷ்டியுடன் உண்மையிலேயே உணவுப்பொருள் அபிவிருத்தி அவசியமானல் கிராமங்கள் தோறும் பராமரித்துப் பரிசிலனை செய்யவும் குடிமக்களுடன் நேர் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளவும் அதனூடே சீர்திருத்தப்பட்ட நன்முறையை நடைமுறையில் கொண்டுவரவும் அதற்கான ஆலோசனை சொல்லவும் அநேக அதிகாரிகள் (Development Officers) தேவையாகும். மேலும் இவ்வதிகாரிகள் பொருளாதாரத்துறையில் உதவுங்கால் சரிவர அப்பணம் செலவு செய்யப் படுகிறதா என்றும் கவனிக்க வேண்டும்.

9. இது விஷயமாய் மற்றும் அநேக காரியங்கள் நம்கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும். அவைகளைத் தீர்மானம் செய்வதற்கு முன்பு நன்கு பரிசிலனை செய்யவும்வேண்டும்:—

1. புன்செய், புறம்போக்கு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவரும் படியான திட்டம்.

2. வெவ்வேறுவகை தான்யங்கள் மீது சுமத்தப்படும் ஒரேவிதமான தண்ணீர் தீர்வையும், அதனால் காய்கறிவகைகள் பயிரிடுவதில் ஏற்படும் சிக்கல்களையும் புனராலோசனை செய்தல்.

3. இருபோக நிலமாகச் சாகுபடி செய்து விருத்திசெய்யுங்கால், பஸலி ஜாஸ்தியில் குறைக்கவழியுண்டா (கம்மிசெய்ய முடியுமா) என்று கவனித்தல்.

ஒரு விஷயம்!

நாம் எவ்வளவோ விதங்களில் பணத்தைச் செலவு செய்கிறோம். ஆனால் மிகவும் உபயோகமுள்ள வழியில் செலவிடுவதும் அவசியமல்லவா?

உங்களுக்குச் சந்தோஷத்தையும் உங்கள் குழந்தைகளுக்கு அறிவையும் கொடுக்கக்கூடிய வழியில் நீங்கள் ஏன் செலவழிக்கக்கூடாது?

ஆம்—'பாரதமணி'க்கு ஒருவருஷ சந்தாவைக் கட்டிவிடுங்கள்.

அதிகமில்லை, மூன்றே ரூபாய்தான் வருஷத்திற்கு!

வால்மீகியும் கம்பரும்

ஸ்ரீ ஆர். கோவிந்தராஜன்

நடுநிலையில் நின்று விருப்புவெறுப்பில்லாது துருவி ஆராய்வதுதான் விமர்சகனுக்கழகு என்ற முறைசாற்றி வால்மீகியும் கம்பரும் என்ற தலைப்புக்கொண்டு இருகவிகளையும் ஒப்புநோக்கி ஆராயப் புகுந்து பாரதமணியில் ஸ்ரீ தேசிகனவர்கள் எழுதியுள்ள விமர்சனம் கண்டு வியப்பும் விசனமும் எய்தினேன்.

கம்பர் தன்னூலில் மாறுதல்களை நுழைத்திருக்கிறார் என்றும், தன் மனோதர்மத்திற்கேற்க புதிய அமைப்புகளைக் காட்ட முயல்கிறார் என்றும் ஸ்ரீ தேசிகனவர்கள் சொல்வதைப் பார்க்க, அவர் கம்பர்பால் கண்ட குறை கம்பர் முதல் நூலை முற்றிலும் பின்பற்றாது பற்பலவிடங்களில் மாறுதலமைத்திருப்பது பற்றியது எனப் புலப்படுகிறது. கம்பர் இயற்றியது வான்மீகத்தின் மொழிபெயர்ப்பல்ல, ஆனால் அதைத் தழுவியதோர் தனிப்பெரும் காவியமென்பதை நோக்க, மேற்கண்ட குறைகூற்றிற்கு இடமில்லையென்பது விளங்கும். முதல் நூலைவிட வழிநூல் சிற்சில பகுதிகளில் அமைப்பு அழகிலும் அர்த்த புஷ்டியிலும் சீர்பெற்று இலங்குகிறதென்றும், வழி நூலில் கூட்டிக்குறைத்து மாற்றியுள்ள பகுதிகள் முதல் நூலின் சிறப்பைப் பொலிவுறுத்துகின்றன எனவும், ஆயினும் கம்பரின் கவிநயமும் காவிய லக்ஷணமும் முதல்நூலாய வான்மீகம் என்ற தடாகத்தில் வேரூன்றி வளர்ந்து மலர்ந்த தாமரைகளே யெனும் காரணத்தால், முதல் நூலை எழிலுறச் செய்வனவேயன்றி இழிவுறச் செய்வன அல்ல என்றும், இருநூலும் அறப்பயின்ற பெரியார் பலர் உதாரணங்கள் வாயிலாக எடுத்துக்காட்டியிருப்பதை கேட்டும் படித்துமிருக்கிறோம். ஆயின் வான்மீகம் நுகராது, அதன்மேல் துவேஷப்பான்மை மட்டும் பூண்ட சிலர் கம்பருக்கும் தமிழ்மொழிக்கும் பணி செய்வதென நினைத்து வான்மீகத்தை விழுத்தி கம்பராமாயணத்தை வாழ்த்தி எழுதப்புகுந்திருப்பதுபற்றி, வான்மீகமும் பயின்ற ஸ்ரீ தேசிகன் போன்றார் மனம் வேறுபடுவது ஓரளவு நியாயமெனினும், குற்றத்தை குற்றம்கொண்டு கண்டிப்பதென்ற இழுக்குக்கு இலக்காவது ஸ்ரீ தேசிகன் போன்ற அறிவாளர்க்கு அழகாகாது. வான்மீகத்தின் கதைப் போக்கையும், கதாபாத்திரங்களின் மனோதத்துவத்தையும் சிற்சில இடங்களில் கம்பர் மாற்றியமைத்திருப்பதிலிருந்து, வான்மீகத்தில் கம்பர் குறை கண்டாரென்றாவது, அதன்பயனாக அவர் கண்ட குறையைத் திருத்தி அமைக்க முற்பட்டாரென்றாவது கொள்வதைவிட நாம் கம்பருக்குச் செய்யும் கொடுமை வேறிருக்கக்கூடியதில்லை. காலவேறுபாட்டிற்கேற்கவும், வான்மீகத்தில் ஊறிச்சிறந்த கம்பரின் கற்பனைவல்லமையின் இயற்கைப்போக்கைத் தழுவியும், தீர்க்கதரிசிகளான ஆழ்வார்கள் உலகத்தோர்க்கறிவித்துள்ள உண்மைகளை மனதிற்கொண்டும், கம்பர் தம் நூலில் சில மாறுதல்கள் சிருஷ்டித்திருக்கிறார்.

இனி ஸ்ரீதேசிகனின் குறைச்சாற்றை ஆராய்வோர். தசரதர் ராமனது கல்யாணம் குறித்து ஆழ்ந்தயோசனையில் இருந்த சமயம் கௌசிகர் வந்தாரென்றும், வருமுன் வாயிற் காப்பாளர் மூலம் சக்ரவர்த்திக்குத் தன்வருகையை அறிவித்த பின்னர் தசரதர் முதலாயோர் எழுந்துவந்து முனிவரை வழிபட்டு அழைத்துப்போயினரென்றும் வான்மீகத்திலிருப்பதைக் கம்பர் தழுவாது விடுத்திருப்பதை ஸ்ரீதேசிகன் சுட்டிக் காட்டி, கம்பருக்கு இத்தகைய ருசிகரமான சிறிய அம்சங்களைக் கூர்ந்து நோக்கும் சைத்ரிகத்தன்மையில்லையென்று இழுக்குக்கூறுகிறார். கதையில் தோன்றும் காலையிலேயே கௌசிகரைக் கம்பன் 'துனியுறு' முனிவனெனச் சித்திரித்திருக்கிறார். முன்னர், கௌசிகன்

மன்னுயிர் அடங்கலையும் உலகத்தையும் வேறாக அமைத்து தேவரோடு நான்முகனையும் சேர்த்துப்படைக்கத் தொடங்கினான் என்பதையும் கம்பர் நமக்கு நினைவுறுத்துகிறார். இத்தகைய குணம் படைத்த முனி அரண்மனை வாயிலில் நின்று காப்பாளர் மூலம் தன் வருகையை அரசனுக்குக் தெரிவித்தாரென்பது அசம்பாவிதம் என்று, கம்பர் நினைத்திருக்கலாம். தவிர்த்து, கம்பர் கௌசிகரின் வரவேற்பைச் சித்தரிக்கும், மறைபொருளழகில் சிறந்துவிளங்கும் பின்சொல்லும் செய்யுளை நோக்க, வருகையையறிவிக்கும் அவசியம் ஏற்படும் முன்னரே, அது தசரதருக்குத் தெரிந்துவிட்டது என்ற பொருளைப் புலப்படுத்தக் கம்பர் எண்ணினார் எனத்தோன்றுகிறது.

“வந்தமுனி எய்துதலும் மார்பிலணியாரம்
அந்தரதலத்து இரவி அஞ்ச ஒளிவிஞ்ச
கந்தமலரின் கடவுள் தன் வரவு காணும்
இந்திரன் எனக்கடிது எழுந்து அடிபணிந்தான்”

பொருள்:— தவத்தின் ஒளி முகத்தில் வீச வந்த முனியின் முகஜ்வாலை தசரதன் மார்பிலணிந்த ஹாரமணிகளில் எதிரொளித்து எழுந்த ஜோதியானது வானத்தில் உலாவும் சூரியனையும் அஞ்சச் செய்தது. தன் ஆயிரம் கண்களிலும் பிரதிபலிக்கும் பிரம்ம தேஜஸின் வாயிலாய் நான்முகனின் வருகையை இந்திரன் உணர்ந்து கடிது இருக்கைவிட்டெழுந்து நான்முகன் அடிபணிவது போல் தசரதன் கடிதெழுந்து முனிவரை வரவேற்று வணங்கிநின்றான் பிரம்ம தேவரைத் தேவேந்திரன் வரவேற்பது போல் என்ற உவமையைக் கம்பர் வான்மீகத்திலிருந்து பின்பற்றியிருக்கிறார். பிரமதேவர் இந்திரனின் கொலுமண்டபம் செல்வதன் முன் வாயிற்காப்பாளர் மூலம் வருகையறிவிப்பதுண்டோ? உண்டெனின், உவமையே போதுமன்றோ? இன்றெனின் வருகையறிவிப்பு எங்ஙனம் பொருந்தும்? முனிவருகை காட்சியில் கம்பர் வாயிற்காப்போரை விடுத்தால், அக்காட்சிக்குச் சோபையளித்தாரேயன்றி சோர்வு விளைக்கவில்லையென்பது என்போன்றாரின் துணிவு.

கம்பர்பால் ஸ்ரீ தேசிகன் காணும் மற்றொரு குறைபாட்டைக் கவனிப்போம். அமிர்தம் கிடைத்தற்கும், வரண்டநாட்டில் மாரிபொழிதற்கும், மகப்பேறில்லான் மகனைப் பெறுதலுக்கும், முனிவரின் வருகையைத் தசரதன் உவமித்துப் போற்றியதாக வான்மீகி வரைந்திருக்க கம்பரோவெனில்,—நிலஞ்செய்தவமன்று தன் நலஞ்செய்வினையுமன்று, ஆனால் முன்பு தன் குலஞ்செய்தவமேயாய்— எனத் தசரதர் கேவலம் சம்பிரதாய முறையில் புகழ்ந்ததாகக் கம்பரின் சித்திரம் இருக்கிறதென ஸ்ரீ தேசிகன் பழுது சொல்லுகிறார். வான்மீகரின் உவமைகள் மேம்பாடுடையன என்பதில் ஐயமில்லை. ஆயின் கம்பரும் அதே உவமைகளைத் திருப்பச் சொல்லல் வேண்டுமென்ற விதியுண்டோ? கனவிலும் கருதப்பெறாததோர் மகிழ்வளிக்கும் சம்பவம் எனத் தசரதர் கௌசிகரின் வருகையையெண்ணுகிறார் எனக் கம்பர் நினைக்கிறார். தான் அறிந்ததோர் தவத்தால்,—தன்நிலஞ் செய்தவத்தாலாவது தான்செய்த தவத்தாலாவது—இன்றித் தான் உணராத ஓர் பாக்யத்தால்—தன் முன்னோர் செய்தவத்தால்—கௌசிகர் வரப்பெறும் பாக்யம் கிட்டியதெனத் தசரதர் கருதுவதாகக் கம்பர் சித்தரித்திருக்கிறார்! எதிர்நோக்காது எய்தியதோர் பாக்யத்தை, எதிர்பார்த்து ஓம்பி நின்று பெறும் மகப்பேறுக்குப், மழைக்கும், அமிர்தத்திற்கும் ஒப்பிடுதல் தகாது எனக்கம்பர் கருதினார்போலும்! காமாலை கண்ணிற்கு நீள்விசும்பின் நீலநிறம் மாறுதலுற்று மங்கித்தெரிவதில் வியப்புண்டோ?

முன்பு வாக்குக்கொடுத்துப் பின்பு பிறழ்ந்தான் தசரதன், எனும் வான்மீகச் சித்தரிப்பு கம்பரில் காணவில்லையென்பது ஸ்ரீ தேசிகன் காணும் மற்றொரு குறை. முந்து தன்குலஞ் செய்தவம் என்று போற்றிப்பூரிப்புற்று, மற்று இனிச்செய்வது அருள்க எனத் தசரதன் கௌசிகரை வேண்டி நிற்கிறான். கௌசிகர் மனதில் தான் வேண்டுவதைத் தசரதன் செய்வானோ என்ற ஐயம்

எழ நியாயம் உண்டெனினும், தசரதன் மனதில் கௌசிகர் தான் செய்யவிரும்பாததைக் கட்டளையிடுவாரோ என்ற ஐயம் உதிக்க நியாயம் தோன்றவில்லை. தாங்கள் கட்டளையைத் தலைமேல்தாங்கி நான் **இனிச் செய்யப்போவது** என்ன என்று தசரதன் கேட்கிறான். 'தாங்கள் என்னை என்னசெய்ய விரும்புகிறீர்கள்' என்று கேட்கவில்லை. கௌசிகரிடும் பணி எதுவாயினும் அதுபுரிவது தன் பாக்யமெனக்கருதும் மனப்பான்மையில் தசரதர் வாக்குக் கொடுக்கவேண்டிய நிலைமை தென்படவில்லை.

ஒரு முனியை ஒரு முனிதான் சிருஷ்டிக்கமுடியுமென்ற சொல்லால் ஸ்ரீதேசிகன் கம்பராக்கிய கௌசிகருக்கு இழுக்குக் கூறுகிறார். இல்லற மாண்பையும் காதலின் தத்துவத்தையும் முற்றுந்துறந்த முனிபுங்கவர் எழிலுற எடுத்துக்காட்டவில்லையா? கொடுமையுருவாய அரக்கரையும் அதர்மத்திற்குறைவிடமாய இராவணனையும், தாய்மைவாய்ந்த மாமுனி சித்திரிக்கவில்லையா? ஓர் அரக்கனை ஓர் அரக்கன்தான் சிருஷ்டிக்கக்கூடுமென்று சொலின் அதில் எத்துணை பொருத்தம் இருக்கிறதோ, அத்தன்மையதுதான் ஒருமுனியை மறுமுனியன்றிப் பிறர் கற்பிக்கக்கூடியதில்லை யென்னும் ஸ்ரீ தேசிகனின் கூற்று.

கம்பரது கௌசிகர் மன்னர்களைப் பாடுகிற ஒரு புலவராகக் காட்சியளிப்பதாக ஸ்ரீ தேசிகன் கம்பர்பால் சுமத்தும் கொடும்பழி ஆதாரமற்றது. தசரதன் கேவலம் புவியாளும் புரவலன் மற்றுமன்று என்பது வான்மீகிராமாயணம் ஆறுவது சர்க்கத்தில் தசரதனின் மாண்பு புகழ்ந்துரைக்கப் பெற்றிருப்பதிலிருந்து விளங்கும். தசரதர் பல பெரும் யாகங்கள் செய்தவர். ராஜரிஷி மஹரிஷியின் குணம் படைத்தவர். மூவுலகிலும் புகழ்பெற்றவர். ஸ்ரீமந் நாராயணனையே திருமகனாகப்பெறும் தகைமை கொண்ட அருந்தவத்தோன். இத்தகையோனைப் போற்றுதல் பல்லைக் காட்டுவதாகுமா? வருமுன் கடிதெழுந்து வலஞ்செய்து வணங்கி அடிபணியப் பெற்றதாகக் கம்பர் போற்றும் கௌசிகரை மன்னனைப்பாடும் புலவராகச் சித்திரித்திருப்பதாகச் சொல்லுவது வீண் கூற்று.

வான்மீகத்தில் இயற்கை ஒலி முழங்குகிறதென்றார், கம்பராமாயணத்தில் நாடகமேடையொலிதான் கேட்கிறதென்றும், கம்பரின் சொல்வலையில் சிக்கித் திகைப்போர்க்கு மஹா கவியின் இயற்கைச் சோலை விளங்காதெனவும் ஸ்ரீ தேசிகன் சொல்கிறார். வான்மீகத்தைப் பழிக்கும் புல்லறிவாளர்பால் ஸ்ரீ தேசிகன் கொள்ளும் சீற்றத்தை, கம்பரைத்தாக்காது, வெளியிடுவது இயலாதோ? வான்மீகம் பழிக்கும் மதியினர் கம்பரைப்போற்றின் அது கம்பரின் குற்றமா?

விமர்சன ஆரம்பத்தில் சொல்லளவில் தாம் சாற்றியுள்ள விருப்பு வெறுப்பில்லா விமர்சக லக்ஷணத்தைப் புறக்கணித்து, வான்மீகம் த்வேஷிக்கும் குறுகிய மனப்பான்மையினரின் நிதானம் தவறிய தன்மையையே பிரதிபலித்து ஸ்ரீ தேசிகன் எழுதநேர்ந்தது என்னே கொடுமை!

அடுத்த இதழில்—

'ஞானோதயம்'

உள்ளத்தை உருக்கும் சிறு கதை வெளிவருகிறது!

கர்மட்டார்

பி. எஸ். வரதராஜ ஐயர் (கல்கத்தா)

பீஹார் மாகாணத்தில் சந்தால் பர்காணுவிலே கர்மட்டார் என்று ஒரு கிராமம் இருக்கிறது. கிழக்கு இந்திய இருப்புப்பாதையிலே கல்கத்தாவிலிருந்து காசிக்குப்போகிற வழியிலே 168-வது மைலில் இவ்வூர் ரயில்வேஸ்டேஷன் இருக்கிறது. இங்கு வசிப்பவர்கள் பெரும்பாலும் பூர்விக இந்தியர்களின் சந்ததியார்கள். அவர்கள் சந்தாலி என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் எளியவர்கள், பாமரர், என்றைக்கும் வறுமைவாய்ப்பட்டு உழலுகின்றனர். சிலர் அன்றாடம் குற்றேவல் செய்து பிழைக்கின்றனர். சிலர் கழனியிலும், சிலர் காட்டிலும், மிகச் சிலர் புற்றறையிலும் வேலைசெய்து வயிறு வளர்க்கின்றனர். இந்த வேலைகள் வருடத்தில் நான்கு மாதங்களுக்கு தான் கிடைக்கின்றன. மற்ற காலங்களில் அவர்கள் குடும்பத்தோடோ அல்லது பிரிந்தோ வேறிடங்களுக்குச் சென்று கனிகளிலும், தேயிலைத்தோட்டங்களிலும் அலுவல் செய்ய அமர்கின்றனர்.

ஒற்றையறையில் அமைந்த அவர்களுடைய வீடுகள் மண் சுவர்களையும், ஓலைவேய்ந்த கூரைகளையும் உடையன. மோவா என்னும் புளிப்பான ஒருவகைப் பூவும், காட்டில் கிடைக்கும் பறவைகள் தின்னும் கேந்து என்னும் இனிய பழமும் அவர்களுடைய முக்கியமான ஆகாரப்பொருட்கள். ஆட்டாமாவினால் செய்த ரொட்டி அவர்களுக்கு அபூர்வமான சிற்றுண்டி. ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு கிடைத்தால் அவர்கள் திருப்தி அடைகிறார்கள். அவர்கள் 'கூழானாலும் குளித்துக்குடி' என்னும் முதுமொழியைக் கடைப்பிடிப்பவர்கள்; வாடையிலும், கோடையிலும், குளம் குட்டைகளில் குளித்துத் தம் ஆடைகளை நனைத்து உலர்த்தியபிறகே உண்ணுவர். ஆடவர் உடுப்பது அரையைச் சுற்றி ஒருதுணி. பெண்கள் தரிப்பது சற்று அதிக நீளமான ஒருசேலை; அதை அவர்கள் இடுப்பை வலஞ்சுற்றி மேலே போர்த்து மீண்டும் இடையில் செருகிக் கொள்வார்கள். இருபாலரும் முழங்காலுக்கு மேலாக ஆடையுடுப்பார்கள். ஒவ்வொருவரிடமும் இருப்பது ஒற்றைத் துணியே. இதை நாடோறும் நனைத்து உலர்த்தி உடுக்கும் திறன் என்னே என்று யான் விசாரித்தபொழுது அறிந்த வரலாறு வருமாறு:—

குளத்தில் ஒருவன் அல்லது ஒருத்தி ஆடையோடு மூழ்குவர். முழுகியபின் குளத்திலிருந்தபடியே தம் ஆடையை அவிழ்த்து அலசிப்பிழிந்து கரையில் நிற்கும் வேறொருவன் அல்லது வேறொருத்தி கரத்தில் வீசுவர். மற்றவர் அதைப்பெற்று உலர்த்திப் பின் குளிப்பவரிடம் வீச இடுப்பளவு ஆழத்தில், அவர் அதை மீட்டு உடம்பைத் துடைத்துக் கரையேறுவர். பிறகு முன்பு உதவியவர் குளத்தில் இறங்க, முன்பு குளித்தவர் மற்றவருக்கு இவ்வாறு உதவி செய்வர்.

இவ்வுதவியை ஆண் ஆணுக்கும், பெண் பெண்ணுக்கும் செய்துகொள்வது வழக்கம்.

காலையிலிருந்து மாலைவரை வேலைசெய்தால் ஒரு நாளைக்கு ஒருவருக்குக் கிடைக்கும் கூலி அணு இரண்டு. அதுவும் ஒருவாரம் வேலைசெய்தால் வாரக் கடைசியில் மொத்தமாகக் கொடுக்கப்படும். சில எஜமானர்கள் அவர்களுடைய வேலையில் குற்றஞ்சாட்டி முதலில் வாளாயிருந்து இறுதியில் கூலியைக் குறைத்துக் கொடுப்பார்கள். வேறு சிலர்—ஆனால் அத்தகைய பாதகர் மிக மிகச்சிலரே—கூலிகொடுக்க மறுத்து விடுவார்கள். வேலை கிடைத்த நாளிலிருந்து கடைக்காரர்களிடம் கூலிகள் கடனுக்குப் பொருள் வாங்குவார்கள். அக்கணத்திலிருந்து அவர்கள் கடைக்

காரர்கள்து வலையில் சிக்குவார்கள். குறைந்த கூலியாலோ, கூலியில்லாமலோ வருவாய் போய்விட்டால் அவர்களுடைய கதி என்னாகும்?

எனது நண்பர் ஒருவர் அவர்களுடைய நிலைமையையறிந்து அவர்களுக்குத் தினசரிக்கூலி கொடுத்து வந்தார். ஒரு நாள் ஒருவன் சரியாக வேலைசெய்யவில்லை. விசாரித்தபொழுது அவன் அதற்கு முந்தின நாள்முதல் பணம் இல்லாமையால் பட்டினிகிடந்து களைத்திருப்பதாகவும், அன்று கிடைக்கப்போகும் பணத்தைக்கொண்டு பசிதீர்க்க யத்தனித்ததாகவும் தெரிந்தது.

இன்னொருநாள் ஒருவன் தனக்குச் சேரவேண்டிய இரண்டு அணாவைப் பெற்றுப்போய்ச் சிறிதுநேரங்கழித்துத் தன் மனைவியுடன் திரும்பிவந்து என் நண்பரை நமஸ்கரித்து "ஐயா, எனது கூலியைக்கொடுத்துதவினீர்கள். எனக்குக் காலணா தருமமாகக் கொடுங்கள்" என்று வேண்டினான். அன்று காலணா அதிகப்படியாகச் செலவுசெய்யக் காரணம் என்ன என்று கேட்டபொழுது, அவன் அன்றைக்கு ஒரு விருந்தாளிக்கு ரொட்டிகொடுக்க விரும்புவதாகவும், வழக்கத்துக்கு மாறாக உப்புக்கு $1\frac{1}{2}$ தம்படியும், பச்சைமிளகாய்க்கு $1\frac{1}{2}$ தம்படியும், செலவுசெய்ய வேணுமென்றும் சொன்னான். மேலும் விசாரித்ததில் அவன் வழக்கமாகக் குறைந்த அளவு உப்பைச்சேர்த்து, அல்லது உப்பு இல்லாமல் ரொட்டிதட்டிச் சாப்பிடுவதாகவும், அன்றைக்கு விருந்தாளியை உபசரிக்கும்பொருட்டுத் 'தொட்டுக்கொள்ள' பச்சை மிளகாயையும் உபயோகிக்கக்கருதிய விபரமும் தெரிந்தது.

இவர்களுடைய நிலைமை கிறிஸ்தவ மதப் பாதிரிகளின் முயற்சியாலும், அவர்களைப் பின்பற்றும் இந்துமதப் பாதிரிகளின் உதவியாலும் சிறிதளவு மேம்பட்டு வருகின்றது. கல்வியும் கைத்தொழிலும் இவர்களை முன்னுக்குக் கொண்டுவர ஏற்ற சாதனங்கள். இவர்களுக்குக் கல்வி புகட்டிக் கைத்தொழிலைக் கற்பித்து இவர்கள் செய்யும் பொருட்களை வியாபார ஸ்தலங்களுக்கனுப்பித் தக்க லாபத்துக்கு விற்றுக் கொடுத்தால் பேருபகாரமாயிருக்கும். இக்காரியத்தையே கொஞ்சம் கொஞ்சமாகப் பாதிரிகள் இவர்களுக்குச் செய்து கொடுக்கிறார்கள். கர்மட்டாரை வட இந்தியாவின் எளிய கிராமங்களுக்கு ஒரு உதாரணமாகச் சொல்லாம். இத்தகைய கிராமங்களிலேதான் கிராமப் புனருத்தாரண வேலைசெய்ய அவசியம் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது.

நேயர்களுக்கு

முக்கியமாகக் கிராமப் புனருத்தாரணத்தைப்பற்றியும், பொதுவாக ஸ்தல ஸ்தாபன, ரோட்டு, ரயில் சௌகரியா சௌகரியங்களைப்பற்றியும், நேயர்கள் தங்களுக்குத் தோன்றும் ஆலோசனைகளைச் சிறு கட்டுரைகளாக எழுதியனுப்பக் கோருகிறோம். அந்த யோசனைகள் சமூக வாழ்வின் எந்த அம்சத்தைக் குறித்தாகிலும் இருக்கலாம். தனி நபரைக் குறித்து மட்டும் இருக்கக்கூடாது.

ஆசிரியர்.

மணல் மூடிய இடம்

ஸா. ஜே.

காதலியைக் காணவேண்டுமென்ற துடிதுடிப்புடன் போர்க்களத்தில் வெற்றிமாலை சூடிய காதலன் ஓடோடித் திரும்பி வந்தான். வரும் வழியில் சாலை நெடுகிலும் வானளாவிய மரங்கள். அரசும் வேம்பும் பின்னிக்கொண்டு வளரும் காட்சி ஆங்காங்கு தென்படும்போதெல்லாம் அவனுக்குக் காதலியைத் தழுவி மகிழ்ந்த நினைப்பு வரும். கால்கள் பின்னும் வேகமாக நடை போட்டுச் செல்லும்.

என்ன ஆதுரத்துடன் வருகிறான் அவன்! அவன் மனத்தில்தான் எவ்வளவு காதல் கோட்டைகள் நிர்மாணமாகிக் கொண்டிருக்கின்றன! ஆனால் பாவம் காதலி மனோ வேதனையால் இறந்துவிட்டாளே; அவளை அவன் எப்படிக் காண முடியும்! ஆண்டவனுக்கு ஏனோ அவனிடம் இவ்வளவு துவேஷம்!

தலைவி இறந்த செய்தி அவன் இருதயத்தைப் பிளந்துவிட்டது. பிரமை கொண்டு குதித்தான்; சடைவிரித்துப் பித்துப்போல ஆடினான்; பற்களை நெரித்துத் தெய்வத்தைச் சபித்தான். எங்கே காதலியின் உடலைப் பொசுக்கினார்களோ அச் சுடலைக்கு ஓடி அவளுடைய ஞாபக சின்னமாக இருந்த சமாதியின்மீது விழுந்து புலம்பினான். ஆவேசத்துடன் கதறலானான். ஆயுள் முழுவதும் கதறிக்கொண்டேயிருந்தான்.

காவிரிப்பூம்பட்டினத்துக் கடற்கரையில் சமுத்திர ராஜன் உக்கிரமான சப்தத்துடன் சீறிவிழும் அலைகளை எழுப்புவது மேலே சொன்ன காதலன், இறந்துபோன காதலியின் சமாதிமீது புரண்டு அலறும் காட்சியை என் மனக் கண்முன் கொணர்ந்து நிறுத்தியது.

காவிரிப்பூம்பாவை எவ்வளவு சோபையுடன் விளங்கினாள்! சர்வ லக்ஷணங்களுடன் ஸ்ரீதேவியை அவள் விலைக்கே வாங்கிவிட்டது போலல்லவா தோன்றிற்று! அவள் மடியில் பொன்னும் மணியும் அல்லவா விளைந்தது! அப்போது சமுத்திரராஜன் எத்தனை பெருமிதமடைந்திருப்பான்! உலகத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் வர்த்தகர்களையும், யாத்திரிகர்களையும், ஏன், ஸம்ராட்டுகளையும், அழைத்துவந்து அவளிடம் உலகிலுள்ள செல்வம் முழுவதையும் காணிக்கைபோல வாங்கிக்கொடுத்தானன்றோ!

காலம் ஈவிரக்கமற்றது. தன் கைவரிசையைக் காட்டித் தமிழ்மன்னர் வம்சத்தை நாசம்செய்தது. மனமுடைந்த 'காவிரி'யும் அத்துடன் அழிந்துவிட நிச்சயித்தாள் போலும்! இன்று அவள் துயிலும் சமாதியைத்தான் நாம் காண முடியும். அந்தச் சமாதியையே காவிரிப்பூம்பட்டினம் என்று இப்போது அழைக்கிறோம்.

வாழ்க்கையில் ஏற்பட்ட பெரிய புயலால் நான் நடக்கும் யந்திரமாக இருந்த சமயம் அது. காவிரிப்பூம்பட்டினத்திற்குச் சொந்த ஜோலியின் நிமித்தம் போயிருந்தேன்.

வெறும் மணல் ரஸ்தா. பாரவண்டிகளும் கூண்டுவண்டிகளும் போய்வந்த வண்ணமிருப்பதால் 'நொய்ய்' என்ற சுருதியும் காணாங்கோழியின் 'ஃகிசு' என்ற சப்தமும்தான் அறுபது நாழிகையும் கேட்கும். ஜனநடமாட்டம் மிகவும் சொல்பம். ரஸ்தாவின் இருபுறங்களிலும் செழித்துக் கொழுத்த அரசு, ஆல், புளி, நாகை முதலிய விருட்சங்கள். சாலைவழியே செல்லும்போது மனதுக்கு எவ்வளவு இன்பமும் நிம்மதியும் ஏற்படுகின்றன! மெஷின்போல இருந்த எனக்கு வாழ்க்கையில் நம்பிக்கையும் உத்ஸாகமும் உண்டாக்கிவிட்டதே அந்தப் பழையநாள் மணல் ரோடு!

நதி—காவிரியும் எவ்வளவோ பெரிய அந்தஸ்துடையவள். தன் தோழியான 'காவிரிப்பூம்பாவை' மண்ணில் புதைந்து சமாதியிலிருப்பதைக் காணச்சகியாமல் தானே; அவள் உடல் குறுகித் தயங்கி நிற்கிறாள்! நீரோட்டமே இல்லாமல் ஜலம் தேங்கிக் கிடப்பது போலல்லவா தோன்றுகிறது? மிகுந்த நாணத்துடன் மெல்லமெல்ல ஊர்ந்துபோய்க் கடலில் கலக்கிறாள்.

இப்போது எண்ணி என்னபயன்!

ஒருகாலத்தில் பாரத தேசத்திலேயே பெரிய பட்டினமாக இருந்து வாணிபம் பெருத்துத் திகழ்ந்த காவிரிப்பூம் பட்டினம் இன்று சந்தடியற்ற கிராமமாக விளங்குகிறது.

தெய்வமே! பிரசாந்த நிலையில் மனத்தை நிறுத்த ஏற்ற பூமியாகத் திகழும் இப்போதைய காவேரிப்பூம்பட்டினத்தை இப்படியே என்றும் மாறாமல் வைத்திரு!

நான்
சொல்வதைக்
கேள்

எப்பொழுதும் கைவசமாய்
ஒரு பாட்டில்
ஸிரோலின்
"ரோச்"
வைத்துக்கொள்

இருமல், ஜலதோஷம், சுவாஸ உபத்திரவங்களை
குணப்படுத்த இது ஒன்றேதான் தக்க மருந்து

வருஷப் பிறப்பு

'அனந்தர்' கன்னடத்தில் எழுதியது
ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீனிவாசன் மொழிபெயர்த்தது.

"டேய் நாளைக்கு யுகாதி!........இருவருக்கும் விருந்துச் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்." என்றான் ரங்கன்.

"எங்கேடா?.......'' என்று கேட்டான் சிவஸ்வாமி.

இருவரும் சிறுவயதிலிருந்தே பள்ளிக்கூடக் கூட்டாளிகள். சிவஸ்வாமி மைசூர் காலேஜில் படிப்பை முடித்துக் கொண்டு, பூனாவுக்குச்சென்று வக்கீலாகத் திரும்பிவந்தான். ரங்கன் சென்ட்ரல் காலேஜில் பரீக்ஷைதேறி, இன்ஜினியரிங் காலேஜில் மூன்றாம் வருஷத்திலிருந்தான். சிவஸ்வாமி திரும்பிவந்தவன் பலகையைத் (Board) தொங்கவிடுவதைவிட்டு, திவான் ஆபீஸில் வேலைக்குச் சேர்ந்துவிட்டான்.

சிவஸ்வாமியின் தாய் காலஞ் சென்று இரண்டு வருடங்களாயிருந்தன. அவன் பூனாவிலிருந்து திரும்பி வந்தபின் தகப்பனாருடன் சண்டைபோட்டுக்கெண்டிருந்தான். அவன் தகப்பனார் தம் மனைவி செத்துப்போன தீட்டு முடிவதற்குள் அவளுடைய பிறந்தகத்திலிருந்து வந்திருந்த நகை நட்டுகளை யெல்லாம் விற்றுவிட்டதுதான் காரணம். சிவஸ்வாமி மன்றாடிக்கொண்டான். ஆனால் தகப்பன் பிடித்த பிடிவாதத்தை விடவில்லை! சிவஸ்வாமி வீட்டைவிட்டு வெளியேறி, சாமராஜபேட்டையில் ஓர் அறையை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு, அங்கிருந்தான். அவனுடைய தாய் மரணமடைவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பே அவனுக்கு விவாகமாகியிருந்தது. அவனுக்கிருந்த உத்தியோகம் இன்னும் காயம் (Permanent) ஆகி இருக்கவில்லை யாதலால், அவன் மனைவியை அழைத்துவந்து குடித்தனம் ஏற்படுத்தவில்லை. அவள் கோலாரில் பிறந்தகத்தில் இருந்தாள்.

ரங்கனுக்கு பெங்களூர் உள்ளூர் அல்ல. அவனும் ஓர் அறையில் இருந்தான். அவனுக்கும் கல்யாணம் ஆகியிருந்தது. சிவஸ்வாமி அறைவைத்துக் கொண்ட பிறகு, ரங்கனையும் தன்னுடனேயே வந்திருக்கும்படி சொன்னான். சிவஸ்வாமி மிகவும் உண்மையான நண்பன். தாயை இழந்து—தகப்பனாருடன் சண்டை போட்டுக்கொண்டு—பெண்டாட்டியைப் பிறந்தகத்தில் விட்டுவைத்திருந்த அவன் பாலிய சிநேகிதனின் நட்பில் அமைதியை அடைய விருப்பங் கொண்டான். அருகிலேயே இருந்த ஓட்டலிலிருந்து எடுப்புச்சாப்பாடு வரவழைத்துக்கொள்வார்கள்.

ரங்கனுக்கு விருந்துக்கு அழைப்பு வந்தது: அவனுடைய அத்திம்பேர் வீட்டிலிருந்துதான். (அத்திம்பேர் என்றால் அவனுடைய பெரியப்பா பெண்ணின் அகமுடையான்) அவருக்கு ராஜா மில்லில் வேலை; சேஷாத்திரிபுரத்தில் வீடு.

வருஷப்பிறப்புக்கு முதல்நாள் பிற்பகலில் ரங்கனின் அத்திம்பேர் அவனைச் சந்தித்து, மறுநாள் சாப்பிடுவதற்கு வரும்படி சொன்னார். அவர் சாப்பாட்டிற்கு அழைத்தவுடன் அவனுக்குச் சிவஸ்வாமியின் நினைவு வந்தது. 'அவனுக்கு நாளைக்கு எவ்விடமாவது சாப்பாட்டிற்கு அழைப்பு வந்திருக்கோ இல்லையோ? ....இல்லாமற்போனால்? ....ஓட்டலிலும் அநேகமாய்ப் பண்டிகை இருக்கலாம்..........ஆனால் என்ன? வருஷப்பிறப்பன்றைக்கும் ஓட்டல் சாப்பாடா?'

"அத்திம்பேரே, பாருங்கள் வந்தால்—நான்—என் நண்பன், இருவரும் வருவோம் அவனை விட்டுவிட்டு நான் ஒருவன் மட்டும் வருவதற்கு முடியாது. நீங்கள் இதென்னடா இது! ஒருவரை

அழைத்தால் இருவர் வருகிறார்களே, என்று..........."

"ஐயோ! அதனாலென்னப்பா! அகத்தியம் ஆகட்டும்! இரண்டுபேர்தானா பிரமாதம்! இன்னும் இரண்டு பேரைத் தான் அழைத்துவாயேன்...........நானே அவரையும் பார்த்துச் சொல்லட்டுமா!"

"வேண்டாம் உங்களுக்காக நான் சொன்னால் போதும்".

அன்று இரவு எட்டுமணிக்குச் சிவஸ்வாமி அறைக்கு வந்தான். ரங்கன் அவனுக்குச் விருந்து சமாசாரத்தைச் சொன்னான்.

"நாளைக்கு நான் பட்டினி" என்று சிவஸ்வாமி நிதானமாகக் கூறினான்.

"என்னடா வந்தது உனக்கு!"

"நாளைக்கு நான் உன்னுடன் கூட வரமுடியாது".

"வேறே எங்கேயாவது சாப்பாடு கிடைக்கப்போகிறதோ?"

"ஓட்டல் ஸ்ரீ கிருஷ்ண விலாஸில்"

"சரி! சரி! இருந்தே இருக்கு, அந்தப் பஞ்சபக்ஷ்ய பரமான்னம்."

"எங்கேயும் இல்லை."

"அப்படியானால்?"

"இல்லை ரங்கா, நாளைக்கு நான் வருகிறதற்கில்லை"

"என்ன காரணம், என்னிடம் சொல்லப்படாதா?" என்றான் ரங்கன்

"என்ன காரணமென்று சொல்லட்டும் ரங்கு? நாளைக்குப் பண்டிகைச் சாப்பாட்டை அநுபவிக்கும் பாக்கியம் எனக்கில்லை. அவ்வளவுதான்!"

"சரி, நானும் சாப்பிடப்போகாமல் நின்று விடுகிறேன்"

"சே! சே! நாளைக்கு நீ போய்த்தான் ஆகவேண்டும்!"

"நீ இங்கே பட்டினிகிட; நான் அங்கு போய் மூக்கில் பருக்கை வருமட்டும் சாப்பிட்டுவிட்டு எப்பம்..........." என்று இழுத்தான்.

ரங்கன் கொஞ்சநேரம் பேசாமலிருந்து, அப்புறம் எங்கேயோ பார்த்தவாறே திடுக்கென்று "இன்று கண்டேன்" என்றான்.

"என்ன?" என்றான் சிவஸ்வாமி.

"நம்முடைய நட்பு உண்மையான நட்பல்ல .... பரஸ்பரம் சுத்த மோசம்; வெளிப்பூச்சு"

"பாருடா ரங்கு! எங்கப்பாவின் வீடும் அந்தச் சேஷாத்திரிபுரத்திலேயே இருக்கிறது. நாளைக்கு எங்கும் பண்டிகை; எங்கும் சந்தோஷம் ஆனால்..............." மேலே பேசமுடியவில்லை.

"ஆனால் என்ன?" என்றான் ரங்கன்.

"ஆனால் அந்த வீட்டில் மாத்திரம் நாளைக்குக்கொஞ்சமும் சுகமில்லை; சந்தோஷமில்லை. என் தம்பிமார்கள் இருவர், தங்கை ஒருத்தி இருக்கிறார்கள்; தாயில்லாக் குழந்தைகள்: அப்பாவோ! ....அவராச்சு, அவர் சிநேகிதர்கள் ஆச்சு. வீட்டில் கவனிப்பவர்கள் இல்லை. குழந்தைகள் என்ன பண்டிகைச்சாப்பாடு சாப்பிடுகிறார்களோ, எனக்குத் தெரியவில்லை. இங்கே வருவதற்கு முன்பு இவ்வளவு பழம், தின்பண்டங்கள் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வந்தேன், சாப்பிடட்டும் தாயில்லா குழந்தைகள் என்று. கூடப்பிறந்தவர்களின்பாடு அப்படி இருக்கும்பொழுது, ...ரங்கா, நான் எப்படி நாளைக்குப் பண்டிகைச் சாப்பாடு சாப்பிடட்டும்? அந்த வீட்டைத் தூரத்திலிருந்து பார்த்தாலே வயிறு பகீரென்கிறது: ரங்கு அம்மா அந்த வீட்டிற்கு ஜீவனாக இருந்தாள்; இப்பொழுது அது உயிரில்லாத வீடு"

பொங்கி வந்த கண்ணீர்த் துளியைத் துடைத்துக்கொண்டு பெருமூச்செறிந்தான் சிவஸ்வாமி. அவன் சாய்வுநாற்காலிமீது உட்கார்ந்து மேலேபார்த்துக்கொண்டிருந்தான். ரங்கன் படுக்கையின் மேல் உட்கார்ந்து நிலத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். கொஞ்சநேரம் இருவரும் மௌனம் சாதித்தனர்.

"நாளைக்கு நான் ஏமாற்றிவிடுகிறேன்" என்றான் ரங்கன்.

"நீ போகத்தான்வேண்டும்!"

"என்னவோப்பா!..........சரி, போகிறேன்; நீ ஏன் வரவில்லை என்று கேட்டால், என்ன சொல்லட்டும்;"

"ஏதாவது ஒருபொய்யிட்டால் ஆச்சு! இன்னும் எங்கேயோ சாப்பாட்டிற்கு ஒத்துக்கொண்டுவிட்டான் என்று சொல்லிவிடு."

"நல்ல சிநேகிதன்! வருஷப்பிறப்பன்று பொய்சொல்ல சொல்கிறாயா?"

* * *

வருஷப்பிறப்பன்று காலை எட்டு மணியாயிற்று. இருவரும் படுக்கையைவிட்டு எழுந்திருக்கவில்லை. சிவஸ்வாமி, விழிப்பு வந்தவுடன் "ரங்கு விழித்துக்கொண்டாயாடா?" என்றான். ரங்கன் கண்ணை தேய்த்துக்கொண்டே ஒருக்களித்துக்கொண்டு, "ஊ—என்ன சொன்னாய்?" என்றான்.

சாப்பாட்டுவேளை நெருங்க நெருங்க ரங்கன் மறுபடியும் யோசிக்க ஆரம்பித்தான். சிவஸ்வாமி அவனைத்திட்டி அத்திம்பேர் வீட்டுக்குப் போகும்படி வற்புறுத்தினான். ரங்கன் சைகிளில் ஏறிக்கொண்டு புறப்பட்டான்.

சுமார் பதினொருமணிக்கு ஓட்டலிலிருந்து சாப்பாடு வந்தது. சிவஸ்வாமி காலையில் எழுந்தவன் அறையை விட்டு எங்கும் புறப்படவில்லை. அவன் மனத்தில் அமைதியில்லை, என்னவோ சங்கடம் பண்ணியது. இறந்துபோன தாய் அனாதையான சகோதர சகோதரிகள், தூரத்திலிருக்கும் மனைவி எல்லோரும் அவன் உள்ளத்தை மூலைக்குமூலை இழுக்க ஆரம்பித்தனர். கண்களில் கண்ணீர் தளும்பிற்று. அந்த் தாயில்லாக் குழந்தைகளின் பாடு என்னவோ! என்று யோசனை செய்ய ஆரம்பித்தான். அப்போது தபால்காரன் அவன் கையில் இரண்டு கவர்களைக் கொடுத்துச்சென்றான். ஒன்று அவனுக்கு; மற்றொன்று ரங்கனுக்கு வந்திருந்தது. ரங்கனது கடிதத்தை மேஜைமேல் வைத்துவிட்டு, தன் கடிதத்தை உடைத்தான். அவன் மனைவியின் கடிதம்.

"...................நாளைக்கு இந்தக்கடிதம் உங்கள் கைக்கு வந்துசேரும் சமயத்தில் நாங்கள் எல்லோரும் சாப்பிட உட்கார்ந்திருப்போம். ஆனால் நீங்கள் இங்கே இல்லையே என்று வியாகூலமாக இருக்கிறது. வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். நான் இவ்விடமிருந்தாலும் என் மனதெல்லாம் உங்கள்பேரில்தான் இருக்கும். நாளைக்கெல்லாம் உங்கள் நினைவாகவே காலம் கழிப்பேன். நாளைக்கு உங்களுக்கும் எங்கேயாவது நல்ல சாப்பாடு கிடைக்கட்டும் — உங்கள் மனம் சந்தோஷமாக இருக்கட்டும்;—என்று கடவுளை இப்பொழுதிலிருந்தே வேண்டிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் வருஷப்பிறப்பை எப்படி கழித்தீர்கள் என்பதைபற்றி நாளைக்கே கடிதம் எழுத வேண்டும்...........இல்லாவிட்டால் பாருங்கள்! மறந்துவிடாதேயுங்கள்; கட்டாயம் மறந்துவிடாதேயுங்கள்!" என்று எழுதியிருந்தாள்.

சிவஸ்வாமி கடிதத்தை படித்தான் கண்ணில் ஒற்றிக்கொண்டான்; மறுபடியும் வாசித்தான்; முத்தமிட்டான். அவள் நினைப்புக்கும் தன் ஸ்திதிக்கும் இருந்த வேறுபாட்டைக்கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது. அதை இன்னும் நான்கு தடவை படித்தான். அவன் மனத்திலிருந்த பாரம் இறங்கவில்லை. 'ஹூம்!

என்ன சாப்பாடோ! இன்றைக்கு ஒரு நாள் இல்லாவிட்டால்தான் என்ன!' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.... அப்படியே படுத்திருந்தான்; மயக்கம் வந்தாற்போலாயிற்று. இருந்திருந்தாற்போல் யாரோ கதவு தட்டினது போல் இருந்தது. சிவஸ்வாமி எழுந்துசென்று கதவை திறந்தான்.

வந்தவர் 'ரங்கன் இருக்கிறனு?' என்று கேட்டார்.

"இல்லைசார்; அவன் காலமே அவனுடைய அத்திம்பேர் வீட்டிற்குச் சாப்பிடப்போனுன் — இன்னும் வரவில்லை சார்."

"ஓ!..........நான்தான் அவனுடைய அத்திம்பேர். அவன் வரவே இல்லை சார்! உங்களையும் அழைத்துக் கொண்டு வரும்படி சொல்லி இருந்தேன். நீங்களும் வரவில்லை, அவனும் வரவில்லை. மத்தியானம் ஒருமணி வரையிலும் காத்திருந்தோம் சார். அப்புறம் சாப்பிட்டுவிட்டோம். அப்பொழுதே மூன்று மணியாய்விட்டது! .... இன்னும் வரவில்லையே எப்படி இருக்கிறனே என்று தேடிக்கொண்டு வந்தேன்....."

"அதென்னவோ சார், இங்கிருந்து சாப்பிடப்போவதற்கென்றுதான் புறப்பட்டான். சைக்கில் எடுத்துக்கொண்டு போனுன்..............."

"தாங்கள் என் சார் வரவில்லை!"

"நான் வேறு ஓர் இடத்தில் ஒத்துக்கொண்டுவிட்டேன்..... அவன் தெரியாமல் சொல்லிவிட்டான்."

"அவன் வந்தவுடன் நான் வந்திருந்தேன் என்று கொஞ்சம் தெரிவித்து விடுகிறீர்களா?...............வந்தனம்."

அவர் புறப்பட்டுப்போன அடுத்த நிமிஷமே . சிவஸ்வாமியின் மனத்திற்கு எல்லாம் மின்னல் வேகத்தில் புலப்பட்டது;.......'ரங்கன் ஏமாற்றியே விட்டான்! போக்கிரி' என்று சொல்லிக் கொண்டான். ரங்கனது முரடான முகத்தின் மறைவில் எவ்வளவு சிறந்த சிநேக உணர்ச்சி இருக்கிறதென்று, சிவஸ்வாமிக்கு இதுவரைக்கும் தெரிந்திருக்கவில்லை. இன்றுதான் அவனுடைய நட்பின் ஆழத்தை உணர்ந்தான்.

'நல்ல வருஷப்பிறப்பு, நமக்கு! ....நல்ல வெகுமதி கொடுத்தான் ரங்கன்! நான் என்னத்தைக் கொடுக்க முடியும்?' என்று மனத்தினுள் பேசிக் கொண்டான். அவனது உள்ளத்தில் சுகமும் துக்கமும் கலந்து எழுந்தன; கண்விழிகள் கண்ணீரில் மிதக்கவாரம்பித்தன. நட்புணர்ச்சியின் பெருமையை அநுபவித்த ஆனந்த கண்ணீர் அது. முன்பு, இரண்டு வருடங்களுக்கு முன்னுல், அவன் தாய் காலஞ்சென்றபொழுது, இதேமாதிரி கண்ணீர்ப் பிரவாகம் எழுந்தது. அன்னையின் அன்பைப் போல உள்ளத்தைக் கவரவல்ல வேறு அன்பும் உண்டு என்பது அவனுக்கு இதுவரை தெரியவில்லை. இன்று, இரண்டு வருடங்களுக்கப்புறம், இந்த வருஷப்பிறப்பன்று தெரிந்தது.

மாலை ஐந்து மணியாயிற்று. ரங்கனைக் காணவில்லை. சிவஸ்வாமிக்குக் கவலை அதிகரித்தது..........'சரி! அலைந்து திரிந்து முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டுவருவான்! ஓட்டலில் காப்பியாவது சாப்பிட்டானே இல்லையோ?............... என்னவோ!...................... பைத்தியம்' என்று எண்ணினுன்.

கடைக்குப்போய்க் கொஞ்சம் பழமும் ஓட்டலிலிருந்து பக்ஷணமும் வாங்கிக்கொண்டு வந்தான். அறையை விட்டு அசையவேயில்லை. முதலிலேயே கலங்கிப்போயிருந்த அவன் உள்ளம் இந்த நட்பின் அபூர்வமான அநுபவத்தினுல் இன்னும் கலங்கிப்போயிற்று.

ராத்திரி எட்டு மணியாயிற்று. ஓட்டலிலிருந்து சாப்பாடும் வந்தது. ரங்கன் மட்டும் இன்னும் வரவில்லை. சிவஸ்வாமி

"என்ன, சினிமா கினிமாவிற்குப்போய் விட்டானே!" என்று முனகிக் கொண்டே, கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான். அச்சமயத்திற்குச் சரியாக ரங்கன், சைகிலைத் தள்ளிக்கொண்டு, கால்களை இழுத்து இழுத்து அடிமேல் அடிவைத்தவாறு நிதானமாய் வந்தான். சைகிலின் முன் புறம் ஒரு துணிமூட்டை தொங்கிக் கொண்டிருந்தது. ரங்கன் சைகிளை உள்ளே கொண்டுவந்து வைத்துவிட்டு, "உஸ்! அப்பா!" என்று சாய்வு நாற்காலி யில் சாய்ந்தான். சிவஸ்வாமி படுக்கை யின்மீது உட்கார்ந்தான். இருவரிடையே யும் சிறிது நேரம் மௌனமே நிலவியது. கண்கள் அரைவாசி மூடிக்கொண்டிருந் தன. கொஞ்சநேரம்கழித்து அவன், மறுபடியும் பெருமூச்செறிந்தவனாய் மெள்ளப் புன்னகை புரிந்தான். சிவ ஸ்வாமி அதைப்பார்த்து—"என்ன! வரு ஷப்பிறப்பு வெகு ஜோராய் நடந்திருக் கிறதுபோல் தோன்றுகிறது!" என்றான்.

ரங்கன் கண்களை நன்றாகத் திறந்து கூரையைப் பார்த்தவண்ணம் மெள்ள நகைத்தவாறு, "ஹூம்,....... கொஞ்சம் ஜோருதான்!" என்றான்.

"சாப்பாடு ஜோராக இருந்ததென்று தோன்றுகிறது! தங்கை வீடு, கேட்க வேண்டுமா!...........என்ன சாப்பாடு?" என்று கேட்டான் சிவஸ்வாமி.

"பாயஸம், பஜ்ஜி, புளியோதரை மற்றவை தெரிந்ததே: போசம்பரி, பச்சடி, பொடித்துவல், குழம்பு முதலியன"

"இவ்வளவுநேரம் என் ஆயிற்று?"

"இரண்டு மணிக்குச் சாப்பாடு முடிந் தது. நல்ல சாப்பாடு! சாப்பிட்டவன் படுத்துக்கொண்டு தூங்கியேவிட்டேன் விழித்துக்கொண்டபொழுது ஆறுமணி யாகி யிருந்தது. உ சாப்பிட்டுவிட்டுத் திரும்பிவந்து சினிமாக் கொட்டகையில் நுழைந்தேன், எட்டேகாலுக்கு முடிந் தது. இதோ இங்கே ஒன்பதுக்கு ஆஜர்."

இந்தக் காக்கா குருவிக் கதையைக் கேட்டு, சிவஸ்வாமிக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. மிகவும் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டான்.

"சரி, இந்தச் சாப்பாட்டு வைபவத் தைச் சொன்னாயே, யார் வீட்டில்?" என்று கேட்டான்.

"இதென்னடா!...........யார் வீட்டில் என்றால்?—என் அத்திம்பேரகத்தில்!" என்று சொல்லிவிட்டு, ரங்கன் எழுந்து இருமிக்கொண்டே, உமிழ்வதற்குச் செல்பவன்போல் ஜன்னலருகில் சென் றான். சிவஸ்வாமி நகைத்தவாறு "டேய், எல்லாம் பொய் புளுகு— இப்படித் திரும்பு" என்றான். ரங்கன் தக்ஷணம் திரும்பினான். அவன் மூஞ்சியைத் தூக்கிக்கொண்டிருந்தான். சிவஸ்வாமி அவன் முகத்தைப் பார்த்தவாறே, "பரவாயில்லை! நல்ல ஆரம்பம்!" என்றான்.

"என்ன? நல்ல ஆரம்பம்?"

"புளுகுவதற்கு!"

"என்னடா, ரொம்ப அழுத்தலாய்ப் பேசுகிறாயே!"

"ஒன்றுமில்லை....மத்தியானம் மூன்று மணிக்கு—உன்னைத் தேடிக்கொண்டு வந்திருந்தார்."

"யார்!"

"அது யாரோ தெரியாது—நீ உன் அத்திம்பேர் வீட்டிற்கு சாப்பிடப் போயிருக்கிறாய் என்று சொன்னேன். அதற்கு அவர்—"

"உம்"

"இல்லை சார்; நான்தான் அவன் அத்திம்பேர்—"

சிவஸ்வாமி வார்த்தைசொல்லி முடிப் பதற்குள் ரங்கன், கலகலவென்று சிரித்தபடியே தொப்பென்று சாய்வு நாற்காலியில் சாய்ந்தான்.

* * *

இருவரும் பக்ஷணத்தையும் பழத்தையும் தின்றவண்ணம் பேசிக்கொண்டிருந்தனர்.

"நமக்கு இப்பொழுது நல்ல வருஷப் பிறப்பு" என்றான் சிவஸ்வாமி. ரங்கன் பேசவில்லை.

"இந்த வருஷப்பிறப்பை என்றென்றைக்கும் மறந்துபோக முடியாது!" என்றான்.

ரங்கன் ஆரஞ்சுப்பழச் சுளையை பிரித்து, கொட்டையை எடுத்து நிதானமாய் சாப்பிட்டுக்கொண்டு இருந்தான். பேச்சுமூச்சில்லை. சிவஸ்வாமி திரும்பவும் "டேய், நன்றாய் வருஷப்பிறப்பு பார்த்து ஆரம்பித்தாயே, பொய் சொல்வதற்கு!" என்றான்.

"மறந்துவிட்டாயே! நீயே சொன்னாய் காலையில், பொய் சொல்வதற்கு இன்று ரொம்ப நல்ல நாள் என்று!"

"ஆமாம் ரங்கு, இதுநல்லநாள்!ரொம்பவும் சுகமான நாள்! பொய்யோ, கிய்யோ, சாப்பாடோ, பட்டினியோ........ சுகமான நாளே சுபமான நாள்!"

ரங்கன் சிரித்தான். "காலையிலிருந்து மாலைக்குள் நீ இவ்வளவு மாறிப்போய் விட்டிருப்பாயென்று நான் எண்ணவில்லை" யென்றான்.

"என்ன மாறுபாட்டைக் கண்டுவிட்டாய்?"

"நான்வரும்பொழுது அறையெல்லாம் ஈரமாயிருக்குமென்று எண்ணி இருந்தேன்!"

"எப்படி ?"

"உன் கண்ணீரால் !"

"அதிருக்கட்டும், நீ ஏன் போகவில்லை?"

"நீ ஏண்டா இப்படிப் பேசுகிறாய் ! வெல்லம் சாப்பிடும் போது வேப்பம் பூவைச் சேர்க்கிறாயே !"

"போகிறது, எங்கெங்கே அலைந்தாய் சொல்."

"ரொம்பச் சுற்றினேன்—ஆனால் வேடிக்கையாக இருந்தது! இரண்டுமணி வரைக்கும் நகர எல்லையை விடவில்லை. மார்க்கெட் அருகில் குரங்காட்டுவதைப் பார்த்தேன் அங்கிருந்து மெஜஸ்டிக் சினிமா அருகில் இரண்டு கூட்டம் பார்த்தேன்! ஒன்று கழைக்கூத்து, இன்னொன்று பாம்பாட்டியின் வேடிக்கை. ரொம்ப நன்றாக இருந்ததடா! அதிலும் கழைக்கூத்தில் அந்தப்பெண்—ஓ!........"

"நிதானமாகச்சொல் ! யோசித்துச் சொல்; எங்கேயாவது நினைவு தப்பிப் போய்விடப்போகிறது!"

"நீ பார்த்திருந்தால் என்ன சொல்லி இருப்பாயோ!"

"நானும் பலமாக ஓ........என்றிருப்பேன்! "

"அப்புறம் ஹாஸ்டலுக்குப் போயிருந்தேன். .....பீமன் பண்டிகைச் சாப்பாடு சாப்பிட்டுத் தூக்கம் அடித்துக்கொண்டிருந்தான். அவனை எழுப்பி, என்னென்னவோ வம்பளந்துக்கொண்டு ஐந்து மணி வரைக்கும் அங்கேயே இருந்து விட்டேன். அப்புறம், சைகிலில் ஏறிக்கொண்டு கண்டோன்மென்ட் பக்கம் புறப்பட்டேன். அங்கொரு புட்பால் பந்தயம் நடந்துக்கொண்டிருந்தது. அவ்விடம் கொஞ்ச நாழிகையிருந்தேன். ஆறரைக்குக்குப் பார்க்கிற்கு வந்தேன். அவ்விடம், எட்டரைவரையில் உட்கார்ந்திருந்தேன். அப்புறம் 'ஓ! லக்ஷ்மணா' என்று கூண்டைவந்தடைந்தேன்........அப்புறம் சாப்பாடு—டிபன் —கிபன் ....? "

"அந்தக் கழைக்கூத்துப் பெண்ணைப் பார்த்து வயிறு நிரம்பின மாதிரியாயிற்று!"

"சரி! உன் பெண்டாட்டிக்குச் சொல்: வயிற்றுக்குப் பால் வார்த்துக் கொள்ளட்டும்!"

"........ அடேடே கொஞ்சம் பொறு, இன்னும் முடியவில்லே வருஷப்பிறப்பு!"

இவ்விதம் கூறி, சிவஸ்வாமி எழுந்திருந்து ரங்கனுக்கு வந்த கடிதத்தை எடுத்து, அவன் கையில் கொடுத்தான்.

ரங்கன் அதை உடைத்து வாசித்தான்—வாசித்தவன் நிலத்தில் விழுந்துவிழுந்து சிரிக்க ஆரம்பித்தான். சிவஸ்வாமி "என்னடா சமாசாரம்?" என்று கேட்டான்.

'ஒன்றும் இல்லே, இது நல்ல முடிவு வருஷப்பிறப்புக் கொண்டாட்டத்திற்கு" என்றான்.

"என்ன?"

"என் தர்மபத்தினி, எனக்கு வருஷப்பிறப்பு வாழ்த்து அனுப்பி இருக்கிறுள்! ஹ! ஹ!! ஹா!!!"

"எனக்கும் ஒண்ணு வந்திருக்கு! நான் வருஷப்பிறப்பை எவ்விதம் கழித்தேன் என்பதற்கு விவரமாய்க் கடிதம் எழுத வேண்டுமாம்!"

கொஞ்சநேரம் இருவரும் பேசவில்லே. ஒருவேளே தங்கள் தங்கள் மனேவிமார்களுக்குக் கடிதம் எப்படி எழுதவேண்டுமென்று யோசித்துக் கொண்டிருந்தார்களோ என்னவோ! அப்புறம் ரங்கன் கொட்டாவி விட்டுக்கொண்டே "போதும், படுத்துக்கொள்ளுகிறேன்" என்று எழுந்து படுக்கையை விரிக்கவாரம்பித்தான்.

இன்னும் விளக்கை அணேக்கவில்லே. இருந்திருந்தாற்போல் சிவஸ்வாமி 'டேய் தூக்கம் வந்துவிட்டதாடா ரங்கு" என்று கேட்டான்.

"அது எப்படியடா வரும்! இந்த இறுக்கம், கொசுக்கடி, கூட உன் ஹிம்சை!'

"எனக்கொரு சந்தேகம் தோன்றுகிறது"

"பெரிசோ, சிறிசோ!"

"ரொம்ப வேடிக்கையானது!"

"என்னடா?"

"சிநேகம் என்பது........"

"சரி! இது விடியற்காலம் வரையிலும் நீடிக்கும்! விளக்கை அணே! அது இருந்தால் மத்தம் புரளும்!"

"இல்லே ரங்கு, இதைக்கேளேன்—"

"முதலில் விளக்கை அணே!"

சிவஸ்வாமி விளக்கை அணேத்தான்.

"ஹூம், அதென்ன—சீக்கிரம் சொல்லி முடி!"

"சிநேகம் பெரிதோ? காதல் பெரிதோ?"

ரங்கன் கொட்டாவி விட்டுக்கொண்டே "அந்த ஸர்வக்ஞனுக்குத்தான் தெரியும்!" என்றான்.

லார்டு ரூதர்போர்டு

(ஆர். கே. விசுவநாதன், எம். எ., அண்ணாமலைநகர்.)

அறிவு வளர்ச்சிக்குப் பாடுபட்ட உத்தமர்களில் ஒருவரான லார்டு ரூதர்போர்டு ஆஸ்திரேலியாவிலுள்ள பிரைட்வாடர் என்னும் ஊரில் 1871-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 30 ம் தேதி பிறந்தார். இவரது பாட்டனார் ஸ்காட்லாண்டு தேசத்திலிருந்து பிழைப்புக்காக ஆஸ்திரேலியா சென்று குடியேறியவர். மரம் அறுத்து ஜீவனம் நடத்திவந்தார். பின்னர் இவரது தகப்பனாரும் அத்தொழிலையே பின்பற்றி வாழ்ந்து வந்தார். இத்தகைய எளிய குடும்பத்தில் தமது பெற்றோர்களின் பன்னிரண்டு குழந்தைகளில் ஒருவராக லார்டு ரூதர்போர்டு பிறந்தார். செயலற்றவராய் இருந்த போதிலும் ரூதர்போர்டின் அபார புத்தி கூர்மையைக்கண்டு அவர் தகப்பனார் நியூஸிலாந்திலுள்ள காண்டர்பரி காலேஜில் படிக்க வைத்தார். பி. எ., எம். எ., முதலிய பரீக்ஷைகளில் முதலாகத்தேறி அநேக பரிசுகள் பெற்றார். இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் நகரத்திலுள்ள காவண்டிஷ் ஆய்வுசாலைக்கு அனுப்பப்பட்டார். அச்சமயம் ஜே. ஜே. தாம்ஸன் என்ற பெரியார் ஆய்வுசாலையின் தலைமை ஆசிரியராக இருந்து வந்தார். ரூதர்போர்டின் புத்தி கூர்மையையும், உழைப்பையும் கண்டு வியந்தார். சிலகாலம் அவருடன் கூட இருந்து பரிசோதனைகள் நடத்திவந்தார். பின்னர் ஜே. ஜே. தாம்ஸனின் அனுமதியின் பேரில் கானடா தேசத்து மக்கில் சர்வகலாசாலையின் ஆசிரியராகச் சென்று அங்கு இருக்கும் போதுதான் அனேக விஷயங்களைப் புதிதாகக் கண்டுபிடித்து வெளியிட்டார். எட்டு வருஷங்கள் அங்கு தங்கி இங்கிலாந்துக்கு மறுபடியும் திரும்பி மாஞ்செஸ்டர் கலாசாலையின் ஆசிரியராகச் சென்றார். பின்னர், காவண்டிஷ் ஆய்வுசாலையின் தலைவர் ஜே. ஜே. தாம்ஸன் விலகியவுடன் அதன் தலைவராக நியமிக்கப்பட்டார். உலகிலுள்ள விஞ்ஞான ஸ்தாபனங்கள் அனைத்திலும் காவண்டிஷ் ஆய்வுசாலையே பிரசித்தி பெற்றிருந்தது. அதனைத் திறம்பட நடத்திவந்தார். உலகின் எல்லாப் பாகங்களிலிருந்தும் மாணவர்கள் இவருடன் சேர்ந்து உழைக்கத் திரளாக வந்தார்கள். இவர் துணை ஆசிரியர்கள், மாணவர்கள் இவர்களுடன் பழகுவதே அலாதியாக இருந்தது என்று கூறப்படுகிறது. ஆடம்பரம் சிறிது மில்லாமல் எல்லோரையும் சரிசமானமாகவும், மிகுந்த பக்ஷத்துடனும் நடத்திவந்தார். மாணவர்கள் இவரை தகப்பனார் என்றே கருதி வந்தார்கள். இவரது புகழ் நாளுக்கு நாள் எங்கும் பரவிற்று. இவருக்கு நோபல் பரிசு தரப்பட்டது. ராயல் ஸொஸைடியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இச்சங்கத்தின் சார்பாகப் பல பிரமுகர்களுடன் ஐந்து வருஷங்களுக்கு முன் நம்நாட்டில் நடந்த அகில இந்திய விஞ்ஞான சங்கத்தின் வெள்ளிவிழாக் கூட்டத்திற்கு வர இருந்தார். ஆனால் விதியின் பயனாக நோய்கண்டு 1937 ம் வருஷம் அக்டோபர் மாதம் 15 ம் தேதியன்று இறந்துவிட்டார். இவரது தலைமை உரை அக்கூட்டத்தில் ஜேம்ஸ் ஜீன்ஸ் என்ற மற்றொரு பெரியாரால் வாசிக்கப்பட்டது. இவரது பிரிவை விஞ்ஞான வுலகம் முழுவதும் வருந்திற்று. இப்பெரியாரின் புகழுக்குக் காரணமாயுள்ள அவரது வேலையை இப்பொழுது கவனிப்போம்.

எம். எ. பரீக்ஷைக்காக வாசித்துக் கொண்டிருந்த பொழுது ஹெர்ட்ஸ் என்ற பெரியாரால் உற்பத்தி செய்து காண்பிக்கப்பட்ட மின்காந்த அலைகளின் மீது இவரது கவனம் சென்றது. அடுக்கம் (Frequency) மிகுந்த அவ்வலைகளைக் கொண்டு அயல் நாடுகளுக்குச் சமாசாரம் முதலியவற்றை அனுப்ப கூடுமென்று விஞ்ஞானிகள் உணர்ந்தார்கள். எனவே செய்தி அனுப்புமிடத்தில் இவ்வலைகளின் மீது பதிவு செய்யப்பட்ட ஒலித்துடிப்புகளை கேட்குமிடத்தில் மீண்டும் பெறுவதற்குண்டான சாதனங்களை இயற்றலானார்கள். இவற்றிற்கு ஒலியகங்

கள் (Detectors) என்று பெயர். ருதர்போர்டு இச்சாதனங்களில் ஒன்றான **காந்த ஒலியகம்** என்பதை இயற்றி, கல்லூரி மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பரிசோதித்துக் காண்பித்தார். ஆஸ்திரேலியாவில் மின்காந்த அலைகளைப் பயன்படுத்திக் காண்பித்தது இதுவே முதல் தடவையாகும். இவர் கேம்பிரிட்ஜுக்கு வந்த பின்னரும் இவர் கண்டுபிடித்த காந்தஒலியகத்தைத் திருத்தி அமைப்பதில் சிலகாலம் செலவிட்டார். இவர் வந்த சமயம் விஞ்ஞான உலகில் வியக்கத்தக்க இரண்டு நிகழ்ச்சிகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. ஒன்று ஜே. ஜே. தாம்ஸன் கண்டுபிடித்த மின்னுரு (Electron); மற்றொன்று ராண்ட்ஜன் கண்டுபிடித்த **எக்ஸ்—கிரணங்கள்**. எக்ஸ்—கிரணங்கள் ஒரு வாயுவின் மூலமாகச் சென்றால் அவ்வாயு அணுக்கள் சிதறுண்டு **மின்னுருக்**களாகவும், மற்றவைகளாகவும் பிரிந்துவிடுகின்றன எனக்கண்டார்கள். இந்நிகழ்ச்சி அயனப்படுதல்(Ionisation) எனப்படும். இவ்வாறு அயனப்படுத்தப்பட்ட வாயுக்களின் இயல்புகளை ஆராய்ந்து அவற்றுக்குண்டான விதிகளை ருதர்போர்டுதான் பரிசோதித்துக் காண்பித்தார்.

கதிரியக்கம், அணுக்கரு இவைகளைப் பற்றி இவர் கண்டுபிடித்த விஷயங்களே இவருக்கு என்றும் அழியாப் புகழைத் தந்தன. 1896-ம் ஆண்டில் ஹென்றிபெக்குவரல் என்னும் பிரெஞ்சு அறிஞர் கதிரியக்கத்தைக் கண்டு பிடித்த போதிலும் இக்கதிரியக்கத்தின் இயல்பையும், அதன் விளைவுகளையும் நன்கு ஆராய்ந்து உலகிற்குக் காட்டியவர் ருதர்போர்டேயாவர். அணுக்கருவின் அமைப்பைப்பற்றிய அறிவெல்லாம் இவர் கண்ட முடிவுகளைக்கொண்டு பெற்றதேயாகும். இவற்றைச் சற்று விரிவாக இங்கு கவனிப்போம்.

சில தாதுப்பொருள்களிலிருந்து தாமாகவே கிரணங்கள் வெளிப்படுவதே கதிரியக்கம் என்னும் நிகழ்ச்சியாகும். உதாரணமாக யுரேனியம், தோரியம், ரேடியம் என்னும் தாதுக்களில் சிறிதளவு எடுத்துக்கொண்டு காணலாம். இவர் ஒரு ஈயக்கிண்ணத்தில் சிறிதளவு யுரேனியத்தாதுவை எடுத்துக்கொண்டு, அதனின்று வெளிவரும் கிரணங்களைச் சோதனை செய்து மூன்றுவகைக் கிரணங்கள் வெளிவருவதைக் காட்டினார். இக்கிரணங்களுக்கு **ஆல்பா கிரணங்கள், பீடா—கிரணங்கள், காமா—கிரணங்**கள் என்று பெயரிட்டார். மேலும் சோதனைகள் நடத்தி ஆல்பா—கிரணங்கள் மிகைச்சுமையேறிய துகள்கள் என்றும், பீடா—கிரணங்கள் குறைச்சுமை கொண்ட மின்னுருக்களே என்றும் காட்டினார். ஆனால் காமாக்கிரணங்கள் ஒருவித மின்சுமையும் இல்லாமலிருப்பதை அறிந்தார். பதார்த்தங்கள் மூலம் இக்கிரணங்களெல்லாம் ஊடுருவிச் செல்லும் சக்திவாய்ந்திருப்பதையும், வாயு அணுக்களைச் சிதறடித்து அயனப்படுத்தும் திறமையும் பெற்றிருப்பதைக்கண்டார். இவ்வியல்புகள் ஒவ்வொருவிதக் கிரணங்களுக்கும் ஒவ்வொருவிதமாக இருப்பதை உணர்ந்தார். பீடா—கிரணங்கள், காமா—கிரணங்கள் இவற்றைக்காட்டிலும் ஆல்பா—கிரணங்கள்மீது இவரது கவனம் அதிகம் சென்றது. இவ்வாராய்ச்சிகளில் ஸாடி என்ற மற்றொரு பிரசித்தி பெற்ற விஞ்ஞானியும் இவருடன் உழைத்துவந்தார். ஆற்றலின் அழிவின்மை விதிக்குமாறாக இக்கதிரியக்க தாதுக்கள் ஓயாமல் கிரணங்களை வெளியிடுவது அத்தாதுக்களின் அணுக்கள் சிதைவுறுவதால் ஏற்படும் நிகழ்ச்சி என்று இருவரும் கூறினார்கள். பீடா தாதுக்களைக் காட்டிலும் பன்மடங்கு ஆல்பா கிரணங்கள் நிறைகொண்டிருப்பதைக் கண்டார்கள். ஆல்பாதாதுகள் நீரக அணுவின்றிறையில் (Hydrogen atom) நான்கு மடங்கு கொண்டிருப்பதை அறிந்தார்கள். கதிரியக்கத்தினால் கனமான அணுக்கள் தாமாகச் சிதைந்து ஆல்பாதுகள்களை வெளியிட்டு, எளிய அணுக்களாக மாறுவதைக்கண்டார்கள். யுரேனியம், தோரியம் முதலிய பொருள்களில் எல்லிய (Helium)மும் கூடக் காணப்படுவதிலிருந்து ஒருகால் • கதி

ரியக்கச் சிதைவினால் எல்லியம், யுரேனியம், தோரியம் முதலிய தாதுக்களின் அணுக்களிலிருந்து வெளியிடப்பட்டிருக்குமோ என்று ரூதர்போர்டு சந்தேகித்தார். அப்படியானால் ஆல்பா துகள்களும் எல்லியமும் ஒன்றாயிருக்குமோ என்று நினைத்தார். நிறமாலைமானியைக் கொண்டு பரிசோதனைகள் நடத்தி இரண்டும் ஒன்றே என்று நிரூபித்துக் காண்பித்தார். மேலும் கதிரியக்கம் சூடு முதலிய பௌதிக நிலைகளினாலும், இரசாயன மாறுபாடுகளினாலும் பாதிக்கப்படாமலிருப்பதைக்கண்டார்.

மேற்கூறிய கதிரியக்கம் தானாகவே ஏற்படுவது இந்நிகழ்ச்சியே யன்றிக் கதிரியக்கத்தைத்தூண்டவும் செய்யலாம் என்று அறிந்தார். கதிரியக்கச் சிதைவினால் ஒரு தாது மற்றொரு தாதுவாக மாறுவதைக்கொண்டு இழிந்த உலோகங்களை மாற்றுயர்ந்த பொன்னாக்க முயன்ற பண்டைக்காலத்து இரசவாதிகளின் கனவு உண்மையே என்று கூறினார். இவ்வாறாகக் கதிரியக்கத்தைப்பற்றி அனேக விஷயங்களை அறிந்து வெளியிட்டார்.

இவ்வாராய்ச்சிகளின் முடிவுகளே அணு அமைப்பைப்பற்றித் தற்காலம் வழங்கிவரும் கொள்கைக்கு ஆதாரமாயிற்று. இதில் இவருக்கு பேருதவி செய்தவர்கள் மாஸ்லி, நீல்ஸ்போர் என்னும் விஞ்ஞானிகள் ஆவர். ஜே. ஜே. தாம்ஸன் மின்னுருக்களைக் கண்டுபிடித்ததும் ஒவ்வொரு அணுவிலும் இத்தகைய மின்னுருக்கள் இருக்கவேண்டுமென்று அறிந்தார்கள். இச்சிறு துகள்கள் குறைச்சுமை ஏற்றிருப்பதை முன்பு கண்டோம். அணுக்கருவிலிருந்து கதிரியக்கத்திலே ஆல்பா துகள்கள் வெளிப்படுவதால் கருவில் ஆல்பா துகள்கள் இருப்பது தெளிவாயிற்று. ரூதர்போர்டு இத்துகள்கள் மிகைச்சுமைகொண்டு இருப்பதையும், அணுவின் விட்டத்திலே இவை மிகச் சிறிதான பாகத்தினளவே இருப்பதையும் கண்டார். எனவே மிகைச்சுமை கொண்டுள்ள பாகம் கரு எனப் பெயர்பெற்றது. எல்லா அணுக்களின் நிறையும் நீரக அணுநிறையின் பல மடங்காக இருப்பதால் சில அணுக்களிலே நீரக அணுக்கருவாகிய நிறையுரு (Proton) இருக்கவேண்டியிருக்கிறது. கருவைச்சுற்றி மின்னுருக்கள் ஓடிவரவேண்டுமென்று ரூதர்போர்டு கருதினார். ஒவ்வொரு அணுவிலும் இவ்வாறு ஓடிவரும் மின்னுருக்களின் அளவு கருவின் மிகைச்சுமைக்குச் சரியாக இருப்பதை உணர்ந்தார். இதுவே அணு எண் (Atomic mumber) எனப்படும். மாஸ்லி என்ற பேரறிஞரின் பரிசோதனைகளால் இவ்வணு எண்ணின் பெருமை வெளிப்பட்டது. இரசாயன இயல்புகளைப் பற்றியவரை ஒவ்வொருதாதுவுக்கும் அதன் அணு நிறையைவிட அணு எண்ணே அடிப்படையானது எனக்கண்டார்கள். அணுக்கருவிலிருந்து பீடா துகள்கள் வெளிப்படுவதால் கருவில் ஆல்பா துகள்களுடன் பீடா துகள்களாகிய மின்னுருக்களும் இருக்கின்றன என்று ரூதர்போர்டு காட்டினார். சமீபத்தில், இவருடன் ஆராய்ச்சி நடத்திவந்த சாட்விக் என்ற விஞ்ஞானி நீரக கருவின் நிறையும் அதோடு அலிச்சுமையையும் கொண்ட அலியுரு (Neutron) என்னும் ஒரு துகளைக்கண்டுபிடித்தார். ஆண்டர்ஸன் என்ற மற்றொரு விஞ்ஞானி மின்னுருவின் நிறையும், அதற்குச் சமமான மிகைச்சுமையும் கொண்ட மிகையுரு (Positron) என்னும் மற்றொருதுகளைக் கண்டுபிடித்தார். அணு அமைப்பில் இவையும் பங்கு எடுத்துக் கொள்வதாகக் கருதப்படுகின்றன. இதனால் அணு அமைப்பைப்பற்றிய கருத்துகள் சிறிது மாறுபாடடையக்கூடும். இவ்வாறாக அணு அமைப்புக் கருத்துகள் முழுவதும் ரூதர்போர்டின் ஆராய்ச்சிகளின் பயனாக ஏற்பட்டவையே என்பதை நோக்க அப்பெரியாருக்கு விஞ்ஞான உலகம் என்றும் கடமைப்பட்டிருக்கின்றது என்று சொல்லாமலே விளங்கும்.

ஹரிசரண்

கதை: சரத்சந்திரர்.
தமிழ்: கே. ஜி. சங்கரன்.

குழந்தைப் பருவத்தில் எங்கிருந்தோ தாய் தகப்பன் இல்லாத ஒரு அனாதைக் காயஸ்தப் பையன் ராம்தாஸ்பாபுவின் வீட்டில் சரண்புகுந்தான். எல்லாரும் சொன்னார்கள், "பையன் நிரம்ப நல்லவன். நல்ல அழகும் புத்தியும் வாய்ந்த வேலைக்காரன், துர்க்காதாஸ் பாபுவின் தகப்பனுக்கு மனதிற்கு நன்கிசைந்த வேலைக்காரன்" என்று. எல்லா வேலைகளையும் அவன் தானாகவே இழுத்துப் போட்டுக்கொண்டு செய்வான். பசுவுக்கு வைக்கோல் போடுவதிலிருந்து பாபுவுக்கு எண்ணெய் தேய்ப்பதுவரை எல்லாவற்றையும் அவன் தானாகவே செய்ய விரும்புவான். எப்பொழுதும் வேலை செய்துகொண்டிருப்பதே அவனுக்கு ரொம்பவும் பிடிக்கும்.

பையன் பெயர் ஹரிசரண்! வீட்டு யஜமானி அநேகமாய் ஹரிசரண் செய்யும் வேலையைக்கண்டு பிரமிப்பாள். நடுவில் நடுவில் தடுத்தும் பார்ப்பாள். சொல்வாள், "ஹரி, எவ்வளவோ வேலைக்காரர்கள் இருக்கிறார்கள்; நீ சிறு பையன் ஏன் இவ்வளவு பாடுபடுகிறாய்!" என்று. ஹரியின் குறைகளில் ஒன்று, அவன் எதற்கும் சிரிப்பான், சிரித்துக்கொண்டே பதில் உரைப்பான். "அம்மா, நான் ஏழை. நெடுநாள் நான் பாடுபடவேண்டும். அப்படியில்லாமல் சும்மா உட்கார்ந்திருந்தால், என்னவாகும்!" என்பான்.

இப்படி வேலையிலும், சுகத்திலும், துக்கத்திலும் அன்பின் மடியில் ஹரிசரனுக்குச் சுமார் ஓராண்டு சென்றுவிட்டது.

* * *

துர்க்காதாஸுக்கு எப்பொழுது இருபது வயதோ, அந்தகாலக்கதை இது. துர்க்காதாஸ் இதுவரை கல்கத்தாவில் படித்துவந்தான். வீட்டுக்கு வரவேண்டுமானால், ஸ்டீமரில் தெற்கே போகவேண்டும். அப்புறம் கால்நடையாய் பத்துக் கிரோசம் நடக்கவேண்டும். அநேகமாய் வழி காடு- முரடானதே. அதனால்தான் துர்க்காதாஸ் பாபு ஒரு தடவையும் வீட்டுக்கு வந்துபோகவில்லை.

பீ. ஏ. பாஸானவுடன் அவன் வீட்டுக்கு வந்தான். வந்ததும் துர்க்காதாஸ் கேட்டான், "அம்மா, இந்த பையன் யார்?" என்று.

"இவன் ஒரு காயஸ்தப்பையன். அப்பா, அம்மா இல்லை. ஆகையால், உன் தகப்பனார் இவனைத்தன்னிடம் கூட்டிக் கொண்டார். வீட்டு வேலையெல்லாம் செய்கிறான்; அத்துடன் நல்ல சாந்த குணம்; என்ன சொன்னாலும் கோபித்துக்கொள்வதில்லை. ஆஹா! அப்பா அம்மா இல்லை; சிறு பையன்; எனக்கு ரொபபப் பிடித்தவன்." என்றாள் அவன் தாயார்.

வீட்டுக்கு வந்ததும் துர்க்காதாஸுக்கு ஹரிசரண் இவ்வாறு பரிசயம் ஆனான். நாளுக்குநாள் ஹரிசரனுக்கு வேலை குவிந்துக்கொண்டே இருந்தது. அதில் அவனுக்குத் திருப்தியே தவிர அதிருப்தியில்லை சின்னபாபுவுக்கு (துர்க்காதாஸுக்கு) குளிப்பாட்டுவது, வீட்டுக்கு வேண்டிய ஜலம் சுமப்பது, மணிக்கணக்கில் குடிக்கக்கொடுப்பது, வேளா வேளையில் ஹுக்கா முதலானவை தயாரிப்பது, இந்த வேலைகளில் ஹரிசரண் மிகுந்த திறமையுள்ளவன். துர்க்காதாஸ் பாபுவும் அநேக வேளைகளில் நினைப்பான்: "பையன் நல்ல புத்சாலி" என்று. முக்கியமாக உடைகளை மடித்துவைப்பதும், புகையிலை தயாரிப்பதும் ஹரிசரண் செய்யாவிட்டால் துர்க்காதாஸ் பாபுவுக்குத் திருப்தியாகாது.

* * *

இன்று துர்க்காதாஸ் பாபுவுக்கு ஒரு விருந்துக்கு அழைப்பு வந்திருக்கிறது. ஆகவே அவர் வீட்டில் சாப்பிடமாட்டார். ஒருவேளை இரவில் நெடுநேரம் கழித்தே வீட்டுக்குத்திரும்புவார். ஆகையால் ஹரிசரணிடம் படுக்குமுன் தினசரி வேலையை எல்லாம் முடித்துவைக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு வெளியே சென்றார்.

இப்பொழுது ஹரிசரண் சமாசாரத்தைச் சிறிது சொல்லவேண்டும். துர்க்காதாஸ்பாபு வெளியில் உட்காரும் அறையிலேயே இரவில் படுப்பான். துர்க்காதாஸுக்கு படுக்கைவிரிப்பது, கால்பிடிப்பது முதலான வேலைகள் ஹரிசரணுக்கு இருந்தன. பிறகு பாபுவுக்கு ஒழுங்காய் தூக்கம் வந்ததும், ஹரிசரண் படுக்கப் போவான்.

பாபு விருந்துக்குப் போய்விட்டார். அன்று இருட்டுமுன்னரே ஹரிசரணுக்குத் தலைவலிக்கத் தொடங்கியது. ஜ்வரம் வர அதிகநாழி ஆகாதென்று ஹரிசரண் அறிந்தான். நடுவில் நடுவில் அவனுக்கு ஜ்வரம் வந்ததுபோலவே தோன்றியது. அதன் அடையாளங்களெல்லாம் அவனுக்கு நன்றாய்த்தெரிந்தன. அவனால் கண்விழித்து உட்காரமுடியவில்லை. அறைக்குள் சென்று தூங்கிவிழுந்தான். பாபுவின் படுக்கை போடப்படவில்லை என்பது அவன் மனதில்படவில்லை. இரவில் எல்லாரும் ஊண் முதலானவை முடித்தார்கள். ஹரிசரண் மாத்திரம் வரவில்லை. அதை அறிந்த யஜமானி வந்தாள். ஹரிசரண் தூங்கிக்கொண்டிருந்தான். உடம்பைத் தொட்டுப்பார்த்தாள். மிகவும் சூடாய் இருந்தது. ஜ்வரம் வந்திருப்பதாக அறிந்தாள். ஆகையால் அவனை உபத்திரவிக்காமல் போய்விட்டாள்.

இரவில் கிட்டத்தட்ட இரண்டாம் ஜாமம் ஆயிற்று. உண்டுகளித்துவிட்டு துர்க்காதாஸ் பாபு வீட்டுக்குப் புறப்பட்டார். விருந்து சுகத்தால் களைப்புற்றிருந்த அவர் 'மறுபடியும் வழி நெடுக நடந்து எப்படி வீடுசேர்வோம்! சாய்ந்தபடியே படுத்திருக்க ஹரிசரண் நம் கால்கள் இரண்டையும் மெள்ள மெள்ளப் பிடிப்பான்; அந்த ஸுகத்தில் பாதி ஹுக்கா பிடித்தவாறே நாளைப்பொழுது விடிவதைப் பார்ப்பேன்' என்று இப்படியெல்லாம் நினைத்துக்கொண்டே வீடு வந்து சேர்ந்தார்.

வீட்டுக்கு வந்தார். அவர் எதிர்பார்த்தபடி ஒன்றும் அமையவில்லை. ஒரேஅடியாய் ஆசைகள் சிதறிவிடவே கடும் கோபமூண்டு எழுந்தார். இரண்டு மூன்று தடவை 'ஹரிசரண், ஹரி,' என்றெல்லாம் கத்தினார். ஆனால் எங்கே ஹரி? அவன் ஜ்வரத்தின் கடுமையால் சுருண்டு விழுந்துகிடந்தான். அறைக்குள்போய்ப் பார்த்தார் ஹரி தலையை நன்றாய் மூடி உறங்கிக்கொண்டிருந்தான். இனியும் அவரால் பொறுக்க முடியுமா? ஹரியின் குடுமியைக் கெட்டியாய் பிடித்துக்கொண்டு, அவனை தூக்கி உட்கார்த்தப் பார்த்தார். ஆனால் ஹரி நழுவி படுக்கையின்மேல் மறுபடியும் தூங்கிவிழுந்தன். அப்பொழுது கடுங் கோபமுற்று துர்க்காதாஸ் பாபு நல்லது கெட்டது எல்லாவற்றையும் மறந்தார். கால் பூட்ஸால் ஹரியின் முதுகில் உதைத்தார். அந்த அச்சம் விளைக்கும் அடியால், அறிவுற்று ஹரி எழுந்து உட்கார்ந்தான். துர்க்காதாஸ் கோபித்தார், "பச்சைக்குழந்தை, தூங்கிவிட்டது! படுக்கையை நானே போட்டுக் கொள்ளவேண்டுமோ!" பேசப்பேச அவருக்கு கோபம் பொங்கிற்று. கைப்பிரம்பால் இன்னும் இரண்டு மூன்று அடிகள் ஹரிசரண் முதுகில்விழுந்தன.

ஹரி இரவில் கால்பிடிக்கும் பொழுது ஒரு சொட்டு சுடுநீர் துர்க்காதாஸ் பாபுவின் காலின் மேல் விழுந்ததென்று நினைக்கிறேன்.

* * *

இரவுமுழுதும் துர்க்காதாஸுக்குத் தூக்கம் வரவில்லை. பாபுவுக்கு ஹரிசரணிடம் மிகவும் அன்புண்டு. தனது வணக்கத்தால் ஹரிசரண், துர்க்காதாஸ் பாபு

மாத்திரமா, எல்லாருடைய அன்பிற்கும் உரியவனாய் இருந்தான். அதுவும் இந்த ஒரு மாஸத்தில் நெருங்கிப் பழகிய பாபுக்கு அவனிடம் அன்பு இன்னும் அதிகரித்திருந்தது.

இரவில் எத்தனைதடவை துர்க்காதாஸ் பாபுவின் மனதில் தோன்றும் 'ஒருதரம் பார்த்துவருவோம் எவ்வளவு அடிப் பட்டது, எவ்வளவு வீங்கி யிருக்கிற தென்று!' ஆனால் அவன் வேலைக்காரன்! அப்படிச்செய்வது நன்றாய்த் தோன்றாது. எத்தனை தடவை நினைத்தார், 'ஒருமுறை கேட்டுவருவோம் ஜ்வரம் குறைந்திருக் கிறதா? என்று!' ஆனால் வெட்கம் குறுக்கிட்டதென்று நினைக்கிறேன்.

காலையில் ஹரிசரண் முகம் கழுவ ஜலம் கொண்டுவந்தான். துர்க்காதாஸ் அப்பொழுதாவது பேசியிருக்கக் கூடாதா? அவன் குழந்தைதானே! வயது பதிமூன்றுகூட ஆகவில்லை. "ஹரி!" என்று ஒருதடவை அவனை அருகில் அழைத்து பார்த்திருக்கக்கூடாதா பிரம்பு அடியால் எப்படி ரத்தம்கட்டியது, செருப்பின் உதையால் எப்படி வீங்கி விட்டதென்று! குழந்தையிடம் இன்னும் வெட்கமேன்?

ஒன்பது மணிக்கு எங்கிருந்தோ ஒரு தந்தி வந்தது. தந்தி என்றதும் துர்க்காதாஸின் மனம் எப்படிக் கலங்கியது! திறந்து பார்த்தார். அவர் மனைவிக்கு ஏதோ கொடிய நோயாம்! திடீரென்று அவர் நெஞ்சில் கைவைத்து உட்கார்ந்தார். அன்றே அவருக்குக் கல்கத்தாவுக்குப் புறப்பட்டுப் போகவேண்டியதாயிற்று. வண்டியில் ஏறியதும் "பகவான்! இதுதான் எனக்குப் பிராயச்சித்தமா?" என்று எண்ணிக் கண்ணீர் வடித்தார்.

* * *

ஒரு மாஸம் சென்றது. துர்க்காதாஸின் முகம் நன்கு மலர்ந்தது. அவர் மனைவி இந்தத்தடவை பிழைத்துவிட்டாள். இப்பொழுது பத்தியம் சாப்பிடுகிறாள்.

வீட்டிலிருந்து இன்று ஒரு கடிதம் வந்தது. அது அவருடைய கடைசித்தம்பி எழுதியது. அடியில் ஓரிடத்தில் எழுதியிருந்தது, "ரொம்ப வருத்த சமாசாரம்—நேற்றுக் காலையில் பத்துநாள் ஜ்வரத்திற்குப்பிறகு நம் ஹரிசரண் இறந்துவிட்டான். இறக்குமுன் அவன் பல முறை உன்னை பார்க்க விரும்பினான்."

ஆஹா! அப்பா, அம்மா இல்லாத அனாதை!

மெள்ள துர்க்காதாஸ்பாபு கடிதத்தை நூறு சுக்கலாகக் கிழித்து எறிந்தார்.



ஆட்கொள்ளுவாயா?

'ராமன்'

பாரைப் பகவன் மணத்துடன் பிறப்பித்து, அதில்
செழுமையும் செல்வமும் நிறைவறக் கொடுத்தான்.
பிரகிருதியின் களிநடம் மாந்தரை அணைந்து
சுகமும் சோதசும் நிரப்பி நின்றது.

அந்தோ! சனியின் சாயை மண்ணில் விழுந்தது!
மானிடன் மூளை அந்நிழலில் தங்கிற்று.

பிறகு? பாலும் தேனும் பெருகிய பாரினில்
கரியும் இரும்பும் தவிர்ந்து எழும்பின!
அன்பும் ஈகையும் அரும்பின பூமியில்
சண்டையும் பூசலும் சூழ்ந்து புகைந்தன!

அந்தம் மங்கியது—ஆனால் அன்னையே!
உன் அன்பும் கனிவும் என்றும் மறையா!
செயற்கைச் சூர மானிடன் உன்னை அலங்கோலப்
படுத்திவிட்டான்;
மண்ணொடு மண்ணாகி உன்மடியில் துயிலுபவன்
தானே கடைசியில்!
அவனை மன்னித்து ஆட்கொள்ளுவாயா?

இளைய தாரம்

எஸ். குஞ்சிதபாதம்

விஸ்வேச்வரன் மேல்மாடியில் ஒரு மடக்கு நாற்காலிமேல் உட்கார்ந்து கண்களை மூடிக்கொண்டிருந்தான். மனக்கண் திறந்தது; அந்தக்கரணத்தில் நிகழ்பவைகளைப் பார்த்தது; பார்த்துத் திடுக்கிட்டது. கண்களைத் திறந்தான். வானத்தில் நட்சத்திரங்கள் காலபரிவர்த்தனத்தின் நியமப்படி அணிவகுத்து நின்றன. தெருக்களில் மின்சார விளக்குகள் பிரகாசித்தன. எதிர் வீட்டிலிருந்து ஆகாயவசனியின் த்வனி எழுந்து காற்றுடன் கலந்தது. ஆகாயத்திலிருந்து கிரஹிக்கப்பட்ட சங்கீதம் ஆகாயத்திலேயே ஐக்கியமாயிற்று. ஆஹா! விஞ்ஞான ஆராய்ச்சியின் என்னென்ன ரஸம் நிறைந்த பழங்கள்! ஆனால், மனித உள்ளத்துக்குச் சாந்தியளிக்கும் புதிய யந்திரத்தைக் கண்டுபிடிக்கும் விஞ்ஞானி ஒருவன் உண்டாகமாட்டானே!

விஸ்வேச்வரன் கீழேயிறங்கிப் படுக்கையறையை அடைந்தான். மெதுவாகக் கதவைத்திறந்தான். குறைந்த காந்தியுள்ள மின்சார விளக்கொன்று ஹிருதயத்தின் மந்த சோகத்தைப் போல தெளிவில்லாமல் ஒளித்துக்கொண்டிருந்தது. ஒரு கட்டிலின் அடியில் ஒரு பெண் மண்டியிட்டு உட்கார்ந்து, இரு கைகளையும் கூப்பியவண்ணம், தலையைக் சட்டியின் ஓரத்தில் சாய்த்துக்கொண்டிருந்தாள். விஸ்வேச்வரன் அவள் பக்கத்தில் சென்று நின்றான். கீழே குனிந்து மெள்ள அவள் தலையைத் தடவினான்.

அவள் எழுந்தாள். கண்களைத்துடைத்துக்கொண்டாள். தலையைக் குனிந்து மௌனமாயிருந்தாள். அவன் அவளது இரு கைகளையும் பற்றிக் கட்டிலில் அமர்ந்து, அவளைத் தழுவி இழுத்துப் பக்கத்தில் உட்கார்த்தினான். பிறகு அவளது கன்னங்களைப் பிடித்துக் கீழே குனிந்திருந்த முகத்தை நிமிர்த்திப் பார்த்தான். உற்றுப் பார்த்தான். அழகிய முகம்தான் அது; ஆனால் அழகின் சின்னங்கள்மட்டுமே இப்பொழுது அதில் காணப்பட்டன. 'கண்ணே!' என்றான் அவன்.

அவள் எழுந்தாள். "என்னைத் தொடாதீர்கள். ஐயோ! நீங்கள் தொடுவதால் என் மனம் இன்னும் குமுறுகிறது. தனியே துக்கப்படுகிறேன். துக்கம்தான் உண்மையான பிரேமையின் இருப்பிடம். ஸ்பர்சம் இல்லாமல் இருந்தால் மனம் புனிதமாகிறது" என்று சொன்னாள்.

"எனக்கும் நோய் வந்துவிடுமென்று அஞ்சுகிறாயா? இந்தப் பயம் தொலைவதற்காக எனக்கும் நோய் வரவேண்டும். பிறகு நோய் உண்டாகும் என்ற பயம் தொலையும். அப்புறம் உன்னைத் தொடலாம். உன் உதடுகளில் என் உதடுகளையும் பதிய வைக்கலாம்." என்று விஸ்வேச்வரன் சொன்னான்.

"அப்படிச் சொல்லாதீர்கள். நீங்களே என்சர்வமும்; உங்கள் சரீரம் திடமாயிருந்தால்தான் என்மனமாவது திடமாயிருக்கும்" என்றாள் ராதா.

ராதா விஸ்வேச்வரனின் மனைவி. அவளுக்குக் காசநோய் வந்துவிட்டது. செய்யாத வைத்தியங்கள் இல்லை. போகாத கோயில்கள் இல்லை. முழுகாத திருக்குளங்கள் இல்லை. ஆனாலும் நோய் தீவிரமாகப் பற்றிக்கொண்டுவிட்டது. விஸ்வேச்வரனுக்கு அவளிடம் இருந்த பிரேமையை அளவிடமுடியாது. சேரா லா, கஜத்தாலா, மரக்காலாலா எப்படி உணர்ச்சியை அளவிட முடியும்? ஆகவே அதற்கு அளவில்லை

பேசாமல் படுத்துக்கொண்டான் விஸ்வேச்வரன். அவளும் அப்பால் சென்று படுத்துக்கொண்டாள்.

பொழுது விடிந்தது. அவள் எழுந்து சென்றாள். விஸ்வேச்வரனின் தாயார் வந்தாள். 'விச்வம்' என்று கூப்பிட்

டாள். எழுந்து உட்கார்ந்தான் "அப்பா! நான் சொல்வதைக்கேள், ராதையின் சரீரம் வரவர வற்றி மெலிந்து போகிறது. தெய்வமே என்று அவள்பாட்டுக்கு இருக்கிறாள். நான் சொல்வதைத் தட்டாதே" என்றாள்.

"முடியாது! நான் சௌக்கியமாக நிம்மதியுடன் இருக்கவேண்டுமென்றால் இனிமேல் இரண்டாந்தரம் மணக்கவேண்டுமென்று வற்புறுத்தாதே" என்று கடிந்து சொன்னான்.

தாயார் கெட்டிக்காரி. அதற்குமேல் அப்பொழுது ஒன்றும் சொல்வது உசிதமில்லை என்று இங்கிதமாகப் போய்விட்டாள்.

அன்று பகல் அவன் தனியாக இருக்கும்போது ராதா வந்தாள். "நான் திருப்தியுடன் இருக்கவேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"என்ன ராதா? உனக்கு அதிருப்தி உண்டாகும்படி என்ன உண்டாகிவிட்டது, சொல் உனக்காக நான் எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன்" என்று சொன்னான் அவன்.

"நான் சொல்கிறதைக் கொஞ்சம் காதுகொடுத்துக் கேட்கவேண்டும். உங்கள் சௌக்யம் என் சௌக்யம். இப்பொழுது என்காரணமாக உங்கள் தாம்பத்ய வாழ்க்கை கெட்டுப்போகிறது. உங்கள் தாம்பத்ய வாழ்க்கையில் சிரத்தையுடையவள் நான். நானே இருந்தாலென்ன, வேறொரு பெண்ணாக இருந்தாலென்ன உங்கள் மணவாழ்க்கை சௌக்யமாக இருப்பதே எனக்கு ஆனந்தம். இன்னொரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டீர்களோ நான் திருப்தியடைவேன்" என்று ராதா சொன்னாள். அவன் சற்றுநேரம் மௌனமாயிருந்தான். "போடி: அசடு!..........." என்றான். பேச்சு மேலே வரவில்லை. அத்துடன் நின்றது.

2

திருமங்கலம் ஒரு சின்ன கிராமம். அங்கே ஒருவர் பிறந்தார், வளர்ந்தார் கல்யாணம் செய்துகொண்டார், ஒரு பெண்குழந்தை பிறந்தது. பிறகு அவர் செத்துப்போனார். அவருக்கு நிரம்பசொத்து இருந்தது. குழந்தையின் பெயர் தங்கமணி; தாயின்பெயர் நாகவல்லி. நாகவல்லி தங்கமணியை அருமை பெருமையாக வளர்த்தாள். தங்கமணி யுவதியானாள்; நாகவல்லி கிழவியானாள். அவளுக்கு ஜுரம் வந்தது. நாகவல்லியின் தமையன் விஸ்வேச்வரனின் தகப்பனார். அவர் உள்ளவரையில் அடிக்கடி தங்கையை வந்து கவனித்துப்போவார். விஸ்வேச்வரனும் எப்பொழுதாவது வந்து இரண்டொருநாள் தங்கிவிட்டுப்போவதும் உண்டு. அவனுக்குத் தந்திகொடுத்தனுப்பினாள் நாகவல்லி. தந்தி பெற்றதும் அவனும் வந்தான். விஸ்வேச்வரன் திருமங்கலத்திற்கு வந்ததிலிருந்து தானே நாகவல்லிக்கு சிச்ருஷைகள் செய்ய ஆரம்பித்துவிட்டான். வேளாவேளைக்கு அவனே மருந்துகொடுப்பான். அடிக்கடி தர்மாமீடரை அவள் வாயில் சொருகி எடுத்துப் பார்ப்பான். படுக்கையிலிருந்து பழைய துணிகளை எடுத்துவிட்டு வேறு துணிகள்கூட அவனே விரிப்பான். நாகவல்லி அவனிடம் கரைகடந்த வாத்ஸல்யமும், நன்றியறிவும் கொண்டாள்.

கிராமத்தில் ஸினிமா இல்லை. கிளப் இல்லை. மோட்டார் இல்லை. அவனுக்கு அங்கே உற்சாகமே இல்லாமல் பொழுது போய்க்கொண்டிருப்பது போலத்தோன்றியது. வயல்வெளிப் புறங்களையாவது சுற்றிவிட்டு வரலாம் என்று கிளம்பினான். தென்னந்தோப்புகளும், மாமரங்களும், ஆற்றுப்படுகையில் செழித்திருந்த வாழைகளும் அவனுக்கு மனோஹரமாகத்தோன்றின. சில வயல்களில் மெலிந்து தளர்ந்து எலும்பும் தோலாய் எஞ்சிநின்ற மாடுகளைக் கலப்பைகளில் பூட்டி தாரினால் குத்திக் குளறிச் சித்திரவதை செய்தக்கொண்டிருந்தார்கள் குடியானவர்கள். விஞ்ஞான அறிவுமிகுந்த

இந்த நாட்களிலும் இன்னும் இங்கே இப்படிப்பட்ட ஸ்திதியில் விவசாயம் இருக்கிறதே என்று எண்ணினான். சில வயல்களில் பஞ்சம ஜாதி ஸ்திரீகள் பாட்டுப் பாடிக்கொண்டு நடவு நட்டுக்கொண்டிருந்தனர். ஆஹா! நாகரீக ஸமாஜத்தில், திரையில் நிழல் உலவுவதுபோல் வெளியில் சோபித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீகளின் உள்ளத்தில் இந்த நடவுநடும் ஸ்திரீகளின் உத்ஸாகம் இருக்குமோ என்று சிந்தித்தான். கொஞ்சங் கொஞ்சமாகக் கிராம வாழ்க்கை அவனுக்குப் பிடித்தம் உள்ள தாயிற்று.

இதுவரையில் நாகவல்லி அம்மாளின் குடும்ப வரவு செலவுகளை கணக்கப் பிள்ளை ஒருவரே ஏகதேசத்தில் கவனித்துக்கொண்டுவந்தார். விஸ்வேச்வரன் வந்தது அவருக்கு ஆபத்தாகிவிட்டது. கணக்குகளை யெல்லாம் எடுத்துப்பார்த்து இன்கம்டாக்ஸ் ஆபீசரைப்போல அலசு அலசு என்று அலசினான். செல் காய்க்கும் மரத்தைப் பார்த்திருப்பானோ, மாட்டானோ என்று அவனைப்பற்றி இதுவரையில் அவர் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தார். நோட்டுப் புத்தகங்களில் லக்ஷம் குறித்துக் கூட்டிக் கழித்து நாகவல்லி அம்மாளிடம் காண்பிக்கும் தனது சித்திரகுப்த வித்தை விஸ்வேச்வரனிடம் செல்லாது என்பதைக் கண்டு கொண்டுவிட்டார் அவர். "என்ன இருந்தாலும், அஞ்சும் ரெண்டும் தெரியாத பெண்ணைப்பிறந்த பாவம், சொத்தெல்லாம் காற்றும் கரியுமாகப் போய்க் கொண்டிருந்தது. இனிமேல் நீ எல்லாவற்றையும் நன்றாக நிர்வாகம் செய்." என்று நாகவல்லி அவனைக்கேட்டுக் கொண்டாள். அவளுக்கு அவனிடமிருந்த பிரீதி அதிகரித்துக்கொண்டே வந்தது. அவன் பேசுவதே அவளுக்கு மதுரமாக இருந்தது.

3

தங்கமணி விஸ்வேச்வரனுக்கு ரொம்ப ரொம்ப உபசரணைகள் செய்ய ஆரம்பித்துவிட்டாள். விஸ்வேச்வரன் வந்த போதிலிருந்து சமையல்காரிக்குவேலையே குறைந்துவிட்டது. தானே எல்லாம் செய்து, தன் கையாலேயே விஸ்வேச்வரனுக்குப் பரிமாறுவிட்டால் தங்கமணிக்கு நிம்மதி இராது. அவனுக்காக தானே வென்னீர் போட்டுத் தயாராக வைத்திருப்பாள்; அவனோ ஆற்றில் குதித்து நீந்தி முழுகிவிட்டு வருவான்; அவள் ரொம்பக் கோபித்துக்கொள்வாள்—ஜலதோஷம் பிடித்துவிட்டால்? அவளுடைய விளையாட்டுக் கோபத்தில்தான் எவ்வளவு ரஸம் நிறைந்திருந்தது? விஸ்வேச்வரனுடைய மனதில் ஸுகமயமான கற்பனைகள் பொங்கிப் பிரவகித்தன. தன்னுடைய வாழ்நாளில் வேறு என்றுமே இவ்வளவு ஆனந்தம் ஏற்பட்டதாக அவனுக்குத் தோன்றவில்லை. தங்கமணியின் குளிர்ந்த பார்வை அவனை "வாருங்கள்! இந்த ஹிருதய உத்யானத்திலே விச்ராந்தி செய்துகொள்ளுங்கள். இந்த ஓடையில் வெயிலின் தாபத்தைத் தீர்த்துக்கொள்ள இரண்டுகை அள்ளிப் பருகுங்கள்." என்று அழைப்பதுபோல் இருந்தது. இந்த அழைப்பை அவன் மறுக்கமுடியாமல் காவேரிக்கரையிலும், மாந்தோப்புகளிலும், தோட்டங்களிலும் மனதைச் சாந்திசெய்துகொள்ளப்போய் உட்காருவான். தங்கமணியின் கண்களையொத்த ஒரு சேற்கண்டை தண்ணீரினின்றும் எழும்பித் துள்ளிக்குதித்து அவன் மனதைச் சஞ்சலப்படுத்தி மூழ்கிவிடும். மாமரத்திலிருந்து ஒருகுயில் அவள் குரலைப்போலக் கூவி அவன் உள்ளத்திலே உணர்ச்சியை ஆனந்த நடனம் புரியச்செய்யும். ரோஜா மலர்கள் தென்றலின் மயக்கத்திலே ஆடி அவளது அதரங்களை நினைவூட்டி வண்டு தேன் அருந்துவதுபோல அவனைப் பிரேமையின் ரஸத்தைக் குடிக்கச்செய்யும்.

தங்கமணி சிலஸ்வாபவமுள்ளவள். வாய்திறந்து பேசமாட்டாள். தமிழில் உயர்தர காவ்யங்கள் படித்திருந்தாள். ஆங்கிலம் தெரியாது. ஸ்னோ தடவிக் கொள்ளாமலே லாவண்யம் அவள் முகத்தில் பிரகாசித்தது. ஜம்பர்வெட்டு ரவிக்கை யில்லாமலே அவள் மேனி

வசீகரம் பொருந்தியதாக விருந்தது. பளபளவென மஞ்சள் பூசிக்குளிப்பாள்; கொழு, கொழுவென நுரைக்கும் சோப்பை அவள் தொடுவதில்லை. ஸ்பஷ்டமான, ஆடம்பரமற்ற தேஜஸுடன் அவள் திகழ்ந்தாள்.

ஒருநாள் இரவு அவன் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கும்போது தங்கமணி தன்னைக் கூப்பிடுவதைக்கேட்டு எழுந்தான். அவள் முகம் கலவரமடைந்திருந்தது. 'அம்மாவை வந்து பாருங்கள்' என்றாள். விஸ்வேச்வரன் நாகவல்லியினருகில் சென்றான். முனகிக் கொண்டிருந்தாள். சமையல்காரி அவளுடைய கால்களைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். நாகவல்லியின் கண்கள் சுழன்றன. விஸ்வேச்வரன் டாக்டரை அழைத்துவர நகரத்திற்கு ஆளை ஓடச்சொன்னான். நாகவல்லி என்னவோ சொல்ல நினைத்தாள். பேச்சு எழவில்லை. அவ்வளவுதான்! நாகவல்லி உயிர் நீத்தாள். தங்கமணி அழுது அழுது அவள் நெஞ்சு காய்ந்தது. நாகவல்லியின் அந்திம ஸம்ஸ்காரங்கள் ஆனபின்னர், தங்கமணியை அழைத்துக்கொண்டு விஸ்வேச்வரன் புறப்பட்டான்.

4

கிராமத்திற்கும் பட்டணத்திற்கும் தான் என்ன வித்தியாசம்? கிராமம் நிசப்தமாக இருந்தது. நகரத்தில் பஸ்களும், வண்டிகளும் நிம்மதியில்லாமல் ஓடிக்கொண்டிருந்தன. கிராமத்தில் ஜனங்கள் திண்ணையில் உட்கார்ந்து வம்பு பேசி நேரம் ஓட்டிக்கொண்டிருந்தார்கள். நகரத்தில் வாய் அருவருப்புத் தீர யாரிடமேனும் பேசவேண்டுமானால் இரண்டு பவுன்கள் பீஸ் கேட்பார்கள் போலிருந்தது. கிராமத்தைவிட நகரம் சுருசுப்பாக இருந்தது.

தங்கமணியிடம் விஸ்வேச்வரனின் தாயார் பரிவாக இருந்தாள், ராதாவும் அவளிடம் வாஞ்சையுடனிருந்தாள். ராதா அவளுக்கு தலைவாரிப்பின்னுவாள். "ஐயோ! இந்த ஸ்வர்ண விக்ரகத்தை நாம் தொட்டுக் களிப்புடையதாகச் செய்துவிடுவோமோ" என்று மனம் கசிந்தாள்.

"ராதா! உன் உடம்பு இப்படிப் போகிறதே மருந்து மாயங்களில் உனக்கு நம்பிக்கை இல்லை என்கிறாய். எங்கள் ஊர் மாந்திரீகரை அழைத்துச் சாந்தி செய்து ரக்ஷைகட்டச்சொன்னால் குணமாகும்" என்றாள் தங்கமணி.

"அடிபேதாய்! எல்லாத் தந்திர மந்திரகளும் பார்த்தாகிவிட்டது. ஹூம்! என்னால் எல்லாருக்கும் துக்கம். நான் உயிருடன் இருப்பதைவிட இல்லாமல் இருந்தால் அவருக்குப் பெரிய சேவை செய்தவளாவேன். நான் இருப்பதனால் அவர் வேறு கல்யாணம் செய்துகொள்ள முடியவில்லை. என்னவோ கடவுள் இந்த மாதிரியான ஸ்திதியிலே எல்லோரையும் வைத்திருக்கிறார்" என்று ராதா சொன்னாள்.

"உடம்பில் கோளாறு ஏற்படுவது சகஜந்தானே! நாளடைவில் நல்ல வைத்தியத்தினால் சரியாகலாம். எதற்கும் வேளை அநுகூலமாகவேண்டாமா" என்றாள் தங்கமணி.

"தங்கம்! நான் ஒன்று சொல்லுகிறேன். நான் இருக்கும் இருப்பு உனக்குத் தெரியாதல்ல. என்னால் யாருக்கும் பயனில்லை. நீ அவரைக் கல்யாணம் செய்துக்கொள். எனக்கு அதனால் ஆறுதல் உண்டாகும். என் நிமித்தமாக அவரும் கஷ்டப்படவேண்டாம். நீங்கள் இரண்டுபேரும் கணவனும் மனைவியுமாக ஆனால் எனக்குச் சந்தோஷமாக இருக்கும். மனப்பூர்வமாக இந்தமாதிரி ஏற்படும் நாளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்றாள் ராதா.

தங்கமணி பதில் பேசவேயில்லை. ராதாவும் மேலும் ஒன்றும் சொல்லவேயில்லை.

விஸ்வேச்வரனின் மறுமணப்பேச்சு மெல்ல மெல்ல உலவத்தொடங்கியது. பேச்சு உருவம் பெற்றது. ராதாவின் வற்புறுத்தலினாலேயே விஸ்வேச்வரன் தங்கமணியை விவாகம் செய்துகொண்டான். அவனுடைய தாயாரும் தான் ஒரு பாட்டியாகும் தினத்தை வரவேற்றுக்கொண்டிருந்தாள்.

5

ராதா ஒருநாள் மாடிக்குச் சென்றாள். மாடியின் வராந்தாவிலே வரிசையாகத் தொட்டிகளில் இருந்த குரோட்டன்ஸ் செடிகளின் தங்கத்தகடுகள் போன்ற இலைகளைக் காற்று மெல்ல அசக்கிக் கொண்டிருந்தது. ஒரு பிரம்பு நாற்காலியில் விஸ்வேச்வரன் உட்கார்ந்திருந்தான். அவனெதிரே ஜன்னலைப் பிடித்துக் கொண்டு தங்கமணி லாகவமாக நின்றாள். விஸ்வேச்வரன் என்னவோ சொன்னான். முல்லைமலர்ப் பல்வரிசை தெரியும்படி தங்கமணி புன்முறுவல் செய்தாள். ஹம்ஸநடை நடந்துவந்து நாற்காலியின் கைப்பிடிமேல் உட்கார்ந்து..........

அதற்குள் ராதா மேலேவந்து கீழே இறங்கியதைத் தங்கமணி பார்த்துவிட்டாள். தங்கமணி ராதாவைத் தொடர்ந்து சென்றாள். ராதாவைக்காணோம். தேடினாள். ஒரு சிறிய இருண்ட அறைக்குள் தங்கமணி போனாள். ஸ்விட்சைப் போட்டாள். ராதா தரையில் குப்புறப் படுத்துக்கொண்டுகிடந்தாள். தங்கமணி பக்கத்தில் உட்கார்ந்து அவளுடைய தலையை எடுத்துத் தன்மடிமீது வைத்துக் கொண்டாள். ராதாவின் கன்னத்தில் நீர்த்துளிகள் சிந்தியிருந்தன.

“என்ன ராதா? என்ன செய்கிறது?” என்று கேட்டாள்.

“ஒன்றுமில்லை தலைவலிக்கிறது. வெளிச்சத்தைப் பார்க்க முடியவில்லை. அதனால் தான் இங்கே வந்தேன்” என்றாள் ராதா.

“என்னிடம் இப்படிச் சொல்லாதே! இப்பொழுதுதானே மாடிக்குவந்து இறங்கினாய். சரி! ஏதாவது மருந்து போட்டுக்கொள்ளலாம். காற்றோட இருந்தால் தலைவலி சரியாகிவிடும்” என்றாள் தங்கமணி.

ராதா அவளுடன் மௌனமாக மாடிக்குப்போனாள். விஸ்வேச்வரன் அவளைப் பார்த்து ‘என்ன வருத்தப்படுகிறாப்போல இருக்கிறதே முகம்?’ என்று கேட்டான்.

“ஒன்றுமில்லை எனக்கென்ன வருத்தம் இருக்கிறது?” என்று சற்று வெறுப்புடன் சொன்னாள் ராதா.

“தலை வலிக்கிறதாம், உள்ளே படுத்துக் கொண்டிருந்தாள். நான்தான் சற்றுக் காற்றோட அழைத்துவந்தேன்” என்று தங்கமணி சொன்னாள்.

விஸ்வேச்வரன் மாடிப்படிகளின் அருகில்சென்று, ராதாவைத் திரும்பிப் பாத்துவிட்டுக் கீழே இறங்கினான். ராதா அவனை நோக்கிவிட்டுத் தலைகுனிந்து பெருமூச்சுவிட்டாள். தங்கமணியிடம் அவள் பேசாமல் இருந்தாள். சற்று நேரம் தங்கமணி யோசித்துக்கொண்டிருந்துவிட்டு, ‘ராதா!’ என்று கனிந்து அழைத்தாள். ராதாவின் துயரம் செறிந்த விழிகள் தங்கமணியின்பால் திரும்பின.

“ராதா! என் தாயார் இறந்த உடன் மறைந்துபோன வாத்ஸல்யம் உன்னிடம் இருப்பதைக்கண்டு தேறுதல் அடைந்தேன். க்ஷணம் க்ஷணம் உன்னுடைய அன்பு வளர்ந்துகொண்டே வந்தது. ஆனால் நான் என்னசொல்ல, உன்னுடைய பிரியமெல்லாம் அஸ்தமனமாகி கொஞ்சமாக இருளைப்போல வெறுப்பு வியாபிக்கத் தொடங்குவதை உணர்கிறேன். இப்படி நீ என்னிடம் இருக்கலாமா?” என்று தழதழத்த குரலில் தங்கமணி வினவினாள்.

“உன்னிடம் எப்பொழுதும் போலத் தானே இருக்கிறேன். உன்னிடம் எனக்கென்னம்மா த்வேஷம், தங்கமணி!” என்றாள்.

"ராதா! மறைக்கிருய். மனம் திறந்து சொல்லிவிடு. என்னிடம் ஏன் இவ்வளவு அசிரத்தை? என்மனதார நான் இது வரையில் ஒரு கெடுதலும் செய்ததில்லையே" என்று துக்கித்த குரலில் தங்கமணி சொன்னுள்.

"சரீரம் நல்ல நிலைமையில் இல்லை. மனமும் நல்ல நிலைமையில் இல்லை. என் தலைவிதி, நான் அனுபவிக்கிறேன்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினுள்.

"உட்கார் ராதா! உன் மனம் வியாகூலப்படுகிறது. என்னிடம் கலகலப்பாக இல்லை. காரணத்தையும் சொல்லமாட்டேனென்கிருய். என்னைக் கண்டால் உனக்குப் பிடிக்கவில்லை" என்று தங்கமணி ராதாவின் தோள்களைப்பிடித்துக் கொண்டு அழுதவண்ணம் சொன்னுள்.

ராதா அவளுடைய இரண்டு கைகளையும் தன் தோள்மீதிருந்து மெல்ல எடுத்துவிடுவித்து, "தலைவலிக்கிறது. நான் எங்கேயாவது மூலையில்போய் படுத்துக் கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு நகரலானுள். தங்கமணி அவளைப் பின் தொடரவில்லை. கூப்பிடவில்லை. ஸ்தம்பித்து நின்ருள்.

காலக்கிரமத்தில் ராதாவின் உடல் மிகக்க்ஷீணித்தது. சரீர வியாதியைவிட மனோ வியாதியே அவளை ஒடுக்கியது. கணவனிடம் இருந்த பிரேமையால் அவனை வேறு மணம் செய்துக்கொள்ளச் சொன்னுள். அவன்மீது தனக்குள்ள உரிமையை வேருெரு பெண்ணுக்குப் பகிர்ந்தளித்து, அவனுக்காகத் தியாகம் செய்யத் தயாராக இருந்தாள். அவனுடைய வாழ்க்கையின் சாந்தியையே பிரதானமாகக் கருதி, தன்னையே நிராகரித்துக்கொண்டாள். இப்பொழுதோ முழு உரிமையையும் இழந்தாள். அது விஸ்வேச்வரனின் குற்றமுமல்ல; தங்கமணியின் குற்றமுமல்ல. 'நாம்தானே இப்படிச்செய்தோம், ஏன் பச்சாத்தாபப்படவேண்டும்' என்று நினைத்து மனதை சமாதானம் செய்துக்கொள்ள எவ்வளவோ பாடுபட்டாள். மானவ ஸ்வபாவம் விசித்திரமானது; சஞ்சலமுடையது. அவள் யோகினியல்ல. 'ஐயோ! என்னுல் என் ஆசனத்தில் அமரமுடியாத நிலைமையில் அவள்—இன்னெருத்தி—வீராசனம் போட்டுக் கொண்டு அமர்ந்திருப்பதைக் காணச் சகிக்கமுடியவில்லையே' என்று ஏங்கினுள். விஸ்வேச்வரனுக்கு முன்பு அவளிடமிருந்த பிரேமை இப்பொழுது ஒரு நோயாளியிடம் காண்பிக்கும் தயையாக, கேவலம் அனுதாபமாக ஆகிவிட்டதே! அவள் தன் உயரிய ஸ்தானத்திலிருந்து விழுந்துவிட்டாள். இந்தக் கீழ் நிலைமையைப் பொறுக்கமுடியவில்லை. பொருமை! க்ஷயரோகக் கிருமிகள் ஈரலை அரிப்பது போன்று, பொருமை அவளது மனதை அரித்துவிட்டது. நாளுக்குநாள் ஏங்கி யொடுங்கி போய்விட்டாள். மரணம் அவளது சோகத்தைப் பூரணமாக நிவர்த்தித்தது.

நாட்கள் ஓடின. ராதாவைப்பற்றிய ஞாபகம் கனவுபோலிருந்தது. ஒருநாள் தங்கமணி "ராதா அக்கா ரொம்ப நல்லவள்" என்ருள். வெகுகாலத்திய சம்பவங்களை மனதில் வருவித்துக் கொண்டு, மௌனமாகவிருந்த விஸ்வேச்வரன், 'ஆம்!' என்று பதில் சொன்னுன்.

ஒரே மனம்!

'விஜயன்'

சொந்த விருப்பு வெறுப்புக்களைவிட்டுவிட்டு, உத்தியோக ஹோதாவில் ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பரிசீலனை செய்து முடிவு தெரிவிக்கும்படி, என் ஆப்தரும், தலைசிறந்த மாதப்பத்திரிகையொன்றின் ஆசிரியருமான ஒருவருக்கு எழுதியிருந்தேன். அவர் அனுப்பிய பதிலில் காணப்பட்ட ஒரு வாக்கியமே என்னை இச் சிறு கட்டுரை எழுதத் தூண்டுகிறது.

"........என்று தாங்கள் குறிப்பிடும் தனி மனிதரும், இந்தக் கடிதத்தை எழுதும் நிலையிலுள்ள உத்தியோகஸ்தரும் ஒருவராக இருப்பதால் உங்களுடைய 'ஸென்டிமென்டல் அப்ஜெக்ஷன்ஸ்' இப்போதும் இருப்பதற்கு நியாயம் உண்டு. ஆகவே உத்தியோக முறையில் தனி மனமும், தனி மனிதர் என்ற முறையில் தனி மனமும், ஆக இரண்டு மனம் படைத்தவராக அவரைக் கருதுவதற்குத் தக்க ஆதாரமொன்றுமில்லை ...." என்று உத்தியோக தோரணையில் அவர் — விளையாட்டாகவோ அல்லது வினையாகவோ — எழுதியிருந்தார். அவர் எழுதியிருப்பது எவ்வளவுதூரம் இயற்கைக்கு மாறுபட்டது என்பதையெண்ணி வியந்தேன்.

தனிப்பட்ட முறையில் செய்ய விரும்பும் பல காரியங்களை உத்தியோக ஹோதாவில் செய்ய முடியாமற் போவதையும், அதேபோலச் சொந்தப்பொறுப்பில் செய்வதற்கு லவலேசமும் இஷ்டமில்லாத எவ்வளவோ காரியங்களை உத்தியோக முறையிலோ, அல்லது கட்டுப்பாட்டை முன்னிட்டோ, அல்லது லௌகிகக் கௌரவத்தை உத்தேசித்தோ நாம் செய்யவேண்டியிருப்பதையும் கண்கூடாகக் காண்கிறோம். அப்படியிருக்க, என் நண்பர் என் அவ்வாறு எழுதத் துணிந்தாரோ! ஒருகால், சொந்த மனப்பான்மை, கடமை, இவ்விரண்டுக்கும் உள்ள வித்தியாசம் அவர் மனத்தில் படவில்லையோ!

மிஸ்டர் வாயாடி வரதராஜன், பி.ஏ., பி.எல்., அட்வொகேட் அவர்களையும், ஸ்ரீமான் உக்கிரமூர்த்தி, ஸபார்டினேட் ஜட்ஜ், அவர்களையும் எடுத்துக்கொள்வோம். அவர்கள் புதுச் சம்பந்திகள். ஆகவே சிறிதுகாலமாக அவர்கள் தனிப்பட்ட முறையில் ஒருவரையொருவர் நாக்கில் நரம்பில்லாமல் தூஷித்துக் கொள்வதையும், எதிர்ப்பிரசாரம் செய்துகொண்டிருப்பதையும் நாம் அறிவோம். ஆனால் 'கோர்ட்டி'ல் வாயாடி அவர்கள் உக்கிரமூர்த்தியை 'யுவர் ஆனர்,' என்று பவ்யமாக அழைத்துப் பேசுகிறார்! உக்கிரமூர்த்தி அவர்களும் சாந்தமூர்த்தியாகி, வக்கீல் பேசுவதைப் பொறுமையுடன் கேட்கிறார்!

'டவுன் ஹாலி'ல் இருவரும் நடந்துகொள்ளும் மாதிரிக்கும், கச்சேரியில் நடந்துகொள்ளும் விதத்திற்கும் எவ்வளவு வித்தியாசம்!

எனது நண்பர் பெருமைப்படுவதுபோல, எல்லோருக்கும் சொந்த ஹோதாவிலும்சரி, உத்தியோக முறையிலும் சரி, **ஒரே மாதிரியான மனம்** இருக்குமானால் நாம் என்னென்ன ரஸமான காட்சிகளை எதிர்பார்க்கலாம் என்பதை சற்று கற்பனைசெய்து பார்ப்போம்.

ஸ்கூல் உபாத்தியாயர் சதாசிவ ஐயர் வீட்டில் திருட்டுப் போய்விட்டது. அதைப்பற்றித் தம்முடைய அத்யந்த நண்பரான போலீஸ் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் நாராயண முதலியாரிடம் தெரிவித்து, அவராலான முயற்சிசெய்து திருட்டுப்போன சாமான்களை மீட்டுக் கொடுக்கும்படி கேட்கப்போகிறார்.

"மிஸ்டர் சதாசிவ ஐயர்! ஒரு 'போலீஸ் கம்பிளேண்டு' எழுதியனுப்புங்கள்.

என்னிடம் தனியாகச் சொல்லிவிட்டால் போதாது!" என்கிறார் முதலியார்.

அன்று சாயந்திரம் போலீஸ் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டருக்குக் கீழே கண்ட மாதிரி ஒரு 'விண்ணப்பம்' வந்து குதிக்கிறது!

"ஸர்க்கிள் இன்ஸ்பெக்டரவர்களுக்கு,

நீங்கள் என்னிடம் நேரில் சொல்லியபடி இக்கடிதம் எழுதுகிறேன். நான் இன்று காலை உங்களிடம் பேசியவற்றையெல்லாம் ஞாபகத்தில் வைத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். துரிதமாக ஏதாவது வழி செய்யவும். திருட்டுப்போன சாமான்களின் விவரம் தேவையானல், என் ஸம்ஸாரத்திடம் கேட்டு எழுதுகிறேன். நாளைக்குக் காவேரிக்கு ஸ்நானம் செய்யப் போகும்போது உங்களிடம் மேற்படி ஜாபிதாவைக் கொடுக்கிறேன்.

இப்படிக்கு,
சதாசிவ ஐயர்

P. S. உங்கள் பிள்ளையாண்டானுக்குக் கணக்குமட்டும் சொல்லிக்கொடுக்க யாராவது டியூஷன் வாத்தியார் தேவை என்று போனவாரம் சொன்னீர்கள். இதுவரை யாரையும் நீங்கள் நியமித்திராவிட்டால், எனக்கு வேண்டியவர் ஒருவரைச் சிபார்சு செய்து அனுப்பட்டுமா?

சதாசிவ ஐயர்."

பார்த்தீர்களா 'ஒரே மனம்' எப்படி இருக்கிறதென்று!

சினிமா கம்பெனியில் வெகுநாட்களாக வேலைபார்த்து வருகிறார்கள் ஸுகுமாரனும், குப்புலிங்கமும். குப்புலிங்கம் இரணியகசிபு வேஷமும், ஸுகுமாரன் பிரகலாதன் வேஷமும் பூண்டுநடிப்பதில் பிரசித்திபெற்றவர்கள்.

ஒருநாள் ஸுகுமாரன் தன் வீடுதியில் காப்பி சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அவனுடைய நெருங்கிய பந்துக்கள் இருவர் அவனருகில் உட்கார்ந்து ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள்.

குப்புலிங்கம் திடுதிப்பென்று அங்கே வந்தான். மீசை இருக்கவேண்டிய இடத்தில் விரலை வைத்து முறுக்கினன். மீசை இருப்பதாக அவன் எண்ணம்!

"குலத் துரோகி! கோடரிக்காம்பே! உன்னை மலைமீதிருந்து உருட்டச்சொல்லியன்றோ உத்தரவு போட்டேன்! நீ எப்படியடா இங்கு வந்தாய்?........... பாதகா, என்முன் நில்லாதே போ!........" என்று கர்ஜித்து ஸுகுமாரனைத் தன் கால்களால் உதைத்தான்.

ஸுகுமாரனுடைய கையிலிருந்த டம்ளர் கீழே உருண்டு காப்பி ஆறாக ஓடிற்று!

தனிப்பட்ட ஹோடாவிலும் உத்தியோக முறையிலும் ஒரேமாதிரி இருக்கும் விந்தையைப் பார்த்தீர்களா?

அச்சாபீஸ் 'போர்மென்' கந்தசாமிக்கு ஒரு கலியாணத்துக்கு அழைப்புவந்தது. பத்திரிகையைப் பிரித்து அதிலுள்ள புருப் தப்புகளைத் திருத்த ஆரம்பித்துவிட்டார் அவர்!

'காம்போஸிஷன்' திருத்தியே பழக்கமாயிருந்த தமிழ்ப் பண்டிதருக்கு, பிறந்தகத்துக்குப் போயிருந்த அவருடைய தர்மபத்தினி லெட்டர் எழுதியிருந்தாள். பண்டிதர் சிவப்பு மசியால் அதைத் திருத்தம்செய்து '2¼' என்று மார்க்கும் போட்டார்!

* * *

இன்று ஆபீஸில் வேலை அவ்வளவாக இல்லை. ஆகவே நல்ல ஓய்வு. இத்தனை நேரமும் எழுதிக்கொண்டேயிருந்து விட்டேன்.

தனிப்பட்ட முறையில் இன்னும் பல விஷயங்களை எழுத விரும்புகிறேன். ஆனல் — அதோ, உத்தியோக தோரணையில் 'ஆபீஸர்' என்னைக் கூப்பிடுகிறாரே! போய் என்னவென்று கேட்டுத் தொலைக்கிறேன்!

இரவல் எதற்கு?

வி. ஸத்யவதி—ஸெகந்திராபாத்

எனக்கு நகைப் பைத்தியம் அதிகம். நகை விஷயத்தில் யாராகிலும் பித்தளையைப் பொன்னென்று ஏமாற்றமுயன்றாலும் அதை நம்பி விடுவேன்.

என்புருஷன் முப்பத்தைந்து ரூபாய் சம்பளத்தில் தாசில்ஆபீசில் குமாஸ்தாவாக இருந்தார். என்தாய் வீட்டாரும் ஏழை. இக்காலத்தில் சாப்பாட்டுக்கே இந்த ரூபாய் போதாது. நகைக்கு எப்படி மிஞ்சும்?

என்புருஷன் எனக்கு நேர்மையாக இருப்பார். இருப்பதைக்கொண்டு திருப்தியுடன் நிம்மதியாக இருப்பவர் நான் எப்போதும் குறையுடனிருப்பதைக் கண்டு எனக்கு அவர் எவ்வளவோ புத்திமதிகள் கூறியும், அவை என் மண்டையில் நுழையவில்லை.

நகை ஆசையினால் நான் பகுத்தறிவுப் போட்டிக்காக வாரம் தவறாமல் எவ்வளவோ செலவழித்தேன். ஆனால் லாபமென்ன? ஒன்றுமில்லை.

தாசில்தார் வீட்டில் அவரது ஒரே பிள்ளையான அம்பிக்குப் பிறந்தநாள். அவர்கள் எவ்வளவோ தடபுடலுடன் ஊரையெல்லாம் மஞ்சள் குங்குமத்திற்கு அழைத்தார்கள். எனக்கும் அழைப்புக் கடிதம் வந்தது. என்புருஷன் அவர்கள் வீட்டிற்கு என்னைப்போகும்படி அனுமதிகொடுத்தும் நகைபுடவைதகுந்தவையில்லையென்று, அவருடன் சண்டையிட்டுவிட்டு, போகும் எண்ணத்தை மறந்துகொண்டிருக்கும்பொழுது நீலு வந்தாள். அவள் புருஷனும் தாசில் கச்சேரியில் குமாஸ்தாதான். அவள் எப்பொழுதும் சந்தோஷத்துடனிருப்பாள். நகைகளும் போட்டுக்கொண்டிருக்கிறாள். நான் அவளைப்பார்த்து "ஏண்டீ எப்படி உனக்கு இந்த முப்பத்தைந்து ரூபாயில் நகைவாங்க முடிகிறது. எனக்கு சாப்பாட்டுக்கே போதவில்லையே" என்றுக்கேட்டால் "உனக்கு சமுத்தாக குடித்தனம் செய்யத் தெரியவில்லை" என பதிலளிப்பாள்.

"ஏண்டீ நீலு, நீ மஞ்சள் குங்குமத்திற்கு அவர் வீட்டுக்குப்போகிறாயா?" என்றுக்கேட்டேன். "ஆமாம், உன்னையும் அழைத்துக்கொண்டுபோக நினைத்துதான் இங்கு வந்தேன்" என்றாள். "நான் வரவில்லை; எனக்கு நல்ல புடவை நகை ஒன்றும் கிடையாது, எப்படி வருவேன்" என்று பதிலளித்தேன். "நான் தருகிறேன். இருப்பதை இரண்டு பேருமாகப் போட்டுக்கொள்ளலாம்" என்று சொன்னாள். என் ஜன்மத்தில் ஒரு அரைமணி நேரமாவது நகைபோட்டுக்கொள்ள தசை வந்திருப்பதாக எண்ணிப் பூரித்தேன். இருவருமாக அவள் வீட்டுக்குப்போனோம். நீலு தன் நகைகளை எல்லாம் எடுத்து காண்பித்தாள். நாலுவடத்தில் சங்கிலி ஒன்று, காசிமணிமாலை, முத்துமாலை, இவைகளைப் பார்த்த எனக்கு முத்துமாலை வெகு நன்றாக இருந்தது கண் கொட்டாமல் கவனித்தேன். நீலு அதை அறிந்து எனக்கு முத்துமாலையைக் கொடுத்தாள்.

வீட்டிற்கு வந்து, முத்துமாலையை என் புருஷனிடம் காண்பித்து, "நீங்களும் தான் குமாஸ்தா. நீலு ஆத்துக்காரரும் தான். அவர்கள் எவ்வளவு சந்தோஷத்துடன் நகை, புடவைகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்! அதேசம்பளத்தில் நமக்கு சோத்துக்கே போதவில்லை" என்றேன். "அடி அசடே, நகைப்போட்டுக்கொண்டு விட்டால் சந்தோஷமா. சோத்துக்குக்கூட வழியில்லாமல் திண்டாடும் எத்தனையோ ஏழைகள் இருக்கின்றனரே. நீ என்வார்த்தையைக்கேள், இரவல்நகை மாத்திரம் போட்டுக்காதே' என்றார். நான் அவர் வார்த்தையை காதில் போட்டுக்கொள்ளாமல் நீலுவுடன் தாசில்தார் வீட்டிற்கு சென்றேன். நகைபோட்டுக்கொண்ட

சந்தோஷத்தில் மணிபோனதே தெரிய வில்லை. நீலுவின் பலவந்தத்தின் பேரில் அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு வீடுவந்து சேர்ந்தேன்.

மறுதினம் என் புருஷன் முத்துமாலையை கொடுத்து விட்டாயா என்றுக்கேட்டார். இல்லையென்று என் கழுத்தை பார்த்துக்கொண்டேன். அவ்வளவுதான் என்னையறியாமலே ஓர் கூச்சல் போட்டேன். இதைக் கவனித்த என் புருஷன் என்னவென்றுக் கேட்டார். என் கழுத்தில் முத்துமாலையைக் காணவில்லையே நீலுவுக்கு என்ன பதில் சொல்வதென்று அழுதேன். "நான் நேற்றே சொன்னேனே, கேட்டாயா? சோத்துக்கே தடமாட்டமாக யிருக்கும் நமக்கு, அவர்களுக்கு முத்துமாலையை எப்படி சேர்ப்பது" என்றார். வீடுமுழுவதும் தேடியாச்சு. எல்லாம் வீணையிற்று.

கடைசியில் ஷாப்புக்குப் போனோம். அதேமாதிரியில் ஒன்று ஆயிரம் ரூபா விலையில் வாங்கி, நீலுவுக்குக் கொடுத்தோம்.

நாட்கள் சென்றன. இந்த சில வருஷத்துக்குள் என் மனைவியாதியும் விருத்தியாகிக்கொண்டே வந்தது. முத்துமாலைக்காக மாஸா மாஸம் பதினைந்து ரூபாய் செல்லுப்போக மிச்சரூபாயில் ஜீவனம் நடத்திவந்தோம். முதலில், கந்தல் இல்லாமல் கட்டிய மில்புடவைக்கும் இப்போது கழுவாச்சு.

ஒருநாள் நீலு வந்து "என்டீ வரவர இப்படி இளைத்துக்கொண்டிருக்கிறாயே" என்றாள். இதைக்கேட்டதும் எனக்கு வயிற்றெரிச்சல் கிளம்பியது. "எல்லாம் உன் முத்துமாலையால் வந்த கதிதான்" என்று நடந்தவைகளைக் கூறினேன்.

"ஐயோ பைத்தியமே! அது இமிடேஷன் முத்துமாலையாச்சே. அதன் விலை பத்துரூபாதானே. ஆனா, அதைப்பார்த்தால் என் முத்துமாலைபோல் தானே இருக்கு" என்றாள். இதையெல்லாம் பக்கத்தில் கேட்டுக்கொண்டிருந்த என் புருஷன் "உனக்கு இருக்கும் இந்த நகைப் பைத்தியம் போகவே ஓர் சிறு நாடகம் நடித்தேன். அன்று ராத்திரி நீ தூங்கிக்கொண்டு இருக்கும்பொழுது, முத்துமாலையை எடுத்து ஒளித்தேன். பிறகு ஷாப்பிலும் அதைக்காட்டியதற்கு போலி நகை என்று தெரிந்தது. மாலையை அவளிடமே கொடுத்து, சாயந்திரம் உன்னை அழைத்துக்கொண்டு வருவதாகவும், இதன் விலை ஆயிரம் ரூபா என்று தெரிவிக்கும்படியும் கூறினேன். அது போலவே நடந்தது. உன் பிரமையும் மாறியது. நகை வாங்கிக்கொள்ள ரூபாயும் சேர்ந்தது. ஸ்வல்ப தொகையில் சம்சாரம் செய்யவும் கற்றுக்கொண்டாய்" என்றார்.

எனக்கு அந்தச் சொல் மிக வெட்கத்தை அளித்தது!

நோட்டீஸ்.

தேவகோட்டை சப்கோர்ட்டு.

E. P. நெ. 61 of 42 in O. S. 4 of 40.

Raja of Ramnad by Estate Manager under the Court of Wards. } வாதி

AL. AR. RM வெள்ளையன் செட்டியார் & others } பிரதிவாதிகள்

AL. AR. RM. AR. காளையப்ப செட்டியார் } 2nd Defendant

ஷெ நம்பரில் வாதிபவர்கள் ரூ. 3144—12—7 யும் பின்வட்டியும் வரப்ப நிறைவேறுதல் மனுதாக்கல் செய்திருப்பதில் charge சொத்துக்களின் விற்பனைக்காக இன்தியாரின் ஷரத்துக்களை நிர்ணயிக்க **30—7—42** ம் தேதி வாயிதா ஏற்பட்டிருக்கிறது. (2) ம் பிரதிவாதிக்கு எல கோட்டீஸ் சம்மந்தமாய் E. A. 33 of 42 ல் Substituted Service க்கு உத்திரவாகியிருக்கிறது. வாயிதா தேதியில் பிரதிவாதிகள் ஆஜராகி ஆக்ஷேபணையைத் தெரிவித்துக் கொள்ளலாம்.

தேவகோட்டை, 6—7—42. } V. நீருாலை ஐயங்கார், வாதி வக்கீல்.

அரசியல் விசாரம்

ரா. சந்திரசூடன். (புதுடில்லி)

பிரிட்டிஷ் தூதர் ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் இந்நாட்டிற்கு விஜயம்செய்து திரும்பி 12 வாரங்களுக்கு மேலாகின்றன. அதன் முக்கிய பலன் உடனேயே வெளியாயிற்று. ஹிந்துவின் குடுமியும், முஸல்மானின் தாடியும் வலுவாகச் சிக்கிக்கொண்டன. எங்கு சிக்கிக் கொண்டன என்பது இருதிறத்தாருக்கும் தெரியாது. யார் சிக்கவைத்தார்கள் என்பதும் தெரியாது. ஆனால் யாரிடமாவது பழியைச் சுமத்தவேண்டுமே. முஸல்மான் தன் சகோதரன் ஹிந்துவைத்தூற்றினான். ஹிந்து திருப்பினான் அவ்வசை மொழிகளை. இப்பொம்மலாட்டத்தை நடத்திவைத்த சூத்திரதாரி யாரென்று கண்டுபிடிப்பது அவர்களுக்கு லகுவான காரியமா? இத்துடனா நின்றது? மற்றைய மைனாரிட்டிகளான சீக்கியர், தாழ்த்தப்பட்டோர், கட்சித் தலையில்லாத மூத்தோர் போன்ற பல வகுப்பினர்களும் தங்கள் கைமுஷ்டியைக் குவித்துப் பார்த்துக்கொண்டிருந்தனர். இவ்வளவும் பொதுவான எதிரியை எதிர்க்க அன்று. அவன் லாகவமாகத் திரைமறைவிலன்றோ பதுங்கி இருக்கிறான்! இக்கட்சிகள் தங்களுக்குள் ஒவ்வொருவரது சக்தி எவ்வளவு என்று அளந்து கொள்வதில் தான் மனது செலுத்தின.

தாம் கொணர்ந்த மாயவித்தையைக் காட்டிவிட்டுச் சென்றார் கிரிப்ஸ். அவர் சென்றதிலிருந்து இங்கு யாதவச் சண்டை நடைபெற்று வருகிறது. கோரைப்புல் என்று நினைத்தது சம்மட்டி என்று உணர்ந்தும் சண்டை நின்றபாடில்லை. எரிமலை எத்தனை நாட்கள்தான் எரியும்? சிறிது சிறிதாக அடங்கத்தானே வேண்டும் என்று நினைத்து இருந்தோம். அதற்குள் பொய்க்கால் குதிரை நாட்டியம் ஆரம்பமாகியிருக்கிறது.

குழந்தை பாலுக்கு அழுதுகொண்டிருக்கிறது. பசிதாங்கவில்லை. அப்பொழுது ஒரு குவளை வேப்பெண்ணெய் பசி தீர்க்க அனுப்பப்பட்டிருக்கிறது. குழந்தையோ வெந்நீராவது கொடு, இந்த எண்ணெய் வேண்டாமென்று இன்னும் மும்முரமாகக் கதறுகிறது. "ஆயா"வுக்குத் தெரியாதா குழந்தைக்கு எந்த எந்த வேளைக்கு எதெது கொடுக்க வேண்டுமென்று! திமிறும் குழந்தையின் கைகளையும் கால்களையும் கட்டிப்பிடித்துக்கொண்டு தான் கொணர்ந்த "உணவை"ப் புகட்டுகிறாள்.

மூன்று நாட்களுக்கு முன்தான் இந்த "உணவு" நமக்குக் கிடைத்தது. இரண்டு வாரங்களாக இந்தப் புது டில்லியில் இதுதான் பேச்சு. விசேஷ நிருபர் ஒருவர் என்னிடம் ரகசியமாக வைத்துக்கொள் என்று உஷார்செய்து புது பொம்மைகள் யார் யார் என்று சொன்னார். அவர் சொன்னதில் ஒரு நபர்தான் தவறினார், கர்னல் ரஹ்மானை அவர் கௌரவப்படுத்தினார். ஆனால் கௌரவம் கொண்டவர். ஜ்வாலா அவரை முந்திக்கொண்டு கழுத்தை நீட்டிப் பந்தயத்தைக் கெலித்துவிட்டார். அழைப்புப் போன இந்த பொம்மைகளில் ஒருவராவது தைரியமாக இந்த மாலை வேண்டாமென்று நிராகரிப்பார் என்று ஆவலாக எதிர்பார்த்தோம். அவரும் நம்மைக் கைவிட்டார்.

ஒருதரம் ஒரு தமிழ்ப் பத்திரிகையில் இந்த நபரைப்பற்றி எழுதிய பொழுது பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: "அவருடைய அதிருஷ்டம்தான் என்ன, ஐயா! ஸ்ரீ பத்மனாபஸ்வாமியையே 'அப்பா, நீ என் ஸ்தானத்தில் வந்து சில நாட்கள் இளைப்பாறு. நான் சற்று வெளியில் நிற்கிறேன்,' என்று சொல்லும் நிலைமைக்கு கொணர்ந்தார்." இவ்வளவு வல்லவர் கூட வெள்ளையர் தூண்டிலில் ஆசை வைத்தார். தப்ப முடியுமா! இரண்டு நாட்களுக்கு முன் பண்டித நேருவின் சம்பந்தம் கொண்ட "நேஷனல் ஹெரால்ட்" என்ற தினசரி இவரை மிகவும் புகழ்ந்து

எழுதியிருக்கிறது. தவறு செய்து அத் தினசரியிடம் தலையைக் கொடுத்துத்தப்புவது முதலை வாயினின்று தப்புவது போன்றது. அந்தப் பத்திரிகை இந் நவராத்திரி கொலுவைப்பற்றி விசாரணை செய்துவிட்டுக் கடைசியில் ஒரு அழுகை அழுகிறது.—இவ்வளவு கைராசி, சாதுர்யம், வல்லமை கொண்ட ஒரு ஆத்மா விறகு மூன்றுகால் நாற்காலிதான் கிடைக்க வேண்டுமா, என்று நாற்காலியை ஸ்திரப்படுத்தி வைத்துக் கொண்டிருப்பதிலேயே நாட்கள் கழிந்துவிடும். பிறகு யுத்தமே நின்று சமாதானமும் அமைதியும் ஏற்பட்டு விடுமே. அதன் பிறகு ஒருகை பார்த்துக் கொள்கிறோம் இந்தப் பூச்சிகளை என்கிறது சர்ச்சில்—அமெரி கூட்டுறவு.

நமது (பாரதமணியின்) பத்திராதிபரின் மனநிலைமையை எனக்கு ஒருவாறு உணர முடியும். பகுத்தறிவுள்ள, தேசபக்தி கொண்ட, ஏழைமக்களின் பரிதாபநிலை கண்டு பச்சாத்தாபப்படும் ஒவ்வொரு இந்தியன் உள்ளமும் அவ்வாறே பதைக்கிறது. இன்று எவ்வளவோ கொடுமைகள் நம்கண்முன் நடப்பதைக்கண்டும் காணாதுபோல் நாம் செல்லவேண்டியிருக்கிறது. தேகத்தினுள் கொதிக்கும்—ரத்தம் ஓடத்தான் ஒடுகிறது.

நரம்புகளும் பரிகாரமாக ஏதாவது செய்யலாமோ என்று துடிக்கின்றன. ஆனால் என்னசெய்வது என்பதுதான் ஒருவருக்கும் தெரியவில்லை. அந்தகாரத்தில் உழலுவதைத்தான் உணர்கிறோம்.

இன்று நமது பூமியிலிருந்து வரும் ஒருவரைப் பேட்டிகண்டேன். அவரைப் போல் தமிழ்நாட்டின் எல்லையை மிதித்து வருபவரைக்கண்டாலே எவ்வளவு குதூகலம் உண்டாகிறது. ஆனால் அந்த உவகை எவ்வளவு அல்பாயுள் கொண்டது! இன்று வந்தவர் நம் எல்லையின் கதியைப்பற்றி வர்ணித்தார். விளக்கு அணைப்பின் சிரமம், உப்பு, சர்க்கரை, விளக்கெண்ணெய், முதலிய அத்யாவசிய சாமான்கள் கிடைப்பதின் துர்லபம், பின்னும் ரயில், பஸ் பிரயாணத்தின் கொடுமை முதலியவற்றைப்பற்றி உருக்கமாகச் சொன்னார். 'யானைவருமுன்னே' நமக்கு இவ்வகையான அனுபவங்கள். இன்னும் என்னவெல்லாம் சுவைக்க வேண்டுமோ! வாயில்லா ஜீவன்கள் இந்நாட்டினர். அழுவதற்குக்கூட கற்பித்துக் கொடுக்கவேண்டும். நம் தேசத்தைத் தாண்டினால் இதே நிலைமையில் இருப்பவர் சீனதேசத்தினர்தாம். அவர்கள் தான் என்ன அவஸ்தைப் பட்டிருக்கின்றனர்! இன்னும் எத்தனை கஷ்டங்கள் அனுபவிக்கின்றனர். சூரிய உதயமாகவில்லை அங்கு இதுவரை. சாதகபக்ஷி போல் காத்திருப்போம், அவர்கள் துணையுடன்.

அடுத்தவாரம் மஹாத்மா தமது நூதன முறை சத்யாக்ரகம் ஆரம்பிக்கப் போவதாக இங்கு நம்பத் தகுந்த முறையில் வதந்தி உலாவி வருகிறது. பாதுகாப்புச் சட்டம் அச் சத்தியாக்கிரகத்தைப் பாதிக்க இயலாது என்றும், ஆனால் மிகவும் பலம்கொண்ட இயக்கம் என்றும் தெரிகிறது. அதைப்பற்றி இப்பொழுது நான் கேட்டவைகளையெல்லாம் பிரசுரம் செய்வது உசிதமல்ல. கடவுள் அவர் சார்பில் இருக்கிறார் என்பதுதான் நமது பூரண நம்பிக்கை; அதுதான் நமது ஆன்ம உணவு.



சுவேதாரண்ய ஆசிரம பாலபாடம்—III

கா. சி. வே.

பாடம் 1.

கட்டுமரம்
படகு
பாய்மரக்கப்பல்
ஸ்டீமர்
யுத்தக் கப்பல்
நீர்மூழ்கிக்கப்பல்

மணி, இன்றையதினம் நாம் ஒரு புதுப்பாடம் ஆரம்பிப்போம். ஏனென்றால் நீ விடுமுறை நாள் கழித்து வந்தவுடன் உனக்குப் புதிதான சில விஷயங்களைப் பற்றிச் சொல்லவேண்டுமென்று நான் எண்ணியிருந்தேன். நீயும் வர வரப் பெரியவனாக வளர்ந்து வருகிறாய். ஆகையால் கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிய விஷயங்களைப் பற்றியும் தெரிந்துகொள்ளக்காலம் வந்துவிட்டது.

முதல் பத்தியில் குறிப்பிட்டவைகளில் ஏதாவது ஒன்றை நீ பார்த்திருக்கிறாயா? எங்கே எப்பொழுது எப்படிப் பார்த்திருக்கிறாய்? இவைகள் முக்கியமாய் சமுத்திரத்தைக் கடந்துபோக மானிடனால் ஆக்கப்பட்ட சாதனங்கள். ஒவ்வொன்றின் அமைப்பையும் பிரயோஜனத்தையும் இயங்கும் வகையையும் தெளிவாய் ஒருகட்டுரையாக எழுதி நாளையதினம் கொண்டுவா.

அகலமானதும் ஆழமானதுமான ஆறுகளைத் தாண்டுவதற்குச் சாதனமாக உபயோகிக்கப் படுபவற்றின் பெயர்களைச்சொல்.

கட்டுமரம் மீன்பிடிக்க உபயோகப்படுகிறது. ஜனங்கள் போகவும் சாமான்கள் ஏற்றவும் படகு பிரயோஜனப்படுகிறது. ஆனால்

அது கரையோரந்தான் செல்லும். ஆழ்ந்த சமுத்திரத்தில் போகாது. ஸ்டீமரில் கடல் மார்க்கமாய் ஆயிரக்கணக்கான மைல்கள் சளி யின்றிப் போகலாம்.

பாய்மரக் கப்பலுக்கும் ஸ்டீம ருக்கும் எந்தெந்த விதங்களில் வித்தியாசம்? விவரமாய்ச்சொல். இவற்றின் படங்களைத்தயாரித்துக் கொண்டுவா.

புயலுக்கும் காற்றுக்கும் பயப் படாமல் சமுத்திரத்தைக் குட்டை போலக் கடந்துபோவது ஸ்டீமர் ஒன்றுதான்.

யுத்தக் கப்பல் என்றால் என்ன? நீர்மூழ்கிக் கப்பல் என்றால் என்ன? யுத்தக்கப்பல்களில் அமைக்கப்பட் டிருக்கும் முக்கியமான சாதனம் எது? நீர்மூழ்கிக்கப்பலின் அமை ப்பு விசேஷம் என்ன?

புத்திசாலி

"கீரன்"

மதுரையில் ஒரு பஞ்சு வியா பாரி இருந்தான். அவனுக்குச் செல்வமாக ஒரே ஒரு பிள்ளை. அவனுக்கு சொக்கன் என்று பெயர். அவனை மிகவும் அருமை யாக வளர்த்து ஐந்து வயதானதும் பாடசாலையில் படிக்கவைத்தான் வியாபாரி. ஆனால் சொக்கனே சரியாகப் பள்ளிக்கூடம் போகாம லும் படிக்காமலும் துஷ்டத்தனம் செய்து ஊர் சுற்றிக் கொண்டிருந் தான். அவனுக்கு வயது பதி னைந்து ஆகிவிட்டது. அரிச்சுவடி படிப்புக்கூட வரவில்லை. அவனை ஊரில் எல்லோரும் சொக்கன் என்பதற்குப் பதிலாக மக்கன் என்றழைத்தார்கள். தகப்பனார் படிக்கச்சொல்லி எவ்வளவோ புத்தி புகட்டியும் சொக்கன் கேட்கவே யில்லை.

திடீரென்று ஒருநாள் வியாபாரி இறந்து போனான். வியாபாரத்தை நடத்தத் தகுந்த ஆசாமி இல்லா ததால் அது நின்று விட்டது. கையில் உள்ள பொருள்களை வைத்துக் கொண்டு சொக்கனும் அவன் தாயாரும் காலம் கழித்து வந்தார்கள். சம்பாத்தியம் இல்லா மல் சும்மா உட்கார்ந்து எவ்வ ளவு காலம் சாப்பிட முடியும்? வீட்டிலிருந்த பொருள்களெல்லாம் செலவாகிவிடவே தாயும் மகனும் சாப்பாட்டிற்குக் கஷ்டப்பட நேர் ந்தது. தாயார் பிள்ளையை அழை த்துக் கைவசம் மீதியிருந்த பஞ்சு மூட்டைகளைக்கொண்டு போய் சந் தையில் விற்று வரும்படிச் சொன் னாள். அவனும் மூட்டைகளை ஏற்றி, தானே வண்டியை ஓட்டிக் கொண்டு சந்தைக்குச்சென்றான்.



வேண்டுமென்றே

உங்களை

அவர்கள்

குறிபார்க்கவில்லை



ஆனால் அவதிப்படும் துர்பாக்கிய சாலிகளில் ஒருவராக நீங்கள் ஆகலாம். தலைவிதி அப்படி இருந்தால், நீங்கள் அந்தக் கொடுமைக்கு ஆளாவதிலிருந்து தப்ப முடியாது! ஆனால் நீங்கள் இன்ஷூரன்ஸ் மூலம் உங்கள் குடும்பத்தைக் காப்பாற்றிவிட முடியும்.

விவரங்களுக்கு எழுதுக:

நேஷனல் இன்ஷூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

7, கௌன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு: 58, கோபதி நாராயணசாமி ரோடு, தியாகராயநகர், மதராஸ்.

சந்தையில் பலர் பல வியாபாரம் செய்து கொண்டிருந்தனர். சொக்கனின் பஞ்சை யாரும் வாங்கவேயில்லை. அது வெகுநாட்களாக ஒரு பாழும் அறையில் கொட்டிக் கிடந்ததால் ஒரே அழுக்கு மயமாக இருந்தது. வீட்டிலேயே சுத்தம் செய்யாமல் கொண்டுவந்தால் யார் தான் வாங்குவார்கள்? எல்லோரும் சந்தை அலுவல்களை முடித்துக் கொண்டு வீட்டிற்கு போய்விட்டார்கள். சூரியனும் அஸ்தமித்து விட்டது. பஞ்சையோ வாங்குவாரில்லை பசியோ வயிற்றைத் துளைக்கிறது கையிலோ காசுமில்லை பாவம்! என்ன செய்வான் சொக்கன்? வருத்தத்துடன் வண்டியை ஓட்டிக்கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டான்.

களைப்பும் தாகமும் அதிகமாய் இருந்தன. வழியில் ஒரு தட்டான் பட்டரையில் வேலை செய்துகொண்டிருந்தான். அங்கு போய் கொஞ்சம் தண்ணீர் வாங்கிக் குடித்தான் சொக்கன். அப்பொழுது அழுக்கு நிறைந்த பொன் கட்டியை நெருப்பில் காய்ச்சிச்சுத்தம் செய்து எடுத்தான தட்டான். அதைப்பார்த்துக் கொண்டேயிருந்த சொக்கன் மனதில் ஒரு யோசனை தோன்றிற்று. உடனே அவன் முகம் மலர்ந்தது.

சொக்கன் வண்டியை ஓட்டிக் கொண்டு நடுரஸ்தாவிற்கு வந்தான். மூட்டைகளை இறக்கிக் கீழே வைத்து தீப்பெட்டியை எடுத்து ஒரு குச்சியைக் கிழித்துப் பஞ்சு மூட்டைகளைக் கொளுத்தினான். தட்டான் பொன்னை நெருப்பில் காய்ச்சினான். அது சுத்தமாயிற்று. அதைப் போலவே தன் பஞ்சும் சுத்தமாகி விடும் என்று எண்ணினான் சொக்கன். ஆனால் ஐயோ! பரிதாபம்! எல்லாப்பஞ்சும் சாக்குடன் எரிந்து சாம்பலாயிற்று. சொக்கன் வீட்டிற்குப்போய் தாய்க்கு என்ன பதில் சொல்லுவதென்று ஏங்கி மரத்தடியில் உட்கார்ந்து ஓவென்று அழுதான்.

குழந்தைகளே! சொக்கனைப் போல் அசட்டுத்தனமான காரியம் யாராவது செய்வார்களா? அவன் அப்படிச் செய்ததற்கு என்ன காரணம்? படிப்பில்லாததுதான். அதனால்தான் சிறுவயதில் பெற்றோர் சொல்வதைக்கேட்டு ஒழுங்காகப் படிக்கவேண்டும்.

நாட்டுப் பாடல்கள்

வயல்வெளிகளில் நாற்றுநடவு முதலிய வேலைகள் செய்யும் ஸ்திரீகள் ஏதோ பாடுகிறார்களே, என்ன பாடுகிறார்கள்? சற்று நின்று கேளுங்கள்!

பாரவண்டிகளில் பெரிய சுமைகளையும், மரங்களையும் ஏற்றும் போதும் இறக்கும்போதும் என்னவோ பாடுகிறார்களே, அதையும் கவனியுங்கள்!

அதோ ஏற்றம் இறைக்கிறார்களே, அவர்கள் என்ன பாடிக்கொண்டிருக்கிறார்கள்? ஆஹா! எவ்வளவு இன்பமான கானம்! எப்படி மெய்மறந்து பாடுகிறார்கள்!

ஏன், அவர்களை அணுகி அந்த நாட்டுப் பாடல்களைக் கேட்டு எழுதி யனுப்புகிறீர்களா? 'பாரதமணி' அப்பாடல்களைத் தமிழ் இலக்கிய உலகில் ஒளி பெருக்க விரும்புகிறது.

ஆசிரியர்.

மதிப்புரை

ஒலியும் ஒளியும்:—

ஆசிரியர்: ஆர். கே. விசுவனாதன், எம்.ஏ.

கிடைக்குமிடம்:—

ஆர். கே. விசுவனாதன், எம். ஏ.
பௌதிக ஆசிரியர்,
அண்ணாமலை சர்வகலாசாலை,
அண்ணாமலைநகர்.

தமிழில் உயர்தரப் படிப்பிற்கு நூல்கள் எழுதுவது கஷ்டம், இயலாது என்றெல்லாம் நம்மக்கள் வாதம்புரியும் தற்சமயத்தில் இனிய தமிழில் எளிய நடையில் பௌதிக சாஸ்திரத்தின் உயர்ந்த விஷயங்களை ஆய்வுகளச் சோதனைகளோடு நில்லாமல் அன்றாட வாழ்க்கையில் காணப்படும் திருஷ்டாந்தங்களையும் எடுத்துக்காட்டி நிரூபித்து பாமர மக்களும் ஆவலுடன் புரிந்துகொள்ளும் முறையில் எழுதியிருக்கிறார். இப் புத்தகத்தில் ஒலி, ஒளி இவைகள்பால் தோன்றும் வியக்கத்தக்க விநோதங்கள், அவைகளை விஞ்ஞானிகள் எவ்விதம் ஆராய்ச்சி செய்து நிரூபித்தனர் என்றும் அவர்கள் சிலரின் வாழ்க்கையில் நடந்த ரஸமான சம்பவங்களையும் ஆங்காங்கு அறிவித்து வாசகர்கள் தாங்களும் விஞ்ஞானிகளாகவோ, ஆராய்ச்சிக்காரர்களாகவோ ஆக ஆவல் கொள்ளுமாறு செய்திருக்கிறார். முக்யமாக மின்சார ஆராய்ச்சியின் சரிதம் அதில் ஈடுபட்ட விஞ்ஞானிகளின் குறிப்பு, மின்சாரத்தின் தற்காலத்திய உபயோகங்கள் இவைகள் எல்லாம் இந்நூலின் ஒருபாகமாக விளங்குகின்றன. மேலும் மாக்ஸ்வேல் என்ற விஞ்ஞானியின் வாழ்க்கைக் குறிப்பு ஒன்று இதில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்நூல் வெளியிடுவதற்கு பொருளுதவி செய்த ஸ்ரீலஸ்ரீ தர்மபுரம் ஆதீனகர்த்தா அவர்களும், அவர்போன்ற மற்ற மடாதிபதிகளும் இதுபோன்ற உயர்ந்த நூல்கள் தமிழில் வெளிவர மேன்மேலும் உதவவேண்டியது அவசியமென இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது. உயர்தரப்படிப்பு மாணவர்களும், மற்றும் உலகியல் ஆர்வம் உள்ள பொதுமக்கள் யாவரும் இது போன்ற நூல்களைப்படித்தறிய வேண்டியது அவசியமாகும். இதன்விலை ரூ.1-8-0

ஸ்ரீராமாவதாரம்.—

ஆசிரியர்: வே. நாராயணன், M.A., M.L.,
11, மரேஸ்கேட் ரோடு, மதராஸ்.

ரூபம், நாமம், ஸ்பரிசம் ஔதாரியம் முதலான குணங்களால் பஞ்சேந்திரியங்களையும் ஒருங்கே வசிகரிக்கும் வன்மை வாய்ந்த ஸ்ரீ ராமனின் சரித்திரமென்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படியான ஸர்வ மங்கள சம்பத்துக்களையுடைய ஸ்ரீராமனுடைய அவதாரம் திருநாமம், ஸ்பர்சம், சரித்திரம் இவைகளைப்பற்றி மனதினால் தியானிப்பதாலும் ஸதா பஜிப்பதாலும், வால்மீகர், அகஸ்தியர் பரத்வாஜர் கௌசிகர் முதலான முனிபுங்கவர்களும் மற்றும் ஆழ்வாராதிகளும் அடைந்த பேரின்பமும், அடைவதாலான மகிமை — இவையெல்லாம் தெளிவான நடையில் நன்கே எழுதப்பட்டிருக்கின்றன.

திருமுருகாற்றுப்படை பொழிப்பு:—

(இயற்றியவர் என். எஸ். இராமச்சந்திரய்யர், B. A. L. T.) நம் தமிழ் நாட்டில் எங்கும் தொன்றுதொட்டுச் சிறந்து விளங்கிவரும் குமரக்கடவுளைப் பற்றி அநேக பக்தர்கள் கவிதைகள், வெண்பாக்கள், பாசுரங்கள், கலித்தொகை முதலியன பல இயற்றியுள்ளனர். அவைகளில் எங்கும் என்றும் தலைசிறந்து விளங்கும் 'திருமுருகாற்றுப்படை' என்ற பிரபந்தத்தை நெற்றிக்கண்களைக் காட்டினும் குற்றம் குற்றமே என்று வாதுபுரிந்த கடைச்சங்கத் தமிழ்புலவர் நக்கீரனார் அருளிச்செய்தார். அதில் முருகவேள் யார்—எத்தன்மையவர்—எங்குளர் என்றும், இப்பிரபந்தத்தை பாராயணம் செய்தால் வியாதி, வறுமை, மகப்பேறின்மை முதலான துன்பங்கள் நீங்கப்பெறுவர் என்றும்

கண்டிருப்பது முக்காலும் உண்மை—அனுபவமும் ஆகும்—ஆதலின் அதனைப் பொருள்பட அறிவதன் பொருட்டு நெறிதவறாது பதம்பதங்களாகப் பிரித்து ஆங்காங்கு பொழிப்பு எழுதி ஆசிரியர் திறம்பட தொண்டாற்றியிருக்கிறார். இவ் வழகிய முதல்நூல் ஒவ்வொரு தமிழன் பன் வீட்டிலும் இருக்கவேண்டியது அவசியம். நிற்க இந்நூலின் முகப்பில் ஸ்ரீபகவான் ரமண மகரிஷி அவர்களின் முகவுரை வடமொழியிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருக்கிறது.

சுப்ரமண்ய புஜங்கம்-தக்ஷிணா மூர்த்தி அஷ்டகம் தமிழ்மாலை.

இப் பாமாலைத்தொகுதி ஸ்ரீ சங்கர பகவத் பாதாசாரியர் அவர்களால் வடமொழியில் அருளிச்செய்யப்பட்டது. ஆசிரியர் N. S. இராமச்சந்திரய்யர் அவர்கள் தமிழில் பொருள் பிறழாத செய்யுட்களாகச் செய்து, வடமொழி மூலத்தைநாகரி, கிரந்தலிபிகளிலும் பதிப்பித்திருக்கிறார். பாராயணம் செய்தால் மிகப்பலன்கள் உண்டு என்பது அநுபவர்.

மேற்கண்ட இரண்டுநூல்களும் ஸ்கந்தசஷ்டி வெளியீடுகளாக பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொன்றின் விலை அணா 4.

கிடைக்குமிடம்:—

N. S. இராமச்சந்திரய்யர், B.A.,L.T.,
ஸ்கந்த விலாஸம், நன்னிலம்.

உலக விவகாரங்களை விளக்கும் ஆக்ஸ்போர்டு சிறுநூல்கள்.

(1) ஹிட்லர் யார்:
(By R. C. K. Ensor)

(2) நாஜி ஆட்சியில் தொழிலாளர் கதி
(By Dr. W. A. Robson)

(3) இந்தியா (By L.F.R. Williams)

(4) யுத்தப்படங்கள்

மேற்கூறிய சிறு நூல் தொகுதியை தேர்ந்த ஆசிரியர்களால் சிறந்த முறையில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுஆக்ஸ் போர்டு யூனிவர்ஸிடி பிரஸ்ஸால் தமிழில் வெளியிடப்பட்டிருக்கிறது. உலக விவகாரங்களை ஓரளவு தெளிவுபடுத்த மிகுந்தசிரமம் எடுத்துக்கொண்டிருக்கின்றனர். சிறுவர்கள் வாசித்து அறிந்து கொள்ளமிகவும் பயன்படும்.

ஒவ்வொன்றும் விலை அணா 3.

கிடைக்குமிடம்:—

ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடி பிரஸ்,
மதராஸ்.

—வெ. சுப்ரமணியம்.

குறிப்பு

விமரிசனத்திற்காக புஸ்தகங்கள் அனுப்புபவர்கள் இரண்டு பிரதிகள் அனுப்பக் கோருகிறோம். அவ்வாறு அனுப்பாவிடில் விமரிசனம் செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ப—ர்.